Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 153 • 19.08.2018

இலங்கையின்
முதல் தர தமிழ்
வார இதழில் உங்கள்
வணிக விளம்பரங்கள்
நியாயமான விலைகளில்
இடம்பெற வேண்டுமா
தொடர்புகளுக்கு
0768255563, 0214927561
தீபம் எப்பொழுதும் உங்களுக்கான
தன்னிகரில்லா சேவையை வழங்க முன்னிற்கும்



பலி கேட்கும் மோமோ!



எம்.ஜி.ஆர் மேல் போடப்பட்ட வழக்கு
புதிய தொடர்



## மாவைக்கு ரெட் சிக்னல் கொடுத்தாரா சம்பந்தன்?

தீவக வலயத்தின் தீராத சிக்கல்!

விடுதலைப்புலிகளின் ஆறாவது மர்ம நபர்!



## இராணுவத்தை ஊடறுத்து நுழைந்த சாள்ஸ் அன்ரனி
திரும்பி வந்தது ஏன் தெரியுமா?

கிளிநொச்சி கனகபுரம் வீதியில் குடும்பத்துடன் சுவைத்து மகிழ்ந்திட
YARL AHI Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
ஒருமுறை விஜயம் செய்து
சுவைத்துப் பாருங்கள்
இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328
திருமணநாள் மற்றும் பிறந்தநாள்
பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும் ஏனைய
விழாக்களுக்கும் வாகன வசதியுடன் வழங்கப்படும்.
குறிப்பு : மேலதிக விபரங்களை அறிந்திட
www.yarl ahi icecream.comஐ பார்வையிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நோர்சி மீடியா நிறுவனத்தின்

- தீபம் தொலைக்காட்சி
- தீபம் வார இதழ்
- தீபம் இணையத்தளம் (www.deepamtv.asia)


ஆகிய ஊடகங்களில் உங்கள் பிரதேச செய்திகள், ஆலய நிகழ்வுகள், விளையாட்டு நிழ்வுகள் போன்றவை இடம்பெறவேண்டுமெனில்



தொடர்புகளுக்கு
**தீபம்**
989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
நல்லூர், யாழ்ப்பாணம்.
(கல்வியங்காடு இலங்கை வங்கி கட்டிடத்தொகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருடன்

# மாவைக்கு ரெட் சிக்னல் கொடுத்தாரா சம்பந்தன்?

## கருடன் பக்கம்



மாகாணசபை தேர்தல்கள் எந்த முறையில் நடப்பது என்பதில் கட்சிகளிற்குள் கருத்தொற்றுமை இல்லையென டிவியில் செய்தி போய்க் கொண்டிருந்தது. வந்த கருடர் அதையே பார்த்தபடி நின்றார்.

"என்ன கருடரே... உங்கே பார்த்து விட்டு இங்கே அடித்து விடப் போகிறீரோ" என சீண்டினோம்.

"இல்லையில்லை... பலநாள் சங்கதிதானே இது. இப்போது புதிதாக ஏதும் விசயம் வைத்திருக்கிறார்களா என்று பார்த்தேன். புதிதாக எதையும் சொல்லவில்லை. ஆனால் நான் சில விசயம் வைத்திருக்கிறேன்" என்றார்.

"அதற்காகத்தானே உம்மை அழைக்கிறோம். விசயத்தை சொல்லும்"

"பழைய முறையில் தேர்தல் நடப்பதைதான் அனேகமானவர்கள் விரும்புகிறார்கள். இதில் லேட்டஸ்ட்டாக இணைந்திருப்பவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினர். புதிய முறையில் நடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பட்ட சீரழிவு போதுமென கூட்டமைப்பின் தலைவர்கள் விரும்புகிறார்கள். பழைய முறையில் நடப்பதைதான் டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன் போன்ற ஏனைய சிறுபான்மை கட்சி தலைவர்களும் விரும்புகிறார்கள்.

'கடந்தவாரம் மனோ கணேசன், டக்ளஸ் தேவானந்தா, ரவூப் ஹக்கீம் ஆகியோர் மஹிந்த ராஜபக்சவை சந்தித்து பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு ஆதரவளிக்கும்படி கேட்டுள்ளார்கள். இப்போதைய நிலைமையில் பழைய முறை என்றாலும் சரி, புதிய முறை என்றாலும் சரி எப்படியாவது உடனே தேர்தலை நடத்துங்கள் என்ற நிலைப்பாட்டில் தான் மஹிந்த ராஜபக்ச இருக்கிறார். பழைய முறையை ஆதரிக்கலாம், ஆனால் உடனடியாக தேர்தலை நடத்த நீங்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ச கூறியிருக்கிறார். இதன்பின்னர் இவர்கள் பிரதமரை சந்தித்து பழைய முறையிலேயே தேர்தலை நடத்த வேண்டுமென கேட்டுள்ளார்கள்.

பழைய முறையிலேயே தேர்தலை நடத்த கோரலாமென தமிழ் தேசிய கூட்டமைப்பும் கிட்டத்தட்ட முடிவெடுத்து விட்டதாக தெரிகிறது. இன்னும் பகிரங்கமாக அறிவிக்கப்படா விட்டாலும், கூட்டமைப்பின் எல்லா தலைவர்களும் அந்த அப்பிராயத்தில்தான் இருக்கிறார்கள்"

"எந்த முறையில் தேர்தல் நடக்க வாய்ப்பிருக்கிறது?"

"எந்த முறையில் தேர்தல் நடப்பதென்ற முடிவிற்கு வருவதற்கு முன் பெரிய பிரளயத்திற்கு வாய்ப்பிருக்கிறது. அமைச்சர் பைசர் முஸ்தபா பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார், புதிய முறையில்தான் மாகாணசபை தேர்தல் என்று. எந்த முறையில் தேர்தல் நடப்பதென்பதிலேயே நிச்சயம் சிக்கல் வரும்"

"கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் ஆசன விசயத்தில் பெரிய பில்டப் எல்லாம் செய்தீரே... அது சப் என்று அடங்கி விட்டதே. என்ன நடந்தது அந்த விசயத்தில்?"

"கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தை பற்றித்தான் கேட்கிறீர்கள் என நினைக்கிறேன். தேசியப்பட்டியல் விசயத்தில் நான் எந்த பில்டப் உம் செய்யவில்லை. ரெலோ எதை செய்ததோ, அதை அப்படியே சொன்னேன். ரெலோ கொஞ்சம் ஓவராகவே பில்டப் கொடுக்கிறதோ என்று சந்தேகப்படுவதாக ஏற்கனவே சொல்லியிருந்தேன். அவர்கள் கொடுத்த பில்டப் என்னவோ, நடந்தது என்னவோவாகத்தான் முடிந்திருக்கிறது.

அது ரெலோவிற்குள்ளும் பயங்கர அதிருப்தியை கிளப்பியுள்ளது. 10ம் திகதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் முன் தேசியப்பட்டியல் நியமனத்தை பற்றி ஆராய்ந்து முடிவெடுத்து, 10ம் திகதி எமக்கு கூட்டத்தில் சொல்லிவிட வேண்டுமென ரெலோ, ஏற்கனவே யூலை 28ம் திகதி திருகோணமலையில் சம்பந்தன் வீட்டில் நடந்த சந்திப்பில் கூறியிருந்தது. பின்னர் ரெலோ தலைமைக்குழு கூட்டத்திலும் இதை பிரஸ்தாபித்து, 10ம் திகதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தேசியப் பட்டியல் நியமனத்தை எடுத்துக் கொண்டு வருகிறோம் என தலைவர்கள் கூறியிருந்தார்கள்.

ஆனால் 10ம் திகதி எதுவுமே நடக்கவில்லை. இப்படியான விசயங்களை கையாள்வதில் சம்பந்தன் பழம் தின்று கொட்டை போட்டவர். தமிழரசுக்கட்சிக்குள் வேறு யாரும் கையாண்டிருந்தால் நிச்சயம் சிக்கலாகியிருக்கும். அதனால்தான் மற்றைய விசயங்களை போல, கட்சிகளே பேசி முடிவெடுங்கள் என விட்டுவிடாமல் தானே விசயத்தை கையாண்டார். தேசியப்பட்டியல் நியமனம் என ரெலோ தொடங்கும்போதே, 'ஓமோம் தம்பி. அந்த விசயம் கனகாலமாக இழுபட்டபடியிருக்கிறது. அதை கட்டாயம் பேசி தீர்க்க வேண்டும். நாங்கள் செய்வோம்' என முடித்து விட்டார்.

ரெலோ தரப்பும் பல விதமாக சுற்றிசுற்றிப் பேசிப் பார்த்தார்கள். 'ஓம் தம்பி... நாங்கள் அதை பேசி தீர்ப்போம்' என முடித்து விட்டார்.

ஒரு கட்டத்தில் ரெலோ தரப்பு, 'அடுத்த தலைமைக்குழு கூட்டத்தில் இதன் முடிவை அறிவிப்பதாக சொல்லிவிட்டோம். இப்போது நாங்கள் என்ன செய்வது?' என அப்பாவியாக கேட்டிருக்கிறார்கள். அதற்கும் 'ஓம் தம்பி பேசித் தீர்ப்போம்' என கச்சிதமாக காய்வெட்டி விட்டார் சம்பந்தன்.

கூட்டம் முடிந்ததும் ரெலோ கட்சி பிரமுகர்களிற்குள் நடந்ததை பகிர, அவர்கள் கட்சி தலைமையில் பயங்கர அதிருப்தியில் இருக்கிறார்கள். 'தலைமைக்குழுவில் வாய்ப்பந்தல் போட்டுவிட்டு, ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பம்மிக் கொண்டு இருந்து விட்டு வந்திருக்கிறார்கள். 10ம் திகதிக்குள் தேசியப்பட்டியல் நியமனம் கிடைக்காவிட்டால், மாற்று வழியை யோசிப்போம் என்றும் வெருட்டல் கொடுத்து பார்த்தோம். பலனில்லை. இப்படித்தான் உள்ளூராட்சிசபை தேர்தல் சமயத்தில் கூட்டமைப்பை விட்டு வெளியில் செல்கிறோம் என அறிக்கை விட்டோம். பின்னர் அடங்கி விட்டோம். இப்படியே தொடர்ந்து நடந்தால், நாளைக்கு சீரியசாக ஒரு அறிவித்தலை விட்டால் கூட மக்கள் காறித் துப்புவார்கள்' என கொந்தளித்தார்கள் சில இரண்டாம்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை தலைவர்கள்."

"ரெலோவிற்கு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைக்குமா?"

"இதற்கு சரியான பதில் 'வரும். ஆனால் வராது' என்பதுதான். தேசியப்பட்டியல் எம்.பிகளில் மாற்றம் செய்வதில் உள்ள சிக்கல்களை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதனால் இப்போதைக்கு அப்படி நடக்க வாய்ப்பில்லை"

"சரி, கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் வேறு என்னவெல்லாம் நடந்தது?"

"அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதுதான் முதலில் பேசப்பட்டது. கடந்த மாகாணசபை தேர்தலில் ரெலோ, புளொட் கட்சி

'இந்த விசயத்தை ஒளிந்து, மறைந்து விளையாட்டுத்தனமாக பேசிக் கொண்டிருக்க முடியாது. அப்படி செய்து, விசயத்தை இழுத்தடித்துக் கொண்டு போவது இனத்திற்கும் நல்லதல்ல. கூட்டமைப்பிற்கும் நல்லதல்ல. சில விசயங்களை வெளிப்படையாக சொல்கிறோம். இப்போதைய நிலையில் மாகாணசபை தேர்தலில் விக்னேஸ்வரனை வெளியில் விட்டால் அவர் தனித்து போட்டியிட்டால் தமிழ் தேசிய வாக்குகள் சிதறும். நிச்சயம் கூட்டமைப்பிற்கு பேரிடியாக இருக்கும். விக்னேஸ்வரனிற்கு மக்கள் ஆதரவு இப்போதுமுள்ளது. அவருக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. வெளியில் ஒரு கூட்டணிக்கு முயற்சி நடக்கிறது.

விக்னேஸ்வரனிற்கு உள்ள சாதகமான அபிப்பிராயங்களை பற்றி ரெலோ, புளொட் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது, 'ஏன் விக்னேஸ்வரனிற்கு சவாலளிக்ககூடிய வேட்பாளர் ஒருவரை வெளியில் கண்டுபிடிக்க முடியாதா?' என கேட்டார். மாவை தரப்பிற்கு இந்த கேள்வி ஒரு ரெட் சிக்னலாகவும் இருக்கலாம். சம்பந்தரின் லிஸ்றில் அவர் முன்வரிசையில் இருக்கிறாரா என்ற சந்தேகத்தை இந்த கேள்வி ஏற்படுத்தியிருக்கிறது."


"டெனீஸ்வரன் விவகாரம் எப்படியிருக்கிறது?"

"இதுவும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பேசப்பட்டது. சிவாஜிலிங்கம் கொஞ்சம் சீரியஸாகவே இதை

நினைக்கிறார்கள்' என ரெலோ, புளொட் தலைவர்கள் இராஜதந்திரமாக பேசினார்கள். நீங்கள் தலையிட்டு, இந்த விசயத்தை முடித்து வைக்க வேண்டுமென அவர்கள் கேட்டார்கள்.

ஒரு நமுட்டு சிரிப்புடன் சம்பந்தர் கேட்டுக் கொண்டிருந்து விட்டு, 'இந்த விசயம் நீதிமன்றத்தில் என்ன நிலைமையில் இருக்கிறதென எனக்குத் தெரியவில்லை. அதை நான் கதைத்து பார்க்கிறேன். ஆனால், நீதிமன்ற அவமதிப்பு வழக்கானால் விசயம் கொஞ்சம் கஸ்டம்தான்' என்று பதிலளித்தார்.

இந்த சமயத்தில்தான் சிவாஜிலிங்கத்தின் அக்மார்க் ஸ்டைல் வெளிப்பட்டது. 'என்ன ஐயா, கொழும்பில் சட்டத்தரணி கனகஈஸ்வரன் வீட்டில் நீங்களும், விக்னேஸ்வரனும் அடிக்கடி சந்தித்து கதைக்கிறியளாம்... இதையெல்லாம் கதைக்காமல், அப்படி எதைப்பற்றி கதைக்கிறியள்' என கேட்டார். உடனே மாவை சேனாதிராசா 'அதைத்தான் நானும் தலைவரிடம் பலமுறை கேட்டு விட்டேன். அவர் பதில் தரவேயில்லை' என ஒரு குண்டை போட்டார். சம்பந்தர் வழக்கமான, சிரிப்புடன் அதை கடந்து சென்று விட்டார்.



நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முதலமைச்சரிற்கு தொஞ்சம் சிக்கலை கொடுக்கலாமென்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் முதலமைச்சர் நேரில் ஆஜராக வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவு வழங்கப்பட்ட அன்று, முதலமைச்சர் கொஞ்சம் அப்செற் ஆக இருந்ததாக சொல்கிறார்கள்.

மதியத்திற்கு அண்மையாக நீதிமன்ற உத்தரவு முதலமைச்சருக்கு சொல்லப்பட்டது. பின்னர் இரவு வரை சட்டத்தரணிகளுடன் தொலைபேசியில் தொடர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். நீண்ட ஆலோசனையால் தளர்வான நிலையில், வேறு யாருடனும் பேசாமல் உறக்கத்திற்கு சென்று விட்டார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முதலமைச்சரை கொஞ்சம் ஆட்டிப்படைத்து விட்டது என்றுதான் அவருக்கு நெருக்கமானவர்கள் சொல்கிறார்கள்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிக்கிக் கொள்வாரா அல்லது வேறு ஏதேனும் மாற்றங்கள் நிகழுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்" என்றபடி பறந்து சென்றார் கருடர்.

களின் தலைவர்கள் மாவை சேனாதிராசாவையே ஆதரித்தனர். 'கடந்த முறை விட்ட தவறை இம்முறை விடப்போவதில்லை, கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் என்னை வேட்பாளராகும்படி கேட்டால், நான் இம்முறை களமிறங்குவேன்' என மாவை சேனாதிராசா இம்முறை அறிவித்து, முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்க போகிறேன் என்பதை சூசகமாக உணர்த்தியிருந்தார். ரெலோ, புளொட் கட்சிகள் தன்னை ஆதரிக்கலாமென மாவை சேனாதிராசாவும் இதுவரை நினைத்திருந்தார். ஆனால், முதன்முறையாக 10ம் திகதி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில், 'எங்கள் ஆதரவு உங்களிற்கு இல்லை' என இரண்டு கட்சி தலைவர்களும் ஓரளவு வெளிப்படையாக சொல்லி விட்டார்கள்.

எங்களையும் கேட்கிறார்கள். ஆனால் நாம் அதைப்பற்றி யோசிக்கவில்லை, இதையெல்லாம் சரிசெய்ய விக்னேஸ்வரனையே முதலமைச்சர் வேட்பாளராக்குவதுதான் சரி' என ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டார்கள்.

"இதற்கு மாவையின் ரியாக்‌ஷன் எப்படியிருந்தது?"

"வாக்கு பிரியும் என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால், விக்னேஸ்வரன் கூட்டமைப்பிற்கு செய்த துரோகங்களை மறந்து விட்டீர்களா? என சென்டிமென்டாக பங்காளி தலைவர்களை அடித்தார். அவர்கள் அசரவில்லை. இறுதியில் 'நாங்கள் பிரச்சாரத்தை ஆரம்பித்தால் கடைசி நேரத்தில் மக்கள் மாறுவார்கள்' என மாவை அபிப்பிராயப்பட்டார்.

ஆனால் இதில் முக்கியமான விசயம், சம்பந்தரின் ஒரு கேள்வி.

பேசினார். ரெலோ ஏற்பாடு செய்திருந்த வெலிக்கடை படுகொலை நினைவில் உரையாற்றிய வரதராஜபெருமாள், வடமாகாணசபையை கோமாளிகள் என கூறியிருந்தார். இதை குறிப்பிட்டு பேசிய சிவாஜிலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்கள் 38 பேரையும்தான் அது குறிக்கிறது, மாகாணசபைக்குள் நடக்கும் தேவையற்ற குழப்பங்கள்தான் இப்படியான அபிப்பிராயத்தை ஏற்படுத்துகிறது, டெனீஸ்வரன் வழக்கின் பின்னர் மக்களின் அதிருப்தி அதிகரித்துள்ளது என்றார்.

டெனீஸ்வரன் வழக்கின் பின்னால் தமிழரசுக்கட்சிதான் இருக்கிறது என பகிரங்கமாகவே சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார். 'டெனீஸ்வரன் வழக்கின் பின்னால் தமிழரசுக்கட்சி பிரமுகர்கள் இருப்பதாக மக்கள்

## நியூஸ் பிட்ஸ்

தீருவிலில் சிதைக்கப்பட்டுள்ள புலேந்திரன், குமரப்பா ஆகியோரின் நினைவுத்தூபிக்கு பக்கத்தில், எல்லா இயக்கங்களில் இருந்தும் உயிரிழந்தவர்களின் நினைவாக நினைவுத்தூபி ஒன்றை அமைக்க வல்வெட்டித்துறை நகரசபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. சிவாஜிலிங்கம்தான் இந்த தீர்மானத்தின் பின்னணியில் இருந்தார். இந்த தீர்மானம் சில இடங்களில் ஆதரவையும், பல இடங்களில் எதிர்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. விசயத்தை கேள்விப்பட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்களை தொடர்பு கொண்டு, ஆர்ப்பாட்டமொன்று செய்வோமா என கேட்டுள்ளனர். நகரசபை உறுப்பினர்களும் சம்மதம் தெரிவிக்க, நீங்கள் ஆட்களை அழைத்து வருவீர்களா என முன்னணி தரப்பு கேட்டதாம். "இல்லையில்லை... நாங்கள் ஆட்களை அழைத்து வர முடியாது. விடுதலைப்புலிகளின் நினைவிடத்திற்காக ஆர்ப்பாட்டம் செய்தார்களென அவர்களை பாதுகாப்பு தரப்பு கைது செய்தால், நாங்கள் பதில் சொல்ல முடியாது. நாங்கள் வருகிறோம். நீங்களும் வாருங்கள்" என நகரசபை உறுப்பினர்கள் சொல்லியுள்ளனர். இந்த விசயத்தில் இப்படியுமொரு பக்கமிருப்பதை பின்னர்தான் உணர்ந்த முன்னணி, ஆர்ப்பாட்ட திட்டத்தை அப்படியே கைவிட்டு விட்டது!



நல்லூரில் திலீபனின் நினைவுத்தூபிக்கு யார் சுற்றுவேலி அமைத்தது என்று மாநகரசபையின் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களும் குடும்பப்படி சண்டையில் இறங்கியுள்ளனர். ஆனால் அதை இரண்டு தரப்பும் செய்யவில்லை. பல மாதங்களின் முன்னரேயே, கூட்டமைப்பு எம்.பி சிறீதரன் 2 இலட்சம் ரூபா ஒதுக்கினார். தூபியை புனரமைக்க என்றுதான் பணம் ஒதுக்கினார். உயர்பீடத்திலிருந்து மிரட்டல் வந்ததென அப்போது அதிகாரிகள் அதை செய்ய தயங்கிக் கொண்டிருந்தனர். யாழ் மாநகரசபை, நல்லூர் பிரதேசசெயலகம் இரண்டும் பந்தை மற்றவர் மேல் மாறிமாறி போட்டு, இறுதியில் யாழ் மாநகரசபையின் கைகளில் பந்து வந்து சேர்ந்திருந்தது. 2 இலட்சம் ரூபாவிற்கு சுற்றுவேலி தயாராக்கப்பட்டது. அப்போது ஆணையாளர் நிர்வாகத்தின் கீழேயே மாநகரசபை இயங்கியது. சுற்றுவேலியை திலீபனின் தூபியில் பொருத்த அவர்கள் தயங்கியபடியிருந்தார்கள். வடமாகாணசபையின் முக்கியஸ்தர் ஒருவரிடம் சென்று நிலைமையை சொல்லி ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். சுற்றுவேலியை பத்திரமாக வைத்திருங்கள். விரைவில் தேர்தல் நடக்கும். மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவாகுவார்கள். அவர்களிடம் இந்த விசயத்தை விட்டீர்கள் என்றால், முண்டியடித்துக் கொண்டுபோய் வைப்பார்கள் என ஆலோசனை கூறியிருக்கிறார். மாநகரசபையும் சுற்றுவேலியை பத்திரமாக, மாநகரசபையிலேயே வைத்திருந்தது. அப்போது அந்த பிரமுகர் சொன்னதை போல, பல மாதங்களின் முன்னர் தயாரிக்கப்பட்ட சுற்று வேலியை இப்போது கொண்டு சென்று வைத்துள்ளார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபம் குழு

வடக்கு மாகாணசபை தேர்தல் களம் எப்படியிருக்கும், யார் யார் வேட்பாளர்களாக களத்தில் இருப்பார்கள்... இதெல்லாவற்றையும் விட, தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யாராக இருப்பார்? என்ற தமிழ் மக்களின் "பெருங் கேள்விகளை" இந்த பகுதியில் தொடர்ந்து அலசி வருகிறோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என கடந்த வாரமும் அலசினோம். மாவை சேனாதிராசா, க.வி.விக்னேஸ்வரன் இருவருக்குமான சாதக பாதகங்கள், வாய்ப்புக்கள், புறச்சூழல் பற்றியெல்லாம் கடந்தவாரம் அலசினோம்.

விக்னேஸ்வரன் தனிவழி செல்வாரா? அதற்கான ஏது நிலைகள் தெரிகிறதா? என்பதை இந்த வாரம் அலசலாம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை விட்டு வெளியில் சென்று தனிக்கட்சியாகவோ, கூட்டணியாகவோ விக்னேஸ்வரன் செயற்படுவாரா என்று கேட்டால்... இன்றைய திகதில் ஆம் என்றும் பதிலளிக்கலாம். இல்லையென்றும் பதிலளிக்கலாம். ஏனென்றால் இரண்டுக்கும் வாய்ப்பான, குழப்பமா சூழ்நிலைதான் நிலவுகிறது.

பொதுவாகவே அரசுடன் இணக்கமான, போக்குடன் செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகளின் மீது மக்கள் மீது விமர்சனம் வருவது தமிழ் மரபு. என்ன நோக்கத்திற்காக இணைந்திருந்தாலும் இதுததான் வரலாறு. ஒரு காலத்தில் வெறும் அமைச்சர் பதவிக்காக மட்டும் அரசுடன் இணைந்திருந்த தமிழ் தரப்புக்கள் இருந்தன. இப்பொழுது கூட்டமைப்பு சொல்வதை போல, இனப்பிரச்சனை தீர்வு என்ற அவசியமான நோக்கத்திற்காக இணைந்திருந்தாலும், ஒரு கட்டத்தின் மேல் மக்களிற்கு விமர்சனம் அதிகரிக்கிறது.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரிந்ததற்கு பிரதான காரணங்களில் ஒன்று அரசுடன் அடையாளப்படுத்தப்பட்டது. அரசுடன் அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும், மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற முடியவில்லையென அவர்கள் நினைத்தார்கள். தீர்வு விசயத்தில் இறுக்கிப் பிடிப்பதற்காக, மற்ற விசயங்களை பற்றி அரசிற்கு அழுத்தம் கொடுக்காமலிருந்தது கூட்டமைப்பு. இந்த இடைவெளிக்குள் தேசிய கட்சிகள் இரண்டும் வசதியாக புகுந்து கொண்டுள்ளன.

உள்ளூராட்சி தேர்தலின் பின், நித்திரையிலிருந்து துடித்து பதைத்து எழும்பியதை போல, இந்த விசயத்தில் கூட்டமைப்பு அவதானம் செலுத்துகிறது. அரசாங்கத்துடன் பேசி அபிவிருத்தி திட்டங்கள், வேலை வாய்ப்பில் தமக்கான ஒதுக்கீடுகளை பெற்று வருகிறது.

அடுத்த வருட தொடக்கத்தில் மாகாணசபை தேர்தல் நடக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இன்னுமுள்ள நான்கு மாதங்களில், சரிந்த வாக்கு வங்கியை நிமிர்த்துவதில் கூட்டமைப்பு முயற்சிக்கிறது. ஆனால், இந்த காலப்பகுதியில் அரசியல் தீர்வு முயற்சியில் தெளிவான முன்னகர்வொன்று சாத்தியமில்லாமல், கூட்டமைப்பின் வாக்கு வங்கியை செங்குத்தாக நிமிர்த்தி சரி செய்வது சாத்தியமில்லாதது.

கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரிசெய்யப்படாத வரையும், விக்னேஸ்வரன் அல்லது வெளியில்





எப்படியிருக்கும் மாகாணசபை தேர்தல் களம்? 06

# தனித்து செல்வாரா விக்னேஸ்வரன்?

## கூட்டணி சிக்கல்களும் கள நிலவரமும்

உருவாகும் கூட்டணி, தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு நெருக்கடியை ஏற்படுத்துவதாகத்தான் இருக்கும். அந்த கூட்டணிக்கு விக்னேஸ்வரன் தலைமையேற்றால், கூட்டமைப்பிற்கு இரட்டிப்பு நெருக்கடி ஏற்படும். இதுதான் கள யதார்த்தம்.

எனவே, இதே அரசியல் சூழல் நீடிக்கும் நிலைமையில் இன்னொரு அணியை உருவாக்குவதில் விக்னேஸ்வரனிற்கு அதிக தயக்கங்கள் இருக்க வாய்ப்பில்லை. சில புற அழுத்தங்கள் மற்றும் அவருக்கு மனரீதியாக ஏற்படக்கூடிய சில நெருக்கடிகளை தவிர்த்தால், அவர் இன்னொரு அணியை உருவாக்க பலமான வாய்ப்புக்கள் உள்ளன.

இன்னொரு அணியை உருவாக்குவதென்றால் விக்னேஸ்வரனிற்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தனிக்கட்சி அமைப்பது. அல்லது, இன்னொரு கட்சியின் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி நீண்டகாலமாக முதலமைச்சரிற்காக காத்திருக்கிறது. தமது கட்சி சின்னத்தில் அவர் தலைமையில் தேர்தலை சந்திக்க தயாரென பகிரங்கமாகவும் அறிவித்துவிட்டது. ஆனால் முதலமைச்சர் அந்த திசையில் அசைந்தும் கொடுக்கவில்லை. காரணம், அவரது எண்ணங்களிற்கும், தமிழ் மிதவாத தலைவர்களின் எண்ணங்களிற்குமிடையில் எந்த வேறுபாடும் கிடையாது.

தமிழ் தேசியம் என்பது மென்மையான தீவிர நிலைப்பாட்டை எடுக்கலாமே தவிர, கொஞ்சம் கறாரான வடிவங்களிற்கு செல்வதையும் அவர்கள் விரும்பமாட்டார்கள். 'தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தீவிரமான நிலைப்பாடுகளை முதலமைச்சர் அவ்வளவு சௌகரியமாக உணர வில்லையென்பதே உண்மை. அதே போல ஈ.பி.ஆர்.எல்.எவ் தொடர்பாகவும் அவ்வளவு சாதகமான எண்ணமிருப்பதாக தெரியவில்லை. மாறாக, ரெலோ, புளொட் இரண்டு தொடர்பிலும் சாதகமாக உணர்கிறார்.

முதலமைச்சரின் பிரதான தயக்கங்களில் ஒன்று இதுதான். கூட்டமைப்பை விட்டு வெளியில் வந்தால், எப்படியான கூட்டணி அமைப்பது? யார் உள்ளே? யார் வெளியே?

ஏற்கனவே கூட்டணி தொடர்பாக

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் தேசிய மக்கள் முன்னணி சில கறாரான நிலைப்பாடுகளை வைத்துள்ளது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் இரண்டையும் கூட்டணியில் இணைத்தால், தாங்கள் அதில் இணையப் போவதில்லையென முதலமைச்சரிடம் கூறிவிட்டார்கள். முதலமைச்சரை தம்மை நோக்கி வரவைப்பதற்கான தெளிவான வரைபடமொன்றை கிட்டத்தட்ட உருவாக்கி, முதலமைச்சரின் முன்பாக வைத்து விட்டது முன்னணி.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியை தவிர்த்தாலும், வெளியில் பரந்து பட்ட வலுவான கூட்டணியை உருவாக்க முடியாதென்பது முதலமைச்சரிற்கு தெரியும்.

அதே சமயத்தில், ரெலோ, புளொட் என்பன கூட்டமைப்பை விட்டு எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியில் வெளியேறி, முதலமைச்சர் தலைமையில் சிறிய கூட்டணி அமைக்கவும் தயாராக இல்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியை வெளியில் விட்டுவிட்டு, முதலமைச்சர், ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் என உருவாக்கப்படும் கூட்டணியும் தனித்து ஆட்சியமைக்க முடியாத கூட்டணியாக அமையும் என்பது ரெலோ, புளொட்டிற்கு தெரியும். ஆகவே, முதலமைச்சர் அமைக்கும் எந்த கூட்டணிக்கும் அவர்கள் செல்வார்கள் என்றில்லை.


இதுதான், இன்றைய கள நிலவரம்.

எதற்கும், ஒரு கட்சியை பதிவு செய்து, அல்லது ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட கட்சியை வாங்க முதலமைச்சர் விரும்புகிறார், முயற்சிக்கிறார். அடுத்த கட்ட நகர்வு எப்படியிருந்தாலும், அது சொந்த கட்சியின் ஊடாகவே செய்வதென முடிவு செய்துள்ளார். தனித்து களமிறங்குவதென்றாலும், தனது கட்சியுடன் மற்றவர்கள் கூட்டணி வைத்துக் கொள்ளலாம். தமிழ் தேசிய கூட்டமைப்பில் தொடர்வதென்றாலும், தனது புதிய கட்சியையும் அதில் பங்காளியாக்குவது என்பதுதான் முதலமைச்சரின் திட்டம்.

வடமாகாணசபை தேர்தலென்பது யாழ்ப்பாணத்திற்கு வெளியில் உள்ள நான்கு மாவட்டங்களையும் சேர்த்ததே. யாழ்ப்பாணத்தில் உள்ளதை போன்ற வலுவான ஆதரவுத்தளம் மற்றைய மாவட்டங்களிலும் உள்ளதா என்பதே முதலமைச்சர் தரப்பின் பிரதான சிக்கல். அந்த மாவட்டங்களில் வலுவான ஆதரவுள்ள அணிகளும் இதுவரை முதலமைச்சருடன் இல்லை. ரெலோ, புளொட்டை உள்ளீர்த்தால் அந்த சிக்கலை ஓரளவு சமாளிக்கலாம் என்றுதான் முதலமைச்சர் யோசிக்கிறார் போலுள்ளது. கிளிநொச்சிக்கு சிறீதரன் தவிர்ந்த வேறொரு தெரிவை ஆராய்வதாக தெரிகிறது. கிளிநொச்சியில் சிறிதரனை தவிர்ப்பதென்றால், சந்திரகுமார் தலைமையிலான அணியை உள்ளீர்க்க வேண்டும். அதற்கான வாய்ப்பும் இல்லாமலில்லை.

கூட்டணி அமைவதற்கான எப்படியான வாய்ப்புக்கள் உள்ளன என்பதை குறிப்பிட்டோம். ஆனால் இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், எல்லாமே ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த சங்கிலியை போன்றது. எந்த முனையில், எப்படியான நகர்வு முதலில் ஆரம்பிக்கும் என்பதை பொறுத்தே முதலமைச்சரின் தனி அணியினதும், கூட்டமைப்பிற்கான மாற்று அணிக்கான வாய்ப்பும் உள்ளது.

ஒருவேளை, கூட்டமைப்பிற்குள்ளேயே முதலமைச்சர் நீடிப்பார் எனில், மாற்று அணிக்கான வாய்ப்பு இருக்காது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனித்து களமிறங்கும். ஒருவேளை அப்படியொரு நிலைமை வந்தால், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் நிலைமைதான் தர்மசங்கடமாகும். கூட்டமைப்பிற்கு வெளியில் உள்ள தரப்புக்களையும் ஒன்றிணைத்தபடிதான், கூட்டமைப்பின் வேட்பாளர் ஆகுவேன் என்ற நிலைப்பாட்டை முதலமைச்சர் எடுப்பார் என நம்பகரமாக அறிய முடிகிறது. இதன்மூலம், கூட்டமைப்பிற்குள் மீண்டும் நுழைய ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்கு வாய்ப்பு வரும். ஆனால், கோபித்துக் கொண்டு போனவர்கள் எந்த முகத்துடன் திரும்பி வருவது?



இப்போதுள்ள நிலைமையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது முதலமைச்சர் வேட்பாளரை உடனடியாக அறிவிக்க வாய்ப்பில்லையென்றுதான் தெரிகிறது. ஏனெனில், மாகாணசபையின் பதவிக்காலம் முடிந்ததும், விக்னேஸ்வரன் என்ன செய்யப் போகிறார் என்பதை அவராகவே செய்யும் நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென கூட்டமைப்பு விரும்பும். முதலமைச்சரை கூட்டமைப்பாக வெளியில் அகற்றாமல், முதலமைச்சராக வெளியில் செல்லும் நிலைமையையே கூட்டமைப்பு விரும்பும். அதனால், தமது முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை வருட இறுதிவரை வெளியில் சொல்ல வாய்ப்பிருக்காது.

கூட்டமைப்பு தனது முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதை பகிரங்கப்படுத்தாத வரையும், கூட்டமைப்பிற்குள் உடைவு ஏற்பட வாய்ப்பில்லை. கூட்டமைப்பு முதலமைச்சர் வேட்பாளரை பகிரங்கப்படுத்தாத வரையும், முதலமைச்சரும் வெளியில் செல்வதில் சங்கடங்கள் உள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார், எப்படியான கூட்டணி அமையுமென்பதெல்லாம், கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற முடிவிலேயே தங்கியுள்ளது. அதை எப்பொழுது அறிவிப்பதென்பதிலும் கூட்டணி அமைவது தங்கியுள்ளது.

தமிழ் அரசியலரங்கை அதிகம் ஆட்டிப்படைக்கும், அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்ற கேள்வி, இதையொட்டி உருவாகும் அரசியல் மாற்றங்களையெல்லாம் தீர்மானிக்கும் ஒற்றை மனிதராக இரா.சம்பந்தனே இருக்கிறார். மாவையா, விக்னேஸ்வரனா என்ற முடிவை அவர் சடுதியாக எடுத்தால், மற்றையவர் அதிருப்தியடைந்து ஒதுங்கிச் செல்லலாமென்பதால் அவரால் சடுதியாக முடிவை அறிவிக்க முடியாமல் இருக்கலாம். இந்த இரண்டு தெரிவிற்கு அப்பாலும் ஒரு முகத்தை அவர் தேட முனையலாம். ஆனால், இப்போதைய நிலைமையில் விக்னேஸ்வரனை பகைத்து அவர் எந்த முடிவையும் எடுக்கமாட்டார் போலத்தான் தெரிகிறது. ●


# தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பிரச்சனை என்ன?



இங்கிலாந்து சுற்றுப் பயணத்திற்கு முன்னர் இந்திய அணி ஏகத்திற்கும் பில்டப் செய்யப்பட்டுள்ளது என இந்த பகுதியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஒரு வருடமாக உள்நாட்டில் ஆடி தரநிலையில் நம்பர் 1 ஆகியதுடன், வீரர்கள் சொந்த சாதனைகளையும் நிகழ்த்தினார்கள். விமர்சனமென்பது, கண்ணாடியை போன்றது. உள்ளதை உள்ளபடி காண்பிக்க வேண்டியது. இந்திய ஊடக கலாச்சாரத்தில் அப்படியான பண்பெதுவும் கிடையாது. பணத்தை வைத்து கட்டமைக்கப்படும் வித்தியாச கிரிக்கெட் கலாசாரத்தின் ஒரு அங்கமே, இந்திய கிரிக்கெட்டை விதந்தோதும் ஊடக கலாசாரம்.

இந்திய கிரிக்கெட்டின் உண்மையாக கண்ணாடியாக இங்கிலாந்து தொடர் அமைந்துள்ளது. முதலிரண்டு டெஸ்ட்களையும் இந்தியா இழந்துவிட்டது. அடுத்த மூன்று டெஸ்ட் நடக்கவுள்ள மைதானங்கள் அண்டர்சன், புரோட் கூட்டணியின் சொர்க்கபுரிகள். இந்தியாவின் வேகப்பந்து வீச்சு பலவீனத்திற்கு சிம்மசொப்பனமாக அமையும்.

இந்திய வீரர்கள் உத்திரீதியாக முதிர்ச்சியடைய முன்னரே இந்திய ஊடக கலாசாரத்தின் மூலம் பெரும் புகழையும், மமதையையும் பெற்றுவிட்டார்கள். இதை போகிற போக்கில்சொல்லவில்லை. ஆட்டத்தை நுணுக்கமாக கவனிப்பவர்களிற்கு புரியும்.

முதலிரண்டு டெஸ்டிலும் இங்கிலாந்தின் வேகப்பந்திற்கு எதிராக கிரீஸிற்குள் நின்று என்ன செய்ய வேண்டுமென்பது இந்தியர்களிற்கு தெரியவில்லை. அயல்நாட்டு பிட்ச்களில் back and across உத்திதான் பிரதானமானது. ஆனால் அதற்கு தைரியமும், தன்னம்பிக்கையும் அவசியம். முதலிரண்டு டெஸ்டிலும் அஸ்வின் மட்டுமே அதை பாவித்தார். மற்றைய எல்லா வீரர்களும், பந்தை கண்டதும் காலை நீட்டி எல்.பி ஆனார்கள். அல்லது எட்ஜ் ஆனார்கள்.

back and across ஐ சச்சின் தெண்டுல்கர், விரேந்திர சேவாக்கின் அயல்நாட்டு ஆட்டங்களை பார்த்தாலே கற்றுக்கொள்ளலாம். ஆனால், ரஷீட் பி சாஸ்திரி போன்ற பொம்மை பயிற்சியாளர்களை வைத்துக் கொண்டு, உடனடியாக உத்திரீதியில் மாற்றமடைய வேண்டுமென எதிர்பார்ப்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகுமென்பது தெரியவில்லை.

இந்தியாவிற்கு இந்த தொடரில் உள்ள முக்கிய பிரச்சனை தொடக்க வீரர்கள். இந்த ஆண்டு முழுவதும் இந்திய தொடக்க வீரர்கள் வெளிநாட்டு தொடர்களில் 13 என்ற சராசரியைத்தான் வைத்துள்ளார்கள். முரளி விஜய், ராகுல் இருவருக்கும் உள்ள பெரிய மைனஸ் கிரீஸிற்குள் நகராத கால்கள். ஒருவகையில் ஐ.பி.எல் மரபினால் வந்த வினை. முதலிரண்டு டெஸ்டிலும் விஜய் உடைய நகராத கால் மைனஸை வைத்தே இங்கிலாந்து வீரர்கள் வீழ்த்தினார்கள். இந்த பிரச்சனையை இந்தியா எப்படி எதிர்கொள்ளுமென்றால், முரளி விஜய்யை உட்கார வைத்து, தவணை உள்ளே கொண்டு வருவார்கள். உத்திரீதியான குறைபாட்டில் விஜய் எப்படியோ, தவண் அதில் அண்ணன்!

ராகுல் ட்ராவிட் ஒரு காலத்தில் எப்படி மட்டை போட்டுக் கொண்டிருந்தாரோ, அப்படியே இப்போது புஜாரா மட்டை போடுகிறார். லோர்ட்ஸ் டெஸ்டில் இரண்டாவது இன்னிங்சில் இந்திய வீரர்கள் வருவதும் போவதுமாக இருக்க, அவர் மட்டும் 87 பந்துகளை சந்தித்தார். ஆனால் அது பெருமையில்லை. ஏனெனில் இயன் சப்பல் ஒருமுறை ட்ராவிட் பற்றி கூறியதை கூறுகிறோம். “கிரிக்கெட் என்பது துடுப்பாட்டக்காரர்கள் ரன் எடுக்க வேண்டும். பந்துவீச்சாளர்கள் விக்கெட் எடுக்க வேண்டும் என்ற இரு அடிப்படையில்தான் இயங்குகிறது. மட்டையை வைத்துக் கொண்டு ஒன்றுமே செய்யாமல் நான் 5 மணி நேரம் ஆடினேன், ஆனால் அணி 100 ரன்களில் சுருண்டது என்றால், அதில் எந்த பயனுமில்லையென்பதை யாராவது ட்ராவிட்டிடம் சொல்லுங்கள்” என்றார். அதையே யாராவது புஜாராவிடம் சொல்லிவிடுங்கள்!


அறிமுக டெஸ்டில் இருந்து அதிகமுறை போல்ட் ஆன வீரர் என்ற எதிர்மறை சாதனைக்கு புஜாரா சொந்தக்காரன் ஆகியுள்ளார். இதற்கு ஒரே காரணம் கிரீஸை விட்டு நகராத அவரது பலவீனம். கால்களை அவரால் சரியாக நகர்த்த முடியாது. எப்பொழுதும் அரைகுறையாக நகர்த்துவார். உபகண்ட ஆடுகளங்களில் பந்து மெதுவாக வரும்போது, இந்த உத்திகுறைபாடு வெளித்தெரிவதில்லை. அதேபோல துடுப்பை பந்துக்கு விரைவாக இறக்க முடியாமை அடுத்த குறைபாடு.

விராட் கோலி முதல் டெஸ்ட், முதல் இன்னிங்ஸில் சதமடித்தார். ஆனால் அடுத்த மூன்று இன்னிங்ஸிலும் அருமையாக வோர்க் அவுட் செய்து அவரை வீழ்த்தினார்கள். கோலியின் பிரதான பலவீனம் ஓவ் திசையில் வெளிச்செல்லும் பந்துகள். இந்த தொடரின் முன்னரேயே சஞ்சய் மஞ்ரேக்கர் இதை விபரமாக சொல்லி, கோலி அங்கு மட்டையை உள்ளே வைத்திருக்க வேண்டுமென சொன்னார். ஆனால் கோலியின் ஈகோ அதை கேட்கவில்லை. விளைவு எட்டி பந்தை தொட்டார், மாட்டினார்!

தினேஷ் கார்த்திக் பற்றி கங்குலி சொல்லியிருந்தார் “அவர் வலைப் பயிற்சியில் ஆடியதை பார்த்தேன். மோசமான போர்மில் இருக்கிறார். வலையில் கூட அவரால் பந்துடன் மட்டையை தொடர்புபடுத்த முடியவில்லை” என்றார்.

இந்திய அணிக்கு அவசரமாக இடதுகை துடுப்பாட்டக்காரர் ஒருவர் தேவை. ரிஷப் பந்தை அணிக்குள் கொண்டு வர வேண்டுமென்பது கங்குலியின் ஆலோசனை.

இப்போதைய நிலை தொடரந்தால், துடுப்பாட்ட உத்தியில் சடுதியான மாற்றங்கள் நிகழாவிட்டால், இந்தியாவிற்கு வைட் வோஷ் உதை விழுவது உறுதி!



# ஒன்றுக்கும் உதவாத வீரர்!

இந்தியா இங்கிலாந்து மோதிய லோர்ட்ஸ் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் தோல்வியடைந்தது. மொத்தமே இரண்டு நாள்தான். இந்தியாவின் கதையை காலி செய்தது இங்கிலாந்து. ஆனால் இதிலொரு சுவாரஸ்யம். இந்தியா பதினொரு வீரர்கள் ஆடினார்கள். இங்கிலாந்தில் பத்து வீரர்கள்தான் ஆடினார்கள் என்கிறன்றன புள்ளிவிபரங்கள்.

இதென்ன புதுக்கதையாக இருக்கிறதென யோசிக்கிறீர்களா?


விசயத்தை சொல்லி விடுகிறோம். கிரிக்கெட் ஆட்டத்தில் அணியிலுள்ள பதினொரு வீரர்களின் பங்களிப்பும் இருக்கும். ஒன்றில் துடுப்பாட்டத்தின் போது பங்களிப்பு இருக்கும். அல்லது பந்து வீச்சு, களத்தடுப்பில் இருக்கும். இது எதிலுமே பங்களிக்காத ஒருவர் இருக்கிறார். மொத்தமே இரண்டு நாளில், உலகின் நம்பர் 1 அணிக்கு உச்சந்தலை அடி கொடுத்த போட்டியில், இங்கிலாந்து வீரர் ஒருவர் துடுப்பாட்டம் செய்யவில்லை, பந்து வீசவில்லை, களத்தடுப்பில் பிடியெடுக்கவில்லை, ரன் அவுட் செய்யவில்லை. டெஸ்ட் போட்டி மொத்தத்திலும் கப்சிப் என இருந்துள்ளார் ஒருவர். அவர் அடில் ரஷீட்!

1974ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தியா சந்தித்த மிகப்பெரிய தோல்வி லோர்ட் தோல்வி. இந்த போட்டியிலேயே ரஷீட் விநோத சாதனையொன்றிற்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார். ஆடும் லெவனில் இருந்து, ஒன்றுமே செய்யாத வீரர் என வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்.

கடந்த 13 வருடங்களில், இப்படி ஒன்றுமே செய்யாத 14வது வீரராக ரஷீட் சாதித்துள்ளார். இங்கிலாந்தின் முதல் வீரர். ஸ்லிப்பில் நின்றிருந்தாலாவது பிடி வந்திருக்கும். அதை தவறவிட்டிருந்தால் கூட, அந்த வகையில் ஏதாவது பட்டியலில் இடம்பிடித்திருப்பார். ஆனால் இப்போது ஒன்றுமே செய்யாதவர் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார்.


இதற்கு முன்னர், இப்படி ஒன்றுமே செய்யாதவர்கள் பட்டியல் ஒன்றுள்ளது. பெர்சி சப்மென, பிரைன் வலன்ரைன், பில் ஜோன்சன் (இருமுறை), அர்ஜுன் கிரிபால் சிங், நெரிகெண்ராக்ரர், கிரைக்மெக்டர்மட், ஆசிப் முஜ்தபா, நீல் மெக்கன்சி, அஷ்வெல் பிரின்ஸ், காரெத் பெட்டி, ஜக் ருடோல்ப், விருத்திமன் சஹா, இப்போது அடில் ரஷீட்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியூசிலாந்து பிரதமர் ஜஸிந்தா ஆர்டென் மகப்பேற்று விடுமுறையை முடித்துக் கொண்டு கடமைக்கு திரும்பியுள்ளார். பதவியிலிருந்த போது குழந்தை பெற்றெடுத்த உலகின் இரண்டாவது பெண் பிரதமர் என்ற பெருமையும் அம்மணிக்கு சேர்ந்துள்ளது. ஜஸிந்தாவின் கணவர் தொலைக்காட்சியொன்றில் பணியாற்றுகிறார். ஜஸிந்த பிரதமர் ஆபிஸில் பணியாற்றினால், வீட்டில் குழந்தையை பார்த்துக் கொள்வதற்காக கணவன் தொலைக்காட்சி வேலையை உதறி விட்டார்.

# நியூஸ் பிட்ஸ்




பாகிஸ்தான் கிரிக்கெட் லெஜண்ட் இன்சமாம் உல் ஹக் இப்போது செம ஹப்பி. பாகிஸ்தான் தேர்வுக்குழு தலைவரான பின்னர், அணியை படிப்படியாக தூக்கி நிறுத்தி வருகிறார். நிலையில்லாமலிருந்த பாகிஸ்தான் அணியை, நிலையான அணியாக மாற்றி வரும் பெருமை இன்சமாமிற்குரியதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவரும் அண்மையில் புகழாரம் சூட்டினார். தனது மருமகன் இமாம் உல் ஹக்கை அணிக்குள் கொண்டு வந்தபோது, சில பல விமர்சனங்கள் எழுந்தன. அவரும் சதமடித்து, தனது தேர்வை நியாயப்படுத்தியதும், அண்ணாச்சி டபிள் ஹப்பி'

ஜேர்மன் காவல்துறைக்கு சமீபத்தில் ஒரு அவசர தொலைபேசி அழைப்பு வந்தது. பேசியவர் பதற்றத்துடன் சொன்ன தகவல் "என்னை அணில் குஞ்சு ஒன்று துரத்துகிறது" என்பதே. இதென்ன புதிதாக இருக்கிறதே என யோசித்தபடி காவல்துறையினர் அங்கு சென்றால், பிறந்து சில வாரங்களேயான அணில் குஞ்சு நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது. ஓடிக்களைத்த பின் வந்த உறக்கம். அதை மீட்டு விலங்குகள் காப்பகத்தில் ஒப்படைத்துள்ளனர். தாயை பிரிந்த அணில் குஞ்சுகள் தமக்கு யாரையாவது பிடித்தால் அவர்களின் பின்னால் ஓடுவது இயல்பு என பொலிசார் விளக்கமளித்து, அவசர அழைப்பேற்படுத்தியவரை ஆசுவாசப்படுத்தி அனுப்பி வைத்துள்ளனர்.





சிலருக்கு மனைவி வரம். சிலருக்கு பயம். அமெரிக்காவை சேர்ந்த டெனி கொன்சேலுக்கு எந்த வகையென நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். டெனி கொன்சேல் மத்திய அமெரிக்காவில் பணியாற்றுகிறார். மனைவி சற்று அதிகமாகவே பணம் கேட்பதாக அவருக்கு அபிப்பிராயம் இருந்தது. இதனால் மாகாணம் விட்டு மாகாணம் போய் வேலை செய்தார். வீட்டுப்பக்கமும் தலைகாட்டவில்லை. இரண்டு மூன்று மாதங்களின் பின், மனைவிக்கு வந்த மின்னஞ்சலில் கணவரின் இறந்த புகைப்படம் வந்தது. வேறு தகவல் இல்லை. கவலையுடன் உள்ளூர் பத்திரிகை அலுவலகத்திற்கு சென்று, கணவனின் படத்தை பிரசுரித்து அவருக்கு என்ன நடந்ததென்பதை யாராவது அறியத் தரும்படி கேட்டார். பத்திரிகையில் படம் பிரசுரமானதும், மெனி கோன்சேல் சங்கடத்துடன் மனைவிக்கு நடந்ததை கூறினார். அதிகமாக பணம் கேட்பதால் அப்படி செய்தேன் என காரணமும் கூறியிருக்கிறார்.





மும்பையில் காரில் சென்றபடி ஒருவர் குப்பையை வீசியெறிந்தார். இன்னொரு காரில் வந்து கொண்டிருந்த விராட் கோலி அனுஷ்கா சர்மா தம்பதி அதை பார்த்து விட்டு,அவரது காருக்கு சமீபமாக வந்து, அனுஷ்கா கெட்ட வார்த்தைகளால் அவரை திட்டினார். அதை விராட் கோலி வீடியோவாக எடுத்து பதிவிட்டார். வீதியில் குப்பை கொட்டுவதற்கு எதிரான அபிப்ராயத்தை உருவாக்க வேண்டுமென்றும் அதில் கூறியிருக்கிறார்கள். ஆனால் வீடியோ வில்லங்கமாகி விட்டது. வீதியில் குப்பை கொட்டுவதை அனுஷ்கா சர்மாவின் வாயிலிருந்து அதிக குப்பை கொட்டப்படுவதாக பலரும் கண்டித்து வருகிறார்கள். தன்னை அவமதித்ததாக வீதியில் குப்பை கொட்டியவர் இப்போது தம்பதிக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

அண்மையில் பிலிப்பைன்ஸை யாகி புயல் புரட்டிப் போட்டது. கிட்டத்தட்ட தலைநகர் மணிலா முழுவதுமே வெள்ளத்தில் மிதந்தது. அந்த செய்திகள் பரவாக முக்கியத்துவம் பெற்றிருந்தன. இந்த அசம்பாவிதத்திற்குள்ளும் ஒரு காதல் செய்தி பலரையும் கவனிக்க வைத்தது. வெள்ளத்தில் மிதந்த தேவாலயத்திற்குள் ஒரு ஜோடி திருமணம் செய்து கொண்டுள்ளனர். இந்த ஜோடி தமது திருமண திகதியை ஏற்கனவே நிச்சயித்திருந்தனர். அதற்குள் புயல் புகுந்து விட்டது. வாழ்க்கையில் ஒருமுறைதான் நடக்கும் திருமணத்தை எதற்காக தள்ளி வைக்க வேண்டுமென யோசித்து, வெள்ளத்திற்குள் திருமணத்தை முடித்து விட்டதாக கூறுகிறார்கள். இதில் சுவாரஸ்யம் என்னவென்றால் இந்த ஜோடி பல காலமாக ஒன்றாக வாழ்கிறார்கள். அவர்களிற்கு இரண்டு குழந்தைகளும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.ராகோத்தமன்

அத்தனைபேரின்கவனமும்ராஜிவின் மீதே இருக்க, அவர் அந்த இரவுப் பொழுதிலும் முகத்தில் களைப்பேதும் இன்றி, மாறாத புன்னகையுடன் கூட்டத்துக்கு வணக்கம் சொல்வதும், கையாட்டுவதும் மாலைகளை வாங்கிக்கொள்வதுமாக முன்னேறி வந்துகொண்டிருந்தார்.

காங்கிரஸ் பிரமுகர் லஷ்மி ஆல்பர்ட் வழியில் நின்று ராஜிவுக்கு வணக்கம் சொல்ல, அவரை அடையாளம் கண்டு ஒரு வரி நலம் விசாரித்தார்.

அதைச் சற்றுத் தொலைவில் நின்றிருந்த மரகதம் சந்திரசேகர் கவனித்துவிட்டார். அவருக்கு ஏனோ அது பிடிக்கவில்லை. முகம் இருண்டுவிட்டது. கூட்டத்தோடு கலந்திருந்த டரியல் பீட்டர்ஸ் சட்டென்று முன்னால் வந்து மரகதம் சந்திரசேகரின் கையைப் பிடித்து அவரை மேடைக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

ராஜிவ் முன்னேறி வரவர, கூட்டம் ஆரவாரம் செய்துகொண்டே இருந்தது.





# ராஜிவ் கொல்லப்பட்ட இடத்திலிருந்த ஆறாவது மர்ம நபர்!





## ராஜிவ் காந்தி கொலை 42
### புலிகள் சிக்கிய கதை

அவர் சிறுமி கோகிலவாணியின் அருகே வந்தார். குனிந்து கன்னத்தைத் தட்டினார். சிறுமி கவிதை எழுதியிருப்பதை அவளது தாய் ராஜிவிடம் சொன்னார்.

தணு தயாராக இருந்தார்.

ஆனால்மிகவும்பதற்றமாகஇருந்தார். கூட்டம் மிகவும் மோதி, முண்டியடிக்க, எந்தச் சிக்கலும் இல்லாமல் காரியம் முடியவேண்டுமே என்கிற பதற்றம். ஒரு முடிவுக்கு வந்தவராக, சட்டென்று முன்வந்து ராஜிவை நெருங்கினார்.

ஹரி பாபு அவர் மாலை போடுவதற்காக ஃபோகஸ் செய்ய, தணு சடாரென்று நெருங்கியதுமே குனிந்து முதல் விசையை அழுத்திவிட்டார்.

இதனை எதிர்பார்க்காத ஹரி பாபு, படம் எடுக்க முடியாமல் போய்விடுமோ என்கிற பதற்றத்தில் மேலும் முன்னால் வந்து குனிந்து படமெடுக்கப் பார்க்க, அந்தக் கணமே குண்டு வெடித்தது.

பிராந்தியத்தையே நிலைகுலைய வைத்த சக்தி மிக்க ஆர்.டி.எக்ஸ். ராஜிவ் காந்தி உள்பட பதினெட்டு பேரின் உயிரை வாங்கிய குண்டு. என்னவென்று புரியாமல் கூட்டம் பதறி ஓடத் தொடங்கியது.

மேடையில் இருந்த வாழப்பாடி ராமமூர்த்தி, மற்றும் அருகிருந்த ஜி.கே. மூப்பனார் போன்றவர்கள் அலறியடித்துக்கொண்டு ஓடிவரத் தொடங்கினார்கள்.

என்ன நடக்கிறது என்பதே தெரியாத புகை மண்டலம். கால் வைக்கும் இடங்களில் எல்லாம் சதைத் துண்டுகள், ரத்தம், அதிபயங்கர ஓலம், மரண ஓலம். நளினியும் சுபாவும் அப்போது ஓடிக்கொண்டிருந்தார்கள்.

இந்திரா காந்தி சிலை வரை ஓடி, மூச்சு வாங்கி அவர்கள் நிற்க, சொன்னபடி பத்து நிமிடங்களில் சிவராசன் தலைதெறிக்க ஓடிவருவது தெரிந்தது.

அருகே வந்தவர், 'ராஜிவும் தணுவும் இறந்துவிட்டார்கள். துரதிருஷ்டவசமாக ஹரிபாபுவும் இறந்துவிட்டார்' என்று சொன்னார்.

அவர் தன்னிடம் ஒரு வெள்ளைத் துணியில் சுற்றி வைத்திருந்த பிஸ்டலை நளினியிடம் கொடுத்து, சுபாவிடம் பிறகு தந்துவிடும்படி சொன்னார்.

மூவரும் வேகமாக அந்த இடத்திலிருந்து நகர்ந்து பேருந்து நிலையத்துக்கு வந்தார்கள்.

சென்னை செல்லும் பஸ் ஒன்று நின்றிருந்தது. ஆனால் அது கிளம்பாது என்று யாரோ சொன்னார்கள்.

என்ன செய்வதென்று புரியாமல் மேலும் வேகவேகமாக நடந்தார்கள். வழியில் ஒரு வீட்டருகே நின்று, அங்கே வாசலில் இருந்த பெண்மணியிடம் கேட்டுத் தண்ணீர் வாங்கிக் குடித்தார்கள். மெயின் ரோடுக்கு வந்து ஓடத் தொடங்கினார்கள். சாலையில் ஆள் நடமாட்டம் இல்லாத இரவு நேரம். ஏதாவது ஒரு வண்டி கிடைத்தால் நல்லது.

யோசித்தபடி அவர்கள் ஓட, ஓரிடத்தில் இருளில் காத்திருந்த இன்னொரு மனிதர் அவர்களுடன் சேர்ந்துகொண்டார். நால்வருமாக ஒரு ஆட்டோவை நிறுத்தினார்கள். 'சென்னைக்குப் போகவேண்டும். பஸ் கிடைக்கவில்லை.' 'இது திருவள்ளூர் வண்டி சார். மெட்ராஸ் வரைக்கும் போறது கஷ்டம். எவ்ளோ தூரம் முடியுதோ, போகலாம்' என்று சொல்லி ஏற்றிக்கொண்டான்.

சிவராசன், சுபா, நளினி மூவரும் பின்னால் ஏறிக்கொள்ள, அந்தப் புதிய மனிதர் டிரைவருக்கு அருகே ஒட்டிக்கொண்டார்.

ஆட்டோ புறப்பட்டது. யாரும் எதுவும் பேசவில்லை. அமைதியாகவே இருந்தார்கள்.

பிரச்னையேதும் இல்லாமல் ஆட்டோ சென்னை நகர எல்லையை அடைந்தது. கத்திப்பாரா சந்திப்பு வந்தபோது, ஆட்டோவை நிறுத்தச் சொல்லி, அந்தப் புதிய மனிதர் மட்டும் இறங்கிக்கொண்டார்.

மற்ற மூவருடன் ஆட்டோ மீண்டும் புறப்பட்டுச் சென்றது.

தேனாம்பேட்டை சிக்னல் அருகே அவர்கள் இறங்கிக்கொண்டு, டிரைவருக்குப் பணம் கொடுத்தார்கள்.

இன்னொரு ஆட்டோ பிடித்து பாரீஸ் கார்னர் சென்று, அங்கே வேறொரு ஆட்டோ பிடித்து கொடுங்கையூர் போய்ச் சேர்ந்தார்கள்.

நளினி அதுநாள் வரை சந்தித்தே இராத அந்தப் புதிய மனிதர் ஸ்ரீபெரும்புதூர் சம்பவ இடத்தில் இருந்த ஆறாவது மனிதர், விடுதலைப் புலியின் பெயர், சின்ன சாந்தன்!

வழக்கெல்லாம் முடிந்து நான் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு மிகத் தற்செயலாக இதனைக் கண்டுபிடித்தேன். ஹரி பாபு எடுத்திருந்த பத்து புகைப்படங்களுள் ஒன்றில் ராஜிவுக்கு நெருக்கமாக நின்று மாலை அணிவிக்கும் ஒரு அதிமுக கரை வேட்டித்துண்டு மனிதரின் படமும் இருந்தது.

அவர் யாரென்று எங்களால் அப்போது கண்டுபிடிக்க முடிய வில்லை. கண்டுபிடிக்க முடிந்தபோது, அந்தக் கண்டுபிடிப்பு அவசியமற்றதாகி விட்டது.


சின்ன சாந்தனை நாங்கள் ஏற்கெனவே கைது செய்து, விசாரித்து, அவர் தண்டனை பெற்று சிறையில் இருந்தார்! (தொடரும்)

விசாரணை முடிந்தபின்பே இவர்தான் சின்ன சாந்தன் என்பது தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அதிரியாட்டிக் கடல் தன் கைப்பட எழுதிய கவிதை

## 8 பழைய நகரம், டுப்ரோவ்னிக்

சாள்ஸ் ஜெ.போர்மன்

கிரவேஷியாவில் காண்பதற்கு நான் மிகவும் ஆவலாயிருந்த டுப்ரோவ்னிக் பழைய நகரம் எங்கள் கண்களின் முன்னால் தோன்ற ஆரம்பித்தபோது முதலாவது கணத்திலேயே அதன் கம்பீரமும், அமைப்பும் எங்களைக் கவர்ந்தது. பழைய நகரின் லோவ்ர்யனாக் கோட்டை[Lovrjenac Fortress] முதலாவதாக எங்கள் கண்களில் பட்டது.

அந்தப் பழைய நகரைப் பற்றிச் சொல்ல நிறைய இருக்கிறது. அதன் அமைப்பு, சரித்திரம் மட்டுமன்றி அது இன்று மிகவும் பிரபலமாக இருக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றான Game of Thrones தொலைக்காட்சித் தொடரைப் பற்றியும் சொல்லாமல் இருக்க முடியாது.

அந்தக் கோட்டை கண்ணில் பட ஆரம்பித்து மெதுவாக விரிய ஆரம்பிக்கவும் படகிலிருந்த பெரும்பான்மையானவர்களிடையே பரபரப்பு அலை படர்ந்ததை உணர முடிந்தது. எல்லோரையும் போலவே நானும் கைகளில் கமெராவை எடுத்துப் படங்களை எடுக்க ஆரம்பித்தேன்.

"Game of Thrones" வயது வந்தவர்களுக்கான தொலைக்காட்சித் தொடர் என்பதால் மகன் கதிர் அதைப் பார்க்கவில்லை. அவனுக்கு அக்கோட்டையின் படங்களை மட்டும் பிரயாணத்துக்கு முன்பு காட்டியிருக்கிறேன். அவனுக்கு அக்கோட்டையின் படங்களை மட்டும் பிரயாணத்துக்கு முன்பு காட்டியிருக்கிறேன். காதல், காமம், மந்திர தந்திரங்கள், வெறுப்பு, காட்டுமிராண்டித்தனமான வன்புணர்வுகள், கொலைகள், போர்கள் போன்ற மனிதனின் மூர்க்கத்தனங்கள் அனைத்தையும் ஒருங்கே கொண்டிருக்கும் அரசர்கள் காலக் கற்பனைக் கதை அது. அமெரிக்கா, கிரவேஷியா தவிர, அயர்லாந்து, கனடா, ஐஸ்லாந்து, மால்டா, மொறொக்கோ, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அது படமாக்கப்பட்டது.

உலகில் மிகப்பெரிய செலவில் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சித் தொடரான "Game of Thrones" HBO, கேபிள் நெட்வேர்க் நிறுவனத்தின் தயாரிப்பு. 2011ம் ஆண்டில் முதன் முதலாக ஒளிபரப்பப்பட்டு ஏழு பாகங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. தற்போது தயாரிப்பில் இருக்கும் எட்டாவது பாகம் 2019ம் ஆண்டில் வெளியிடப்படவிருக்கிறது.

வெளியிடப்பட்ட ஆரம்பம் முதல் உலகம் முழுவது பெரும் ஆதரவைப் பெற்ற "Game of Thrones", தொலைக்காட்சித் தயாரிப்புக்களுக்கான சகலவிதமான பரிசுகளையும் வெவ்வேறு ஆண்டுகளில், மீண்டும், மீண்டும் பெற்றிருக்கிறது.

லோவ்ர்யனாக் கோட்டை அத்தொலைக்காட்சியில் சில முக்கிய சம்பவங்கள் நடந்த இடம். அதையெல்லாம் விபரித்துக்கொண்டிருப்பின் இத்தொடரின் அமைப்பே மாறிவிடும் என்பதால் இங்கே தவிர்க்கிறேன். அத்தொடரைப் பார்த்தவர்களால் மிக இலகுவாக இந்த இடங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். கற்பனைக் கதை என்பதால் அதன் படமாக்கலில் இந்த இடங்களை அடிப்படையாக வைத்து தொழில்நுட்பத்தால் அதைச் சுற்றிவர உள்ள இடங்களை உருவாக்கி இணைத்திருக்கிறார்கள்.

பொக்கார் கோட்டை, 12 17ம் நூற்றாண்டுகளிடையே கட்டப்பட்ட சுமார் 25 மீற்றர் உயரமான, சுமார் இரண்டு கிலோ மீற்றர் நீளக் கோட்டை மதில்கள், மின்செட்டா கோபுரம், டுப்ரோவ்னிக் பழைய நகரம், அந்த நகரின் குறுகிய வாசலும் அதன் துறைமுகமும் என்று ஒவ்வொன்றாக எங்கள் பார்வையில் தெரிந்தன. இவைகளில் எது அழகும், கம்பீரமுமானது என்று சொல்ல முடியவில்லை.

எங்கள் படகு அந்தப் பழைய நகரத் துறைமுகத்தில் சுமார் 30 நிமிடங்கள் நிற்கும் என்று அறிவித்தார்கள். அது மிகவும் சிறிய துறைமுகமென்பதால் எங்களுடையது உட்பட அங்கே வந்திருந்த பல படகுகளும் வரிசையில் நின்று துறைமுகத்தில் இடம் கிடைக்குமம்வரை காத்திருக்க வேண்டியிருந்தது.

அந்த 30 நிமிட நேரத்துக்குள் நகரின் வீதிகளைக் கொஞ்சம் பார்த்துவிட்டு வர முடியுமே தவிர அதனுடனிருக்கும் கோட்டைக்குள் போய் அங்கெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வரமுடியாது. எனவே நாங்கள் மீண்டும் ஒரு தடவை அந்த நகருக்கு வீதி வழியாக வந்து ஆறுதலாகப் பார்க்கவேண்டியிருந்தது.

துறைமுகப் பகுதியால் வரும்போது நாம் நுழையும் வீதியான ஸ்ராடுன் தான் அந்த நகரின் நடுவே ஓடும் வீதி. அதன் எதிர்ப்புறத்தில் இருக்கிறது பைல் வாசல் (Pile Gate). நிலப்பகுதியால் வரும்போது நுழையும் அவ்வாசலால் தான் பழைய நகரின் முக்கிய வாயில்.

பளபளக்கும் கற்களால் துல்லியமாக அமைக்கப்பட்டிருக்கும் ஸ்ராடுன் 14 ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது. வாகனப் போக்குவரத்துக்கள் முழுவதுமாகத் தவிர்க்கப்பட்டிருக்கும் பழைய நகரத்தின் அந்த வீதியில் நின்று பார்க்கும்போது Middle Ages [400 1400 ஆண்டுகள்] என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மத்திய காலத்துக்கு நாம் பிரயாணமாகிறோம் என்றால் மிகையில்லை. காரணம் அங்கிருக்கும் பண்டைக்காலச் சூழல் முழுவதுமாகப் பேணப்படுகிறது. அந்த நகரம் ஐ.நாவின் யுனெஸ்கோவால் உலகப் பாரம்பரியங்களில் ஒன்று என்று பேணப்படுகிறது.

ஸ்ராடுனின் இரண்டு பக்கமும் சிறிய வீதிகள் பிரிந்து இரண்டு பக்கமும் போகின்றன. ஸ்ராடுன், துறைமுகத்தால் வரும் வழியின் கதவுகளைச் சந்திக்கும் இடத்துக்கு அருகே இருக்கிறது நகரின் சதுக்கம்.

அந்தச் சதுக்கத்தில் நின்று பார்க்கும்போது ஸ்பொன்ஸா மாளிகை, கினெஸெவ் டுவொர் மாளிகை, மணிக்கூட்டுக் கோபுரம் போன்ற சரித்திரப் பிரசித்திபெற்ற கட்டடங்களைக் காணலாம். தவிர, ஆங்காங்கே செயற்கை பண்டைக் காலத்துக்கேற்ற நீரூற்றுக்களும் அமைக்கப்பட்டிருந்தன.

அச்சூழலில் இருக்கும் சரித்திரகால உணர்வுக்கு மாறாக இருப்பது அச்சிறிய பிராந்தியத்துக்குள் நிறைந்திருந்த சுற்றுலாப் பயணிகளும், அவர்களுக்காக விற்கப்பட்டுக்கொண்டிருந்த கடைகளிலிருக்கும் பொருட்களும் தான் எனலாம். குறுக்கு வீதிகளில் வாழ்பவர்கள் இரண்டு பக்கத்தையும் இணைத்துக் கயிறுகள் கட்டி உடுப்புக்களை உலரப் போட்டிருந்தார்கள். சுமார் 1,000 பேர் தற்போது நிலையாக் அப்பழைய நகருக்குள் வாழ்கிறார்கள். அந்தப் பழைய நகருக்குள் வெவ்வேறு கிறீஸ்தவ மார்க்கத் தேவாலயங்களும் ஒரு பள்ளிவாசலும் இருக்கின்றன.

கோட்டையின் உயரமான மதில்களை ஏறிப் பார்க்கக் கட்டணம் சுமார் 25டொலர்கள் வசூலிக்கிறார்கள். ஆடி மாத வெயிலிலும் அதன் மேல் ஏறக் கூட்டம் அலை மோதியது. சுமார் 3 மணித்தியாலமாவது செலவழித்தால்தான் அந்த மதில்களில் எல்லாம் ஏறி ஓரளவாவது அந்தக் கோட்டைகளைக் காண முடியும்.


இத்தனை ஆர்வத்துடன் இத்தனை தூரம் வந்துவிட்டு அதில் ஏறிப் பார்க்காமல் இருக்க முடியாதே, நாங்களும் அதில் ஏறினோம்.

சூரிய வெளிச்சம் அந்த நகரத்தின்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைவர் அ.உதயகுமார்



உதவிக்கு வரும் உயிரியல் - 13

# பயன்பாட்டுக்கு வராத 'பலே' பக்டீரியாக்கள்!

இயற்கை தன்னைத்தானே தகவமைத்துக் கொள்ளும் என்பது நாம் அறிந்ததுதான். அப்படித் தகவமைத்துக்கொள்வதில் நுண்ணுயிர்களின் பங்கு முக்கியமானது. இந்த நுண்ணுயிர்கள் விவசாயத்தில் மிகப்பெரும் பங்காற்றுகின்றன. இவற்றைப் பற்றிய விழிப்பு உணர்வு நம்மிடம் போதுமான அளவு இல்லை. ஆனால், வெளிநாடுகளில் பயிர்வளர்ச்சி, நோய்க் கட்டுப்பாடு போன்றவற்றுக்கு வகை வகையான பக்டீரியாக்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவற்றைப் பயன்படுத்துவது மூலமாக, மண்ணில் இடும் அத்தனை சத்துகளும் சிந்தாமல் சிதறாமல் பயிர்களுக்குக் கிடைக்கிறது. ஆனால், நாம் இடும் இடுபொருள்களில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாமலே வீணாகின்றன. இயற்கையாகவே மண்ணில் பல நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் இருக்கின்றன. ஆனால், இரசாயன உரங்களைக் கொட்டி அவற்றை அழித்தொழித்துக் கொண்டிருக்கிறோம். மண்ணிலுள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் பற்றி இதுவரை பார்த்தோம். அவையனைத்தும் பயன்பாட்டில் இருப்பவை. ஆய்வுக்கூடங்களில், பலன் கொடுக்கும் எனக் கண்டுபிடித்து, இன்னமும் பயன்பாட்டுக்கு வராத பல நுண்ணுயிர்கள் இருக்கின்றன. அவற்றைப் பற்றிப் பார்க்கலாம்.

**பயரேன்சியா** (Beijerincia) : இது மற்ற எதையும் சார்ந்து வாழாமல், தனிப்பட்ட முறையில் வாழக்கூடிய ஒரு பக்டீரியா. வளிமண்டலத்தில் இருக்கக்கூடிய நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்தும் தன்மையுடையது. வெப்பமண்டலப் பகுதிகளிலுள்ள மண்ணில் இது வாழும். கார, அமில நிலை 3 முதல் 10 வரை இருக்கக்கூடிய மண்ணில் இதன் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். 20 முதல் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உள்ள மண், இது வாழ்வதற்கு ஏற்றது. 37 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு மேலே போனால் இதன் வளர்ச்சி தடைபடும். இது காற்றோட்டம் உள்ள பகுதியில்தான் வேலை செய்யும். இந்தப் பக்டீரியா இன்னும் பரவலாகப் பயன்பாட்டுக்குக்கொண்டு வரப்படவில்லை. இது தொடர்பாக இன்னும் பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

**பிரட்டேரியா அரன்சியா** (FrateuriaAurantia): மண்ணில் இருக்கக்கூடிய அங்கக அமிலங்கள், நொதிகளை வெளியிடும் திறன் வாய்ந்தது. இதை விவசாயத்தில் விதைநேர்த்திக்குப் பயன்படுத்தலாம். ஒரு கிலோ விதைக்குப் பத்து கிராம் இந்தப் பக்டீரியா, பத்து கிராம் வெல்லச் சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து பேஸ்ட் மாதிரி செய்துகொண்டு, அதில் விதையைக் கலந்து விதைக்கலாம்.

நாற்றுகளை நேர்த்தி செய்வதற்கு 50 லிட்டர் தண்ணீரில் 100 கிராம் இந்தப் பக்டீரியாவைக் கலந்து, அந்தத் தண்ணீரில் நாற்றின் வேர்களை முக்கி நடவு செய்யலாம். மண்ணில் இடுவதாக இருந்தால், ஒரு ஏக்கர் நிலத்துக்கு, மூன்று முதல் ஐந்து கிலோ பக்டீரியாவைத் தொழுவுரத்துடன் கலந்து தெளிக்கலாம். சொட்டுநீர்ப் பாசனத்தில் கொடுப்பவர்கள், ஒரு ஏக்கர் நிலத்துக்கு மூன்று கிலோ பக்டீரியாவைக் கலந்துவிடலாம். இந்தப் பக்டீரியா மண்ணில் அதிக அமிலங்களைச் சுரப்பதோடு, மண்ணில் கரையாமல் இருக்கும் சத்துகளைக் கரைத்துக் கொடுக்கிறது. இதிலுள்ள என்சைம்கள் செடிகளின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் கொடுக்கின்றன. இந்தப் பக்டீரியாவின் பயன்பாடு, பெரிய அளவு பரவவில்லை.

**கிளாஸ்டிரிடியம்** (Clostridium) : இது மண்ணில் வாழக்கூடிய ஒருவகை பக்டீரியா. இதுவும் வளிமண்டலத்திலுள்ள தழைச்சத்தை மண்ணில் நிலைநிறுத்தக்கூடியது. காற்றிலுள்ள நைட்ரஜனை அமோனியாவாக மாற்றிக்கொடுக்கும் பணியைச் செய்கிறது. இது இன்னும் பயன்பாட்டுக்கு வராத பக்டீரியா. இது தொடர்பான ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

**கிளேப்சியல்லா** (Klebsiella) : இது இயற்கையாக வாழக்கூடிய ஒருவகை பக்டீரியா. எதையும் சார்ந்து வாழாமல் தனிப்பட்ட முறையில் வாழக்கூடியது. இது பயறுப் பயிர்களில் அதிகளவில் இருக்கும். பயிர்களுக்குத் தழைச்சத்தைக் கொடுக்கும் திறன்வாய்ந்த பக்டீரியா. இதுவும்கூட பயன்பாட்டுக்கு வரவில்லை.


**அனபீனா** (Anabaena): இது நூலிலைப் போல் உள்ள சயனோ பக்டீரியா வகையைச் சேர்ந்தது. இது இயற்கையாக மண்ணில் இருக்கும். வளிமண்டலத்திலுள்ள நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்தும். இது தன்னிடமுள்ள சத்துகளைச் செடிகளுக்குக் கொடுத்து, செடிகளிலுள்ள சத்துகளை எடுத்துக்கொண்டு உயிர் வாழும் தன்மைவாய்ந்தது. ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்துகொண்டு வாழக்கூடியது. இந்தப் பக்டீரியாவும் பயன்பாட்டுக்கு வரவில்லை.

**நோஸ்டாக்** (Nostoc): இதுவும் சயனோ பக்டீரியா வகையைச் சேர்ந்த ஒருவகைப் பக்டீரியா. இது நீர், நிலம் இரண்டிலும் வாழக்கூடியது. இதற்குச் சாதகமான சூழ்நிலை இல்லாத இடங்களில், உறக்க நிலைக்குச் சென்றுவிடும். பல ஆண்டுகள் ஆனாலும் அப்படியே இருக்கும். மீண்டும் சாதகமான சூழல் நிலவும்போது, உறக்கம் கலைந்து செயல்படத் தொடங்கும். இது மண்ணில் தழைச்சத்தை நிலைநிறுத்தக்கூடியது. விவசாயத்திற்கும், சுற்றுச்சூழலுக்கும் மிகவும் பயனுள்ள பக்டீரியா. நெல் சாகுபடியில் இதைப் பயன்படுத்தலாம். மானாவாரி, இறவை முறையிலும் நெல் வயல்களில் பயன்படுத்தலாம். ஒரு ஏக்கர் நிலத்துக்கு ஒரு கிலோ என்ற அளவில் தொழுவுரத்தோடு கலந்து வயல்களில் தெளிக்கலாம். சிறிய அளவில் பயன்பாட்டில் உள்ளது.

**ஃபிரான்கியா** (Frankia) :. மண்ணில் தழைச்சத்தை நிலை நிறுத்தக்கூடிய பக்டீரியா. ரைசோபியம் மாதிரி, சத்துகளைப் பரிமாற்றம் செய்து வாழக்கூடியது. இந்தப் பக்டீரியாவும் இன்னமும் பயன்பாட்டுக்கு வரவில்லை. நன்மை செய்யும் பக்டீரியாக்களுடன், நோய்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பூஞ்சைகளும்கூட பயன்பாட்டுக்கு வராமல் உள்ளன.

**ஹிர்ஸ்டுல்லா தொம்பஸ்சோனி** (Hirsutella Thompsonii): இலைப்பேன், வேர்ப்புழு மற்றும் சிலவகையான பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் பூஞ்சை. இதைத் தானியப் பயிர்கள், காய்கறிப் பயிர்கள், பழப்பயிர்கள், கோப்பி, தேயிலை ஆகிய பயிர்களுக்குப் பயன்படுத்தலாம்.


**ஆம்பிலோமைசஸ் குயிஸ்காலிஸ்** (Ampelomyces Quisqualis) : இது காற்றோட்டம் இல்லாத இடங்களில் வாழக்கூடிய ஒருவகை பூஞ்சை. ஒட்டுண்ணிகளை அழிக்கக்கூடிய ஒட்டுண்ணி. சாம்பல்நோய், கரிபுட்டை நோயைக் கட்டுப்படுத்தக்கூடியது. திரவமாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு மூன்று லிட்டர், பவுடராக இருந்தால் நான்கு கிலோவை எடுத்து 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். ஆக, நன்மை செய்யும் பக்டீரியாக்களையும் பூஞ்சைகளையும் அரசு மற்றும் தனியார் ஆய்வுக்கூடங்களில் பெருக்கி, விவசாயிகளுக்குச் சுலபமாகக் கிடைக்க வழிவகைசெய்ய வேண்டும். இதன்மூலம் இடுபொருள் செலவையும் கணிசமாகக் குறைக்க முடியும். நஞ்சில்லாத உணவுப் பொருளையும் உற்பத்தி செய்ய முடியும். பரவும்



கிளாஸ்டிரிடியம்



கிளேப்சியல்லா



நோஸ்டாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதுமையைத் தாமதமாக்கும் ஃபேஷியல் யோகா

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள். முக அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்களே இல்லை எனச் சொல்லலாம். முகம் பளிச்சிட நாம் மேற்கொள்ளும் பராமரிப்புகள் பல. இளமையைத் தக்க வைப்பதற்கு காஸ்ட்லியான காஸ்மெட்டிக்ஸ், மாதம் தவறாத பார்லர் விசிட்..... இவற்றின் தேவையே இல்லாமல் செய்கிறது ஃபேஷியல் யோகா. முகத்துக்கான யோகா பயிற்சிகளான இவை, முதுமைத்தோற்றத்தைத் தள்ளிப்போட்டு உங்களை என்றும் பதினாறாக வைக்கும். அதற்கான பயிற்சிகள் இங்கே...


**கபால் ராந்திரா தாட்டி**
(Kapal Randhra Dhauti)

பத்மாசன நிலையிலோ அல்லது சாதாரணமாகவோ உட்கார வேண்டும். முதுகுத்தண்டு நேராக இருக்கும்படி அமர வேண்டும்.

- கைகளை நெற்றியின்மீது வைக்க வேண்டும். பெருவிரல் கண்களின் பக்கவாட்டில் இருக்கட்டும். இப்போது மூச்சை இழுத்து விட வேண்டும்.
- பெருவிரல் மற்றும் ஆள்காட்டி விரலை ஒன்றாகக் குவித்துப் புருவத்தின்மீது வைக்க வேண்டும்.
- பெருவிரலைக் கன்னத்திலும், மீதி உள்ள நான்கு விரல்களையும் கன்னத்தின் மேல்புறத்திலும் வைத்து சற்று அழுத்தம் கொடுக்க வேண்டும்.
- கைகளைக் கன்னத்தில் வைத்து மென்மையாக முகம் கழுவுவது போல் தேய்க்க வேண்டும்.
- கைகளைப் பக்கவாட்டில் மடக்கி, ஆள்காட்டி விரலை உதட்டுக்கு மேலும், நடுவிரலை தாடையின் மேலும் வைக்க வேண்டும்.
- தலையைப் பின்புறமாகச் சாய்த்து, தொண்டைப் பகுதிக்கு மேல் கைகளை மேலும்கீழுமாக வைக்க வேண்டும்.

இந்த நிலையில் சில விநாடிகள் இருக்கவேண்டும். பிறகு, மீண்டும் பழைய நிலைக்கு வரவேண்டும்.

**பலன்கள்:** மனஅமைதிக்கு உதவு கிறது. முகத் தசைகளில் ரத்த ஓட்டம் சீராகும். முகம் பொலிவு பெறுவதோடு, முகக் கொழுப்பு குறையும்.



**கபாலபதி** (Kapalbhati)

பத்மாசன நிலையிலோ அல்லது சாதாரணமாகவோ அமர வேண்டும். முதுகுத்தண்டு நேராக இருக்க வேண்டும். கைகள் இரண்டையும் சின் முத்திரையில் வைக்க வேண்டும். ஆள்காட்டி விரல் நுனியும் கட்டைவிரல் நுனியும் தொட்டுக்கொண்டிருப்பதே சின் முத்திரை. கண்களை மூடி சீராக மூச்சை இழுத்துவிட வேண்டும். இதேபோல், தொடர்ந்து 2 நிமிடங்கள் செய்யலாம்.

**பலன்கள்:** ரத்த ஓட்டம் சீராகப் பாய உதவுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. மேலும், உடல் எடை குறைக்க உதவுவதோடு, கண்களுக்கு ஓய்வும் தரும்.



**ஷண்முகி முத்திரை** (Shanmukhi Mudra)

பத்மாசன நிலையில் (சப்பணம் இட்டு) அமர வேண்டும். இரண்டு கைகளையும் முகத்தின்மீது வைக்க வேண்டும். கைகளின் பெருவிரல் காதுகளைத் தொட்டபடி இருக்கட்டும். இப்போது, ஆள்காட்டி விரல் கண்களுக்கு மேலும், நடுவிரல் மூக்கின் பக்கவாட்டிலும், மோதிர விரல் மூக்கின் மேலும், சுண்டு விரல் தாடையையும் தொட்டுக்கொண்டிருக்க வேண்டும். சீராக மூச்சை இழுத்துவிட வேண்டும். இதேநிலையில், ஐந்து நிமிடங்கள் வரை இருக்கலாம்.

**பலன்கள்:** இது, உடலின் சம நிலைத்தன்மையை மேம்படுத்த உதவும். மனச்சோர்வு, மன அழுத்தத்தைக் குறைப்பதோடு கண்கள் ஓய்வு பெறவும் உதவுகிறது.



**ஷீட்டலி பிராணாயாமம்**
(Sheetali pranayama)

பத்மாசன நிலையில் உட்கார வேண்டும். இரண்டு கைகளையும் சின் முத்திரையில் வைக்க வேண்டும். கண்கள் மூடிய நிலையில் நாக்கை வெளியே நீட்டி, உருளை போன்று உட்புறமாக மடக்கி வைத்துக்கொள்ள வேண்டும். இப்போது நாக்கின் வழியாக மூச்சை உள் இழுக்க வேண்டும். மூச்சை உள்ளே இழுத்ததும், நாக்கை உள்ளே கொண்டு செல்ல வேண்டும். பிறகு, பற்களின் வழியாக மூச்சை வெளியிட வேண்டும். இதேபோல் ஐந்து முறை செய்யலாம். இறுதியாக, இரண்டு கைகளின் உள்ளங்கைகளையும் தேய்த்து, கண்களில் வைக்க வேண்டும். பின்பு கண்களைத் திறக்க வேண்டும்.

**பலன்கள்:** உடல் குளிர்ச்சி அடைய உதவுகிறது. சுவாசம் உடலினுள் சீராகப் பரவ உதவுகிறது. நுரையீரல் பிரச்னைகள், சளி மற்றும் காய்ச்சலைக் குணப்படுத்தக்கூடியது. மன அமைதிக்கு உதவுகிறது.

**வருண் முத்திரை** (Varun Mudra)



சப்பணம் இட்டு, முதுகுத்தண்டு நிமிர்ந்து உட்காரவேண்டும். உள்ளங்கை வானத்தை நோக்கி இருக்குமாறு நீட்ட வேண்டும். இப்போது, சுண்டுவிரல் நுனியும் பெருவிரல் நுனியும் தொட்டுகொண்டிருக்க வேண்டும். இதேநிலையில் ஐந்து நிமிடங்கள் வரை இருக்க வேண்டும்.

**பலன்கள்:** உடல் நீர்வறட்சி ஏற்படாமல் இருக்க உதவும். தொண்டை வறட்சியைச் சரிசெய்வதோடு, செரிமானத்துக்கு உதவும். சரும வறட்சியைச் சரிசெய்து, சருமம் புத்துணர்வு பெற உதவும்.

**மீன் போன்று சிரியுங்கள்** (Smiling Fish)

மெல்லிய புன்னகையோடு, கன்னத்தை உள்ளே இழுத்துக் கொள்வது போலச் செய்யவேண்டும். உதட்டை மீன் போன்று குவித்து வைத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் சில விநாடிகள் வரை இருக்கலாம்.

**வானத்துக்கு முத்தம் கொடுங்கள்**
(Blow kisses)

தலையைப் பின்புறமாகச் சாய்த்து, வானத்தை நோக்கிப் பாருங்கள். இப்போது, உதட்டைக் குவித்து, முத்தம் கொடுப்பதுபோல வைக்க வேண்டும். இதேநிலையில் சில நொடிகள் இருக்கலாம். பிறகு, பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும். சிறிது இடைவெளி விட்டு இந்தப் பயிற்சியை 10 முறை செய்யலாம்.

**வாய் கொப்பளிக்கலாம்** (Gargle)

காற்றை, வாய்க்குள் இழுத்து வைத்துக்கொண்டு உதட்டைக் குவிக்க வேண்டும். இப்போது, காற்றை ஒரு கன்னத்தில் இருந்து மறு கன்னத்துக்குக் கொண்டுசெல்லவேண்டும். இதேபோல் மாற்றி மாற்றிச் செய்ய வேண்டும்.



இந்தப் பயிற்சி கிட்டத்தட்ட நாம் வாய்க் கொப்பளிக்கும் செயல்போல் இருக்கும். இதேபோன்று தொடர்ந்து 10 முறை செய்யலாம்.

**பப்பெட் ஃபேஸ்** (Puppet Face)

புன்னகைத்த நிலையில் கைகளைக் கன்னங்களின்மேல் வைக்க வேண்டும். இப்போது முகத்தின் மீது கைவைத்து மென்மையாக அழுத்தி மேலும் கீழுமாக அசைக்க வேண்டும். இந்தப் பயிற்சியை உதட்டுக்கு மேல் மட்டும்தான் செய்ய வேண்டும். இதை 10 விநாடிகள் வரை செய்யலாம்.

**மெல்ல மெல்லப் புன்னகைக்கலாம்**
(The Sphinx Smile)



சாதாரணமாக முகத்தை வைத்துக் கொள்ளவேண்டும். மெல்ல மெல்லப் புன்னகை செய்ய வேண்டும். கண்கள் சாதாரணமாக இருக்கட்டும். இதேபோல், ஐந்து முறை செய்யலாம்.

**ஆச்சர்யப்படுத்துங்கள்** (Surprise Me)


சாதாரணமாக் முகத்தை வைத்துக் கொள்ளவேண்டும். இப்போது, ஆச்சர்யப்படுவதுபோல் முகத்தின் பாவனையை மாற்ற வேண்டும். மீண்டும் பழைய நிலைக்கு வர வேண்டும். இதேபோல் மாறி மாறி ஐந்து முறை செய்யலாம்.

**பலன்கள்:** முகத்தில் உள்ள சதைகளைக் குறைக்க உதவுகிறது. முகத்தசைகளில் ரத்த ஓட்டம் சீராகும். களையான முகஅமைப்புக்கு உதவும். கன்னங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவும். கன்னத்தில் உள்ள தசைகளில் இயக்கங்கள் ஏற்பட்டு ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்க வீட்டில் இருக்கும் எம்.ஜி.ஆர் குடும்பப் படம் - எம்.ஜி.ஆர், வி.என்.ஜானகியுடன் அவரது மகன் சுரேந்திரன்



சந்திரலேகா ட்ரம் டான்ஸ் - ஆடுகிறவர்களில் எங்க அம்மாவும் ஒன்னு

ரமேஷ் கண்ணா

# எம்.ஜி.ஆர் மேல் எங்க அப்பா போட்ட கேஸ்!

## ரமேஷ் கண்ணா எழுதும் திரையிடாத நினைவுகள் 1

வணக்கம்! உங்க எல்லாருக்கும் என்னை நல்லா தெரியும், 90ஸ் கிட்ஸ்க்கு ரொம்ப நல்லா தெரியும். ஆமா, 1998ல ஆரம்பிச்சு ஒரு பதினஞ்சு வருஷமா எக்கச்சக்க படங்கள் நடிச்சிருக்கேன். பெரும்பாலும் சூப்பர் ஹிட் படங்கள். ஒரு நாளைக்கு ரெண்டு மூணு படங்களோட ஷூட்டிங்குக்குப் போக வேண்டிய அளவுக்கு பிஸியா இருந்துருக்கேன். இதெல்லாம் உங்களுக்குத் தெரிஞ்ச காலகட்டம். ஆனா, அதுக்கு முன்னாடியும் சரி, அதுக்கு அப்புறமும் சரி, நான் சினிமாவுலதான் இருந்தேன், இருக்கேன். சொல்லப் போனா நான் பிறந்ததுல இருந்தே சினிமாலதான் இருக்கேன். எங்க அம்மா வயிற்றில் நான் இருந்தப்போவே எங்க அம்மா சினிமா நினைவாதான் இருந்தாங்க. சினிமா, எனக்குள்ள கலந்து இருக்கு.

இந்த நீண்ட பயணத்துல எத்தனையோ பேரை சந்திச்சிருக்கேன், எத்தனையோ பேரிடம் பழகியிருக்கேன். அவர்கள் எல்லோரும் உங்களுக்கும் தெரிஞ்சவங்கதான். உங்களுக்கு நல்லா தெரிஞ்ச அவர்களுக்கும், உங்களுக்குத் தெரிஞ்ச எனக்குமிடையே இதுவரை பெரிதாக வெளியே தெரியாத எத்தனையோ விஷயங்கள் நடந்துருக்கு. ஒவ்வொருவரும் எனக்கு ஒவ்வொரு வகையில் முக்கியமானவர்கள், உதவியவர்கள், எனக்கு மகிழ்ச்சியையும், ஏன் சோகத்தையும் கூட தந்தவர்கள். திரையில் உங்களை மகிழ்வித்த நான் (மகிழ்வித்தேன்னு நம்புறேன்), என் நினைவுகளை எந்தத் திரையுமில்லாமல் உங்களிடம் பகிர்ந்துகொள்வதுதான் இந்த 'திரையிடாத நினைவுகள்'.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல், அஜித், விஜய், சூர்யா, விக்ரம், தனுஷ், இன்னும் பலர்... இவர்களுடனெல்லாம் பழகிய என் மகிழ்ச்சியை இங்க உங்களோட பகிர்ந்துகொள்கிறேன். பயப்படாதீங்க, இது என் வாழ்க்கை வரலாறு இல்ல. நான் அந்த அளவுக்குப் பெரிய ஆள் இல்ல. எனக்கு பழக வாய்ப்பு கிடைச்ச, ஏதோ வகையில் சம்மந்தப்பட்ட ஒவ்வொருத்தரைப் பற்றி ஒவ்வொரு பகுதியிலும் உங்களிடம் சொல்லுறேன். முதலில் என்னைப் பற்றி, என் பின்னணி பற்றி கொஞ்சம் சொல்லணும்.

'மன்னாதி மன்னன்' படத்துல 'கருவினில் வளரும் குழந்தையின் மனதில் தைரியம் வளர்ப்பாள் தமிழ் அன்னை, பெற்றவள் மானம் காத்திட எழுவான், அவன் பிள்ளை' என்று கவியரசு கண்ணதாசன் எழுதி எம்.ஜி.ஆர் பாடுவதாய் வரும் வரிகளைப் போல, தாய் தன் வயிற்றில் இருக்கும் பிள்ளை குறித்து என்னவெல்லாம் நினைக்கிறாளோ, ஆசைப்படுகிறாளோ அப்படித்தான் அந்தப் பிள்ளை வளரும். இது உலகம் முழுவதும் நாம் பார்க்கக் கூடிய உண்மை.

அப்படித்தான் நானும். எங்க அம்மாவோட சொந்த ஊர் கேரளால எர்ணாகுளம். அவுங்களுக்கு பதிமூணு வயசிருக்கும்போதே சினிமாவில் நடிக்கும் ஆசையில் சென்னைக்கு ஓடி வந்துட்டாங்க. அவுங்களும் அவுங்க அக்கா தங்கச்சியோட ஜெமினி கம்பெனில டான்ஸரா சேர்ந்து சினிமாவுல இருந்தாங்க. 'சந்திரலேகா' படத்துல வரும் புகழ் பெற்ற, பிரம்மாண்டமான 'ட்ரம் டான்ஸ்'ல எங்க அம்மாவும் இருந்தாங்க.

'பக்த மீரா' படத்துல எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அம்மா கூட நடிச்சாங்க, அவுங்களோட பழகி அவுங்களுக்கு ரொம்ப நட்பா இருந்தாங்க. அதுபோல ஜெமினிகணேசனின் முதல் மனைவியான பாப்ஜி (எ) புஷ்பவள்ளி அப்போ பெரிய நடிகை. அவுங்க நடிச்ச ஒரு படத்துல எங்க அண்ணன் குழந்தை நட்சத்திரமா நடிச்சார். குழந்தை அழாம பாத்துக்கணும்னு எங்க அம்மாவும் கூட போனாங்க. அவுங்களும் சின்ன வேடத்தில் நடிச்சாங்க. இப்படி, சினிமாவுல நடிக்கிற ஆசை அவுங்களுக்கு இருந்துக்கிட்டே இருந்தது. ஆனா, அவுங்களுக்கு பெரிய வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. அப்போதுதான் நான் கருவாகியிருந்தேன். அந்த ஆசை எனக்குள்ளும் அப்போதே உருவாகியது போல.

எங்க அப்பா நாராயணன், பாம்பே ஜெனரல் மோட்டார்ஸ்ல ஜெனரல் மேனேஜரா இருந்தாரு. அப்போ புகழ் பெற்ற இசையமைப்பாளரா இருந்த பாபநாசம் சிவன் எங்க அப்பாவுக்கு உறவு. வி.என். ஜானகிக்கும் அவர் பெரியப்பா முறை வேணும். அந்த வகையில வி.என்.ஜானகியுடைய அம்மாவான நாராயணி அம்மா, எங்க அப்பாவைக் கூப்பிட்டு, "டேய் நாராயணா, இவ சினிமாவுல நடிக்க ரொம்ப ஆசைப்படுறா. நீ இவளுக்கு ஏதாவது பண்ணு, இவளைக் கூட்டிட்டுப் போ"னு சொல்லவும் எங்க அப்பா, பாம்பேயில தன் வேலையை விட்டுட்டு சென்னையில் வி.என். ஜானகி கூட இருந்து, சினிமா வாய்ப்புக்காக பல பேரைப் பார்த்து, ஒவ்வொரு படத்தின் போதும் கூட இருந்து உதவியா இருந்தாரு. ஜானகிக்கு முதல் திருமணமாகி, அது இருவருக்கும் ஒத்து வராம பிரிஞ்சது இன்னொரு கதை.

எங்க அப்பா அவுங்க கூட இருந்தப்போ 'ராஜமுக்தி' பட வாய்ப்பு வந்தது. அந்த வாய்ப்பு பிரச்சனையையும் கூட்டிகிட்டு வருதுன்னு இவங்களுக்குத் தெரியாது. தியாகராஜ பாகவதர் நடிச்ச அந்தப் படத்துல வி.என். ஜானகிதான் ஹீரோயின். எம்.ஜி.ஆர் அதுல ஒரு வேடத்துல நடிச்சாரு. அப்போ அவரு சிறிய கதாபாத்திரங்கள்தான் பண்ணிக்கிட்டு இருந்தார். இந்தப் பட ஷூட்டிங்கின் போது, எம்.ஜி.ஆர்க்கும் வி.என். ஜானகிக்கும் ஒரு புரிதல் ஏற்பட்டு, காதலானது. ஆனால், எம்.ஜி.ஆரோ ஏற்கனவே திருமணமானவர்.

இவங்களோட காதல் விஷயம் தெரிஞ்சு எங்க அப்பா கோபமாகிட்டாரு. ஜானகி வீட்டிலும் இது பிரச்சனை ஆச்சு. எம்.ஜி.ஆர் அப்போ சின்ன நடிகர், ஏற்கனவே திருமணம் ஆனவர். ஜானகி, பிரபலமாகியிருந்தாங்க. அவரின் புகழுக்கும் பணத்துக்கும்தான் எம்.ஜி.ஆர் ஆசைப்பட்டாரென்று எங்க அப்பா அப்போ நினைத்தார்.

அவர்களிருவரும் திருமணமும் செஞ்சுக்கிட்டாங்க. ஆனா, அது சட்டப்பூர்வமாக செல்லாது. எங்க அப்பா அவங்க திருமணத்தை எதிர்த்து கோர்ட்ல கேஸ் போட்டாரு, கேசும் ஜெயிச்சது. ஆனாலும் அவர்கள் பிரியல. அவர்கள் திருமணமும் ரொம்ப நாள் கழிச்சுத்தான் சட்டபூர்வமாச்சு. அப்புறம்தான் எங்க அப்பாக்கு அவுங்க காதல் புரிஞ்சது. ஆனா, அப்பாவுக்கும் ஜானகிக்குமான உறவு தூரமாகிடுச்சு. பின்னாடி ரொம்ப நாள் கழிச்சு, எம்.ஜி.ஆர் அரசியலில் தீவிரமாக இறங்கி, முதல்வரான பின், அப்போ அந்த கேஸ்ல எங்கப்பாவே கோர்ட்ல வாதாடியதை நினைவு வைத்து சொல்லியிருக்கார், "நாராயணனை சட்ட அமைச்சர் ஆகிடலாமா? அவருக்கு எல்லா விவரமும் தெரியுது" என்று. ஆனால், வி.என்.ஜானகி அதுக்கு ஒத்துக்கலை. இப்படி, உறவு விலகியிருந்தாலும் பின்னாடி, என் சித்தி பொண்ணு, அதாவது என் தங்கையை வி.என்.ஜானகி மகனுக்கு திருமணம் செய்து கொடுத்தோம். 'திருமலை'ல விஜய் சொன்ன மாதிரி வாழ்க்கை ஒரு வட்டம்தான், இல்ல?

ஆனால், நான் இந்த உறவு விஷயங்களை சினிமாவுல யார்கிட்டயும் சொல்லிக்கிட்டது இல்லை. இப்போதான் பகிர்கிறேன். அதுவும் சத்யராஜ்க்கு தெரிஞ்சதுக்கு அப்புறம்தான். வி.என்.ஜானகியின் சகோதரர் பையன் தீபன் வீட்டு திருமணத்திற்கு போயிருந்தப்போ சத்யராஜும் வந்திருந்தார். அப்போ தீபன் சத்யராஜ்கிட்ட, "இவரு யார் தெரியுமா?"னு என்னைக் காட்டி கேக்குறாரு. சத்யராஜ் சிரிச்சுக்கிட்டே, "இவரைத் தெரியாதா, ரமேஷ் கண்ணா. நாங்க மகாநடிகன் படத்துல ஒண்ணா நடிச்சிருக்கோமே"னு சொல்றாரு. "உங்களுக்குத் தெரிஞ்ச ரமேஷ் கண்ணா வேற... எங்க குடும்பத்துக்கு ஒரே தாய்மாமன் இவருதான்"னு தீபன் சொல்ல, சத்யராஜ்க்கு ஒரே ஆச்சரியம். அவரு நடிகர் ராஜேஷ்கிட்ட சொல்ல, அப்புறம் அப்படியே சினிமால பலருக்கும் தெரிஞ்சுது.

ரஜினி சார்க்கு நான் எழுதுன ஒரு வசனம், பட்டிதொட்டியெல்லாம் ஹிட் ஆச்சு. ஆனா, அந்த வசனத்தை எழுதுனதுக்காக அவர் என்னை திட்டுனாரு. அடுத்து ஒரு படத்துல அதே மாதிரி ஒரு வசனம் சொன்னப்போ பேச மாட்டேன்னு சொல்லிட்டாரு. ஆனா, அந்த வசனத்தை அப்போ அவரு பேசியிருந்தா, இப்போ அவருக்கு நல்லா யூஸாகியிருக்கும். அந்த வசனம் எந்த வசனம் தெரியுமா? பில்ட்அப் ரொம்ப ஓவரா இருக்கோ? அடுத்த பகுதியில அதை சொல்றேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு வகையில் இது பேய் படம் தான். ஆனால் பயமுறுத்தும் பேய் அல்ல, பாசக்கார அழகான பேய். மராட்டிய மொழியில் வெளிவந்த ஹேப்பி ஜர்னி என்ற படத்தின் கதை கருவை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் மல்லுவுட் சாயம் பூசி நெகிழ்வான ஒரு படமாக தந்திருக்கிறார் அஞ்சலி மேனன். பிருத்விராஜுக்கு அவரது தங்கை நஸ்ரியா மீது ரொம்ப பாசம். அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. நஸ்ரியாவிற்கு சின்ன குழந்தையிலிருந்து மூச்சு திணறல் பிரச்னை உண்டு. நஸ்ரியா மீது எத்தனை பாசம் வைத்திருப்பாரோ அந்த அளவிற்கு கால்பந்து விளையாட்டிலும் ஆர்வம் உண்டு. உடன் படிக்கும் பார்வதி மீது காதலும் உண்டு.

படிப்பில் மட்டும் ஆர்வம் இல்லை. இதனால் தாய்மாமன் அவரை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புகிறார். கால்பந்து கனவு கலைகிறது. பார்வதி காதல் பறிபோகிறது, எல்லாவற்றுக்கும் மேலாக தங்கை நஸ்ரியா இறந்து போகிறார். வெளிநாட்டில் இருந்து திரும்பும் பிருத்விராஜுக்கு ஊரையும் பிடிக்கவில்லை, யாரையும் பிடிக்கவில்லை. இந்த நிலையில் ஒருநாள் வீட்டின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வேனுக்குள் ஒரு காட்சியை பார்க்கிறார். அதில் நஸ்ரியா சிரித்துக் கொண்டிருக்கிறார்.

இறந்த அவர் பிருத்விராஜ் கண்ணுக்கும் அவர் செல்லமாக வளர்த்த நாய்குட்டிக்கும் மட்டும் தெரிகிறார். தங்கை ஆசைப்பட்டதை அண்ணன் நிறைவேற்றுகிறார். அண்ணன் இழந்தவற்றை ஆவியாக இருந்து நஸ்ரியா மீட்டுத் தருகிறார். அது எப்படி என்பதுதான் கதை. பிருத்விராஜ் வழக்கம்போல பண்பட்ட நடிப்பை தந்திருக்கிறார். துள்ளித்திரியும் பருவ காலம் சோர்ந்து திரியும் சோக காலம் என இரண்டையும் இரு கோணத்தில் பிரதிபலிக்கிறார். நீண்ட இடைவெளிக்கு பிறகு நடித்தாலும் நஸ்ரியாவின் குறும்பும், கலகலப்பும் அப்படியே இருக்கிறது.

அடுத்த ரவுண்டை அடித்து ஆடுவார் என்றே தெரிகிறது. பார்வதிக்கு அதிக வாய்ப்பில்லை. பிருத்விராஜின் தந்தையாக நடித்துள்ள இயக்குனர் ரஞ்சித், நஸ்ரியாவின் காதலனாக நடித்திருக்கும் ரோஷன் மேத்யூ, கால்பந்து பயிற்சியாளர் அதுல் குல்கர்னி என அனைவரும் தங்களுக்கான கேரக்டர்களை உணர்ந்து நடித்திருக்கிறார்கள். யதார்த்தமான கதையில் இறந்த பெண் மீண்டும் தோன்ற முடியுமா? இது சாத்தியமா என்ற லாஜிக் பற்றி கவலைப்படாமல் பார்த்தால் பாசமலர் அன்பில் உருகலாம். அன்பின் வலிமையை காட்சிகளால் அழகாக சித்தரிக்கிறது கூடே.




## சினிமாவிற்கு போன லதா ராவ்!

தென்னிந்திய மொழிகளில் 30க்கும் மேற்பட்ட தொடர்களில் நடித்தவர் லதாராவ். தொகுப்பாளினியாக மீடியா வாழ்க்கையை தொடங்கி சீரியல் நடிகை ஆனவர். கடந்த சில மாதங்களுக்கு முன்பு சின்னத்திரையிலிருந்து முழுமையாக விலகினார். சமீபத்தில் வெளியான கடிகார மனிதர்கள் படத்தில் கதையின் நாயகியாக நடித்தார். இனி தொடர்ந்து சினிமாவில் நடிக்கப்போவதாக லதாராவ் கூறியுள்ளார். 'சின்னத்திரையில் நடிகையாக அறிமுகமாகி 4 மொழிகளில் நடித்தும், வெள்ளித்திரையில் கால் பதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சின்னத்திரையில் இருந்து ஒதுங்கி, வெள்ளித்திரையில் முயற்சிகளை தொடர்ந்தேன். முதலில் வடிவேலுக்கு ஜோடியாக தில்லாலங்கடி என்ற படத்தில் காமெடியான கதாபாத்திரத்தில் நடித்து சினிமாவில் அறிமுகமானேன். அதைத் தொடர்ந்து சசிகுமார் இயக்கத்தில் ஈசன், சமுத்திரக்கனி இயக்கத்தில் நிமிர்ந்து நில், கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் முடிஞ்சா இவன புடி போன்று பல படங்களில் நடித்தேன். இப்பொழுது வெளியான கடிகார மனிதர்கள் என்ற படத்தில் கதையின் நாயகியாக அழுத்தமான ஒரு கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறேன். பரத்தின் 8, விவேக் தேவயானியின் எழுமின் படங்களிலும் நடித்துள்ளேன். தொடர்ந்து சினிமாவில் குணச்சித்திர பாத்திரங்களில் நடிப்பேன் என்கிறார் லதாராவ்.




## புதிய மர்மத் தொடர்

மர்ம திகில் தொடர்கள்தான் இப்போது சின்னத்திரை டிரெண்டிங். அந்த வரிசையில் ஜெயா தொலைக்காட்சியில் ஒளிபரப்பாக இருக்கும் புதிய தொடர் சுப்ரமணியபுரம். புதிய கதைக்களத்தில் திகில், மர்மங்கள் நிறைந்த தொடராக உருவாகிறது. வி. சங்கர் ராமன் தயாரிப்பில் உருவாகும் இந்த தொடரை ஹரீஷ் ஆதித்யா இயக்குகிறார். இவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது. கும்மாளம் என்கிற படத்தில் கதாநாயகனாக நடித்த இவர், மேலும் திருடா திருடி, மலைக்கோட்டை படங்களிலும், சில சின்னத்திரை தொடர்களிலும் நடித்துள்ளார். தற்போது சுப்ரமணியபுரம் தொடரின் மூலம் இயக்குனராக மாறியுள்ளார். இது சுப்ரமணியபுரம் என்கிற ஊரை பற்றிய கதை. அந்த ஊரில் உள்ள கோயிலில் உள்ள சிலை ஒன்று காணாமல் போகிறது.அதனால் அந்த ஊர் சாபத்திற்கு ஆளாகிறது. அதையடுத்து அந்த ஊரில் நடக்கும் மர்மங்களும், அதை நாயகன் எப்படி கண்டுபிடிக்கிறார் என்பதும் தான் கதை. எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் கதை எழுதியுள்ளார். சரவணக்குமார் ஒளிப்பதிவை கவனிக்க விவேக் சங்கர் வசனம் எழுதுகிறார். இந்த தொடரின் படப்பிடிப்பு முழுதும் கர்நாடகாவில் உள்ள வனப்பகுதியில் நடைபெறுகிறது. வரும் செப்டம்பர் முதல் ஜெயா டிவியில் ஒளிபரப்பாகிறது.




யுனிகா டில்கி மெண்டிஸ

## பெர்சனலை கேளாதீர்கள்!

சின்னத்திரையில் டான்சர், நடிகையாக கவனம் ஈர்த்தவர் ஸ்வேதா. இப்பொழுது திடீரென சன் டிவியில் "சண்டே கலாட்டா" நிகழ்ச்சியில் காமெடி ரோலில் என்ரியாகி இருக்கிறார். தேவதர்ஷினி விலகியதால், அந்த இடத்திற்கு வந்துள்ளார். நடிப்புத்துறைக்கு வந்தால் எந்த வேடமென்று பார்க்ககூடாதென தத்துவம் சொல்கிறார். அபூர்வராகங்கள் சீரியலில் வில்லியாக நடித்ததை உதாரணமாக சொல்லி, நல்ல வேடம் எது வந்தாலும் ஏற்றுக்கொள்வேன் என்கிறார். ஏன் காமெடி ரோல் ஏற்றீர்கள் என்ற கேள்விகூட அம்மணியை கடுப்பேற்றுவதில்லையாம், ஆனால் அடிக்கடி "எப்போது உங்கள் கல்யாணம்?" என கேட்பதுதான் பிடிக்கவில்லையாம். தனது பெர்சனல் விசயங்களில் யாரும் தலைபோடாதீர்கள் என கண்டிப்பாக சொல்லியுள்ளார்.

## படிக்காத நாயகி!

சன் டிவியின் அழகு சீரியலில் நடித்து வருகிறார் சஹானா. மாடலிங் செய்து விட்டு சினிமாவிற்கு வந்தவர். சில படங்களில் ஹீரோயினாக நடித்தார். பின்னர் சீரியலில் செட் ஆகிவிட்டார். அழகு, பகல் நிலவு இரண்டு சீரியல்களும் அவரது சீரியல் பயணத்தில் முக்கியமானவை என்கிறார். எதையாவது நினைத்தால், அதை அடைந்து விடுவாராம். ஆனால் அவரால் இன்னும் முடியாமலுள்ள ஒரேயொரு விசயம் படிப்பு. படித்துக் கொண்டிருந்த போதே நடிக்க வந்ததால், ஒரு டிகிரி கூட முடிக்கவில்லையென வருத்தப்படுகிறார். நடித்தபடியே படிக்கலாமென முயன்றாராம் அதுவும் முடியவில்லை. சன் டிவியின் அழகு சீரியலில் ரேவதியின் மகளாக நடிக்கிறார். நடிப்பையும் தாண்டி, நிஜயமாகவே ரேவதி அம்மாவை போலவே தன்னுடன் நடந்து கொள்வதாக நெகிழ்கிறார்.


நிஷாந்தி காரியவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணத் திரை



சுவாதி வர்மா

## மீண்டும் நடிக்க வரும் அனுஷ்கா

பாகுபலி வெற்றிக்கு பிறகு வெளியான பாக்மதி படமும் அனுஷ்காவுக்கு பெரிய வெற்றி படமாக அமைந்தது. அதன்பிறகு ஏராளமான படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தபோதும் திருமணத்திற்காக எதையும் ஏற்காமலிருந்தார். அவருக்கு தோஷமிருப்பதாக கூறி, பல கோயில்களிற்கும் குடும்பத்தினர் கூட்டி சென்றனர். திடீரென என்ன நடந்ததென தெரியவில்லை, மீண்டும் நடிக்க வந்துள்ளார் அனுஷ்கா. சிம்பு, திரிஷா நடிப்பில் கவுதம் மேனன் இயக்கிய விண்ணை தாண்டி வருவாயா படத்தின் 2ம் பாகம் தற்போது உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்படத்தில் சிம்பு ஹீரோவாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக அனுஷ்கா நடிக்க ஓகே சொல்லியிருக்கிறாராம். ஏற்கனவே வானம் படத்தில் சிம்புவுடன் இணைந்து நடித்திருக்கிறார் அனுஷ்கா.

## நடிகையின் இரண்டு கண்கள்

சமீபத்தில் வெளியான காட்டுப்பய சார் இந்த காளி படத்தில் நடித்தவர் ஐரா. வட இந்தியாவைச் சேர்ந்த இவர், சென்னையிலேயே பிறந்து வளர்ந்தவர். விளையாட்டு வீராங்கனையாக இருந்து நடிகை ஆனவர். 2014 மிஸ் சவுத் இந்தியா போட்டியில் டைட்டில் வென்ற பின்னர் 50க்கும் மேற்பட்ட விளம்பர படங்களில் நடித்து, அதன் மூலம் சினிமா வாய்ப்பு கிடைத்தது. சிறு சிறு கேரக்டர்களில் நடித்துக் கொண்டிருந்தவர், தாயம் என்ற படத்தின் முக்கியமான கேரக்டரில் நடித்தார். அந்தப் படம் சரியாக போகவில்லை. இப்போது காட்டுப்பய சார் காளி படம் அடையாளத்தை கொடுத்துள்ளது. இவர் ஒரு தடகள வீராங்கனை, ஓட்டப்பந்தயம், நீச்சல் போட்டிகளில் மாநில அளவில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறார். வட இந்திய பெண்ணாக இருந்தாலும், பிறந்த வளர்ந்தது எல்லாமே சென்னையில் தான். தமிழ் நன்றாக பேசவும், எழுதவும் செய்கிறார். அதனால் என் படங்களுக்கு நானே டப்பிங் பேசுவேன் என கூறுகிறார். நடிப்பும், விளையாட்டும் எனது இரண்டு கண்கள் மாதிரி என்கிறார் ஐரா.

## காசுக்காக இறங்கி வந்த தமன்னா!

திரிஷா, நயன்தாரா, அனுஷ்கா போன்றவர்கள் ஒரு பாடலுக்கு குத்தாடம் ஆடக் கேட்டால் எஸ்ஸாகி விடுகின்றனர். ஹீரோயின் அந்தஸ்தை தக்க வைப்பதில் அவர்கள் குறியாக இருக்கின்றனர். காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத், தமன்னா போன்றவர்கள் முன்னணி நடிகைகள் பட்டியலில் இருந்தாலும் கைநிறைய சம்பளம் என்றதும் குத்து பாடலுக்கு ஓ.கே சொல்கின்றனர். சமீபத்தில் கன்னடத்தில் உருவாகும் கேஜிஎப் படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆட வாய்ப்பு வந்தது. படத்தில் முக்கியமான சூழலில் இப்பாடல் இடம்பெறுவது பற்றி இயக்குனர் பிரசாந்த் கூறியபோது உடனே பாடலுக்கு நடனம் ஆட ஒப்புக்கொண்டார் தமன்னா. இதுபற்றி தமன்னா தரப்பில் கூறும்போது,'நடன அசைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் பாடல் காட்சிகளில் நடிக்க வாய்ப்பு வந்தால் அவர் அதில் நடிக்க ஆர்வமாக ஒப்புக்கொள்கிறார்' என்றனர்.

## இளையராஜா குடும்பமும் இப்படியா?

இசையமப்பாளர் யுவன் சங்கர் ராஜா தயாரிப்பில் வெளியாகியுள்ள படம் பியார் பிரேமா காதல். இளன் என்ற அறிமுக இயக்குநர் இயக்கியுள்ள இந்தப்படத்தில் ஹரிஷ் கல்யாண், பிக்பாஸ் ரைஸா நடித்துள்ளனர். ஓகஸ்ட் 9 அன்று வெளியாகியுள்ள இந்தப்படத்துக்கு எதிர்பார்த்த அளவுக்கு ஓப்பனிங் இல்லை. இந்நிலையில், இந்தப்படத்தைப் பார்த்துவிட்டு, இந்தத் திரைப்படத்தைக் கலாச்சாரச் சீரழிவு என்று கூறலாம் என்று தைரியமாக கருத்து தெரிவித்துள்ளார் இயக்குநர் சுசீந்திரன். படத்தின் கதைப்படி ரைசாவைக் காதலிக்கிறார் ஹரிஷ் கல்யாண். ரைசாவோ அவரது காதலை ஏற்க மறுக்கிறார். ஆனால் அவரோடு செக்ஸ் வைத்துக் கொள்கிறார். ரைசாவை கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறார் ஹரீஷ் கல்யாண். ஆனால் அவரோ கல்யாணம் வேண்டாம், லிவிங் ரிலேஷன்ஷிப் வைத்துக் கொள்ளலாம் என்கிறார். இதுபோன்ற கலாச்சார சீரழிவுகளை மையப்படுத்தி இந்தப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்று பலரும் கடுமையாக விமர்சிக்கின்றனர். அதோடு, இந்தப்படத்தை யுவன் சங்கர் ராஜா தயாரிப்பதால், இளையராஜா குடும்பத்தைச் சேர்ந்தவர் இப்படிப்பட்ட படத்தை தயாரிப்பதா? என்று சமூகவலைத்தளங்களில் விமர்சிக்கின்றனர்.

## மருந்தாகும் இளையராஜாவின் இசை!

உணவே மருந்து என்பதுபோல தற்போது இசையையும் மருந்தாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனம் அமைதியில்லாத சூழலில் மென்மையான பாடல்கள் கேட்டால் அமைதி திரும்பும் என்று அடிக்கடி இசை அமைப்பாளர்கள் பலர் தங்கள் பேச்சின்போது குறிப்பிடுவதுண்டு. இரவு நேரத்தில் இதமான பாடல்கள் மனதை அலைபாய விடாமல் சாந்தப்படுத்தி நல்ல தூக்கத்தையும் வரவழைக்கும் என சில மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் இளையராஜாவின் இசையை மருத்துவ துறையில் பயன்படுத்தும் முயற்சியை சிங்கப்பூரில் உள்ள பிரபல மருத்துவமனை மேற்கொண்டிருக்கிறது. இதுகுறித்து அந்த மருத்துவமனை நிர்வாகிகள் உள்ளடங்கிய டாக்டர்கள் குழு, இளையராஜாவை சந்தித்து பேசினர். இதற்காக பிரத்தியேகமான இசை கோப்பை இளையராஜா உருவாக்கி தந்திருக்கிறார். அவருடைய இசை ஆல்பங்கள், திரைப்பட பாடல்கள் குறித்து விரிவாக ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஓல்ட் கெட்அப்பில் அஜித்!

நான்காவது முறையாக சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடித்து வரும் விஸ்வாசம் படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்திலுள்ள ராமோஜி ராவ் பிலிம் சிட்டியில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் படப்பிடிப்பில் திலீப் சுப்பராயன் மாஸ்டர் இயக்கத்தில் அஜித் நடிக்கும் அதிரடியான சண்டை காட்சிகள் படமாக்கப்பட்டு வருகிறது. அப்பா மகன் என இரண்டு வேடத்தில் நடிக்கிறார் அஜித். இப்போது அஜித்தை வைத்து அப்பா கதாபாத்திரம் சம்மந்தப்பட்ட காட்சிகளை படமாக்கி வருகிறார்கள். திலீப் சுப்பராயன் படமாக்கிவருவதுகூட அப்பா கெட்டப்பில் அஜித் மோதும் சண்டைக்காட்சியைத்தான். இந்த சண்டை காட்சி அஜித் ரசிகர்களுக்கு பிடிக்கும்வகையில் படமாக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள் விஸ்வாசம் யூனிட்டை சேர்ந்தவர்கள். ராமோஜிராவ் ஸ்டுடியயோவில் படப்பிடிப்பு நடைபெற்று வந்த நிலையில், கருணாநிதிக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அஜித் சென்னை வந்திருந்தார். இறுதி அஞ்சலி செலுத்தியதும் ஐதராபாத் பயணமான அஜித் இப்போது படப்பிடிப்பில் கலந்துகொண்டு நடித்து வருகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொசாட் ஒப்ரேஷனில் ரஷ்யா புகுந்ததா?

## மொசாட் செய்த "பேப்பர் ஒப்ரேஷன்" 05

டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியரின் அழைப்பை ஏற்று பிரித்தானியாவிற்கு சென்ற மோசாய் திடீரென தொடர்பின்றி போன பின்னர்தான், எகிப்தில் இருந்த அப்துல் ரடாஹிக்கு உள்மனம் உறுத்த தொடங்கியது. மோசாய் மூலம் நல்ல பணமீட்டும் வாய்ப்பு கிடைத்தும், கொஞ்சம் அஜாக்கிரதையாக நடந்து கொண்டு விட்டேனோ என யோசித்தார்.

என்ன செய்யலாமென யோசித்தார். அவருக்கு ஒரு வழியும் தென்படவில்லை. மோசாயை தன்னிடம் அறிமுகப்படுத்தியவரிடம் சரணடைவதை தவிர.

நியூசிலாந்திற்கே போன் எடுத்தார் ரடாஹி. தனக்கு மோசாயை அறிமுகப்படுத்திய மார்ட்டின் ஹென்ரிக்ஸிடம் விசயத்தை சொல்லி, மாற்று வழி என்னவென்பதை கேட்பதை தவிர வேறு வழியில்லையென்று ரடாஹி நினைத்தார்.

சத்தமில்லாமல் விசயத்தை லீக் செய்யும் உத்தியாகத்தான் கே.ஜி.பி ரடாஹியை பயன்படுத்தியது. கே.ஜி.பி நேரடியாக இந்த விசயத்தில் சம்பந்தப்படாமல், மார்ட்டின் ஹென்ரிக்ஸை பாவித்து விசயத்தை லீக் செய்ய முயன்றது. மார்ட்டின் ஹென்ரிக்ஸ் மூலம் ரடாஹிக்கு கொடுத்து ஏற்கனவே சில விசயங்களை கே.ஜி.பி லீக் செய்திருந்தது. ஆனால் இம்முறை ஏதோ சிக்கல் நேர்ந்து விட்டது.

டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியருடன் பேசியதிலிருந்து, மோசாய் பிரித்தானியாவிற்கு விமானம் ஏறியது வரை மார்ட்டின் ஹென்ரிக்ஸிடம் சொன்னார் ரடாஹி. திடீரென மூன்று நாளாக மோசாயையும், டெய்லி நியூஸ் ஆசிரியரையும் தொடர்புகொள்ள முடியாமலிருப்பதாக சொன்னார்.

மார்ட்டின் ஹென்ரிக்ஸிற்கும் என்ன சொல்வதென தெரியவில்லை. தனது நண்பர்களிடம் பேசிவிட்டு சொல்வதாக அழைப்பை துண்டித்தார். கே.ஜி.பி ஆட்களுடன் பேச வேண்டுமென்பதை ரடாஹிக்கு அவர் சொல்லவில்லை. பின்னர், கே.ஜி.பி ஆட்களிடம் பேசினார். பின்னர் மீண்டும் ரடாஹியை அழைத்தார்.

"மோசாய் வைத்திருக்கும் ஆதாரங்கள் உங்களிடம் உள்ளதா?"

"இல்லை. அவர் அதை யாருக்கும் வெளியிட தயாராக இருக்கவில்லை. நேரடியாக பத்திரிகைக்கே கொடுப்பேன் என்றார். பத்திரிகைகளுடன் பேசுவதற்காக, சில ஆதாரங்களை மட்டும்தான் என்னிடம் தந்தார்"

"எப்படியான ஆதாரம்?"

"இஸ்ரேல் அணு ஆயுதம் தயாரிக்கலாமென ஊகிக்க தக்க சில புகைப்படங்கள் மட்டும்"

"சரி... நமது நண்பர் ஒருவர் உங்களை சந்திப்பார். அவரிடம் புகைப்படங்களை கொடுத்து விடுங்கள். நாங்கள் டெய்லி நியூசுடன் ஒரு கேம் (Game) ஆடிப்பார்க்கிறோம். மோசாயின் தொடர்பை தராவிட்டால், வேறு பத்திரிகையில் இந்த ஆவணத்தை வெளியிட்டு விடுவோம் என சொல்லலாம். இவ்வளவு ரிஸ்க் எடுத்து விட், விசயம் அவர்களிற்கு முன்பாக வேறு பத்திரிகையில் வருவதை அவர்கள் விரும்ப மாட்டார்கள்".

இதேசமயம், மொசாட் தலைமையகத்தில் இருந்த Shabtai Shavit இரண்டு நகர்வை செய்தார். மோசாய் பிரித்தானியாவிற்கு வருகிறார் என்றதுமே பிரித்தானியா மொசாட் அணியை தயாராக்கி, மோசாயை கண்காணிக்க வைத்தார். அவர்கள் மோசாயை நெருங்கவோ, சந்தேகப்படக்கூடிய விதமாக பின்தொடரவோ கூடாதென்பது கண்டிப்பான உத்தரவு. மோசாய் பிரித்தானியாவிற்கு வருவது, ரிஸ்க்கான விசயமொன்றிற்காக. ஆகவே அவர் கொஞ்சம் எச்சரிக்கை உணர்வுடன் இருப்பார். ஆகவே மிக எச்சரிக்கையாக மோசாயை அணுக வேண்டும்.

அதேசமயம், டெய்லிநியூஸ் ஆசிரியருடன் இந்த விசயத்தை பேசியது எகிப்தில் இருக்கும் ரடாஹி. இந்த விசயம் தெரிந்த இன்னொரு ஆள் வெளியில் இருக்கிறார். மொசாட்டின் கண் எகிப்திலும் இருந்து.

எகிப்தில் மொசாட் உளவாளிகள் சிலர், ரடாஹியை கண்காணிக்க ஆரம்பித்தனர். அந்த சமயத்தில் எகிப்துடன் இஸ்ரேலுக்கு பயங்கர பகையான காலம். இதனால், எகிப்தில் வைத்து சிக்கலான ஒப்ரேஷன்களை மொசாட் செய்வதில்லை. ரடாஹியில் ஒரு கண் வைத்திருந்தது. அவ்வளவுதான்.

இதற்குள் Shabtai Shavit இற்கு தலைசுற்றும் செய்தியொன்று எகிப்தில் இருந்து வந்தது. எகிப்திலிருக்கும் சில கே.ஜி.பி ஆட்களை, ரடாஹி சந்தித்தார், உணவகம் ஒன்றில் நடந்த இந்த சந்திப்பின் பின்னர், கே.ஜி.பி உளவாளிகளின் காரில் ஏறி ரடாஹி சென்றார். அவர்கள் சென்ற இடத்தை அடையாளம் காண முடியவில்லை. இதுதான் அந்த செய்தி.

எகிப்தில் ரடாஹியை கண்காணித்துக் கொண்டிருந்த மொசாட் உளவாளிகள் இந்த தகவலை அனுப்பியிருந்தார்கள்.

Shabtai Shavit இற்கு இப்போது வந்த கவலை இஸ்ரேல் அணுஆயுத இரகசியம்ரஷ்யாவிடம்போய்ச்சேர்ந்து விட்டதா? எதற்காக ரடாஹி, கே.ஜி.பி உளவாளிகளை சந்தித்தார்? ஒருவேளை இந்த விசயத்தின் பின்னால் கே.ஜி.பி இருக்கிறதா?

இதற்குள், எகிப்திலிருந்த ரடாஹி திடீரென பிரித்தானியாவிற்கு விமானம் ஏறினார். திடீரென ஒருநாள் இலண்டனில்டெய்லிநியூஸ்பத்திரிகை அலுவலகத்தின் கதவை தட்டினார். ஆசிரியரை சந்திக்க வேண்டுமென்றார். அவரது பெயர், எங்கிருந்து வந்தார், சந்திப்பின் காரணத்தையெல்லாம் கேட்டுவிட்டு, உட்கார சொன்னார்கள். சிறிதுநேரத்தில் சொன்னார்கள் "ஆசிரியர் மிக அவரமாக ஸ்கொட்லாண்ட் புறப்படுகிறார். நான்கு நாட்களிற்கு அவரை சந்திக்க முடியாது" என!

ரடாஹி விடாக்கண்டன். அலுவலகத்தில் சாகவாசமாக உட்கார்ந்து, இஸ்ரேல் அணு இரகசியத்தில் தானும், ஆசிரியரும் சம்பந்தப்பட்டது, மோசாய் இலண்டன் வந்தது எல்லாவற்றையும் கூறினார். "மோசாய்க்கு டெய்லி மெயில் பத்திரிகை ஆசிரியர் விமான டிக்கெட் அனுப்பியது. அவருடன் பேசியது எல்லாவற்றிற்கும் ஆதாரம் என்னிடமுள்ளது. நம்பிக்கையினடிப்படையில்தான் ஆசிரியருடன் விசயத்தை பகிர்ந்தேன். உங்கள் பத்திரிகை ஆசிரியரை சந்திக்கத்தான் மோசாய் வந்தார். அதற்கான ஆதாரம் என்னிடமுள்ளது. அடுத்தடுத்த நாளில் அதை வெளியிடவும் நேரிடலாம்" என்றுவிட்டு ரடாஹி புறப்பட்டு விட்டார். அடுத்த நொடியே விசயம், ஆசிரியருக்கு தெரிவிக்கப்பட்டது.

ரடாஹியின் இந்த திடீர் நடவடிக்கைக்கு காரணம் கே.ஜி.பி. டெய்லி நியூஸ் ஆசிரியருடன் தொடர்புபட்ட இந்தவிசயம்,பத்திரிகை அலுவலகத்தில் தெரிந்திருக்க வாய்ப்பில்லையென்று கே.ஜி.பி கணக்கு போட்டது. இப்படியான உயர்மட்ட விசயங்களை அச்சுக்கு போகும்வரை அலுவலகத்தில் உள்ள மற்றையவர்கள் அறியாமல், ஓரிரண்டு பேருக்குள்ளேயே விசயத்தை முடிப்பதுதான் பத்திரிகைகளின் பாணி. அலுவலகத்தில் எல்லோருக்கும் தெரிந்தால் இனி அது இரகசியமல்ல. விசயத்தை டெய்லி நியூஸ் பத்திரிகை வெளியிடாவிட்டால் கூட, எப்படியாவது லீக் ஆகிவிடும். எல்லோரும் பத்திரிகையாளர்கள். இவ்வளவு பெரிய விசயத்தை வைத்துக் கொண்டு நமது பத்திரிகை குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறதே என்ற வெறுப்பில், வேறு பத்திரிகைக்கார நண்பர்களிற்கு விசயத்தை லீக் செய்து விடுவார்கள்.

இவ்வளவு தூரம் ரிஸ்க் எடுத்ததற்கு ஒரு சிறு பலனும் கிடைக்காமல் விட டெய்லி நியூஸ் ஆசிரியர் டேவிட் மக்னெல் விரும்பவில்லை. என்ன செய்யலாமென யோசித்தார்.

இறுதியில், இஸ்ரேல் அணு இரகசியத்தை உடனடியாக தமது பத்திரிகையில் வெளியிட தீர்மானித்தார். ஆனால், அதற்கு முன் ஒரு காரியம் செய்தார்.

அது என்ன காரியம்? இந்தவிசயத்தில் எப்படியான அதிரடி திருப்பத்தை அது ஏற்படுத்தியதென்பதை அடுத்த வாரம் சொல்கிறோம். **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் துரைசிங்கம்
thuraisingamparames@gmail.com

# ஆங்கில மொழியின் முக்கியத்துவமும் சில நுட்பங்களும்

இக் கட்டுரையின் முக்கிய நோக்கமானது இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் எமது நாட்டின் ஒரேயொரு தொடர்பு மொழியாக விளங்குகின்ற ஆங்கில மொழியினை ஆவலுடன் கற்பதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதற்கான ஒரு முயற்சியாகும். ஊக்குவித்தல் என்பது சம்பந்தப் பட்டவர்களை சம்பந்தப்பட்ட விடயத்தினை பயிலுவதற்கு தூண்டுவதாகும். ஆத்துடன் நிகழ்ச்சியின் மற்றைய நோக்கம் செயல்புரியத் தூண்டுதல். அதாவது மாணவர்களை சுறுசுறுப்பாகவும் பயனுறு தியுடனும் வினைத்திறனுடனும் மற்றும் உளமார்ந்த ஆவலுடனும் அவர்களின் வருங்கால நன்மைக்காக ஆங்கில மொழியைக் கற்கத் தூண்டுதலாகும். இதன் மூலம் மாணவர்கள் தனிப்பட்ட ரீதியில் மட்டுமல்லாமல் அவர்களின் குடும்பம் அவர்கள் சார்ந்துள்ள சமூகம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி பரஸ்பர புரிந்துணர்வுடன் இயற்கையாக அழகுவாய்ந்த இந் நாட்டில் யாவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கான வழிசமைப்பதாகும்.

மேடைப் பேச்சு தொடர்பாக ஒரு சர்வதேச சஞ்சிகையில் "மேடையில் பேசுவது பலருக்கு பிடித்தமல்லாத விடயம்" எனக் கூறப்பட்டுள்ளது. அதற்கான காரணம் மேடைக்கூச்சம் அது ஒரு தற்காலிக இடர்ப்பாடாக இருப்பதால் உரிய பயிற்சி மூலம் வெற்றியடைய முடியும். "முயற்சி திருவினை யாக்கும்." உரை நிகழ்த்துவதானது மூன்று விடயங்களை உள்ளடக்கியது பேச்சாளர் பேசப்படும் விடயம் கேட்போர். அரிஸ்டோடில் என்பவர் பிரசித்தி பெற்ற கிரேக்க தத்துவவியலாளரும் விஞ்ஞானியுமாவர். மேடைப் பேச்சு தொடர்பான 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அவரது வரைவிலக்கணத்தின்படி மேடைப்பேச்சு என்பது "தூண்டுதல்" எனப் பொருள்படும். இவ்வரைவிலக்கணம் இன்றுவரை யாராலும் திருத்தியமைக்கப்படவில்லை.

ஒருவரிடம் கல்வித்தகைமை இருந்தும் தேவைக்கேற்ப பயனுறுதியான உரையொன்றினை நிகழ்த்த முடியாவிடின் அத்தகைய கல்வித் தகைமையின் பெறுமதி பு+ச்சியமாகும். எனவே உரிய பயிற்சியின் மூலம் சுய நம்பிக்கையினை வளர்த்து தங்களின் எதிர்காலத்தினை வளமாக்கிக் கொள்ளல்வேண்டும். மேடைக் கூச்சம் காரணமாக அறிஞர் ஒருவர் தமது பெறுமதியான அறிவினை தேவையானவர்களுக்கு வழங்க முடியாமல் போனது வருத்தத்துக்குரியதே. ஒரு கிராமத்தில் அப்படியான ஒரு அறிஞர் வாழ்ந்தார்.

மேடைப் பேச்சு அவருக்கு பிடிக்காத விடயம். ஆனால் கிராமத்தவர்களின் வற்புறுத்தல் காரணமாக தன்னிடம் மூன்று முறைக்குமேல் வேண்டுகோள் விடுக்கப்படல் கூடாது என்ற நிபந்தனையுடன் மேடைப் பேச்சுக்கு சம்மதித்தார். தேவையான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு பேச்சு ஆரம்பத்தில் வழமையான வணக்கத்தைக் கூறி தலையங்கத்தினைக் குறிப்பிட்டு இன்று என்ன விடயம் பற்றி பேசப் போகின்றேன் எனக் கேட்டார்.

சபையோரும் ஆமாம் எமக்குத் தெரியும்எனக்கூறினார்கள். அறிஞரோ தெரிந்த உங்களுக்கு எதையும் கூறிப் பயனில்லை என்று மேடையைவிட்டு சென்றுவிட்டார். இரண்டாவது முறையும் மேடைக்கு வந்தபோது அதே கேள்வியை அவர்களிடம் கேட்ட போது அவர்கள் எதுவுமெ தெரியாதெனக்கூறினார்கள் அறிஞரோ எதுவும் தெரியாத உங்களுக்கு ஏதனையும் கூறிப் பயனில்லை எனக்கூறி விட்டுச் சென்று விட்டார்.

கிராமத்தவர்களின் வற்புறுத்தல் காரணமாக மூன்றாவது முறை மேடைக்கு வந்த அறிஞர் முன்பு கேட்ட கேள்வியையே கேட்டபோது சபையோர் எங்களின் அரைவாசிப் பேருக்குத் தெரியும் மீகுதிப் பேருக்குத் தெரியாதெனக் கூறினார்கள். அறிஞரோ தெரிந்த அரைவாசிப் பேரும் தெரியாதவர்களுக்கு சொல்லிக் கொடுங்கள் எனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். அதற்கான காரணம் மேடைக்கூச்சமாகும். ஆனால் உரிய பயிற்சி மூலம் தங்களின் அறிவு ஆற்றல்களை மற்றவர்களுக்கும் அறியப்படுத்த உதவும்.

கல்வி என்ற பதத்தின் அர்த்தம் யாது?

மொழியொன்றினை கற்பது தொடர்பான நான்கு திறன்கள் எவையென்பதுடன் மாணவர்களின்; பேச்சுக்கு உதவும் உறுப்புக்கள் எவை?

மொழியொன்றினை கற்பதற்கு மேற்படி திறன்களை எவ்வாறு பொருத்தமான பயனுறுதியான வினைத்திறனுடனான மற்றும் முழு மனதுடன் மேன்மைப்படுத்தலாம்?

ஆங்கில மொழியினை ஏன் கற்க வேண்டும்?

"Nothing succeeds like success" என ஆங்கிலக்கூற்று உள்ளது. அதாவது ஒருவர் ஒரு விடயத்தில் வெற்றிபெற்றால் வாழ்க்கையில் ஏனைய விடயங்களிலும் வெற்றி பெறுவதற்கு வழிகோல முடியும். அதற்கான முதல் விடயம் கல்வியாகும். ஆத்துடன் மாணவர்கள் திடசங்கல்பம் உடையவர்களுக்கு [illegible] வெற்றிக்கான [illegible] ஒரு கூற்றும் உண்டு. அதாவது கடின உழைப்பின் மூலமே வெற்றி கிட்டும்.

மொழி என்றால் என்ன? குறிப்பிட்ட ஒரு நாட்டில் வாழுகின்ற மக்களினால் ஒருவருக்கொருவர் பேச்சு மூலம் அல்லது எழுத்து மூலம் தொடர்புகொள்ளும் முறையே மொழி எனப்படும். இவ் உலகிலே ஏறத்தாழ 7000 மொழிகள் இருப்பினும் ஆங்கில மொழி" சர்வதேச மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டமை நோக்கற்பாலதுடன் அதற்கான காரணம் அநேக நாடுகளில் பாவனையில் உள்ளமையாகும். இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச மட்டத்திலும் ஆங்கிலமொழியானது எல்லா வகையான தொடர்பாடல்களிலும் முக்திய பங்காற்றுவது நோக்கத்தக்கது.

ஆங்கிலம் உலக் மொழியாகவிருப்பதுடன் அம்மொழியினை நன்றாகப் பேச, எழுத இயலுமானால் ஒருவன் உந்துசக்தியைப் பெற்றுக்கொள்ள முடியும். சிறிது காலத்திற்கு முன்பு ஆங்கிலமொழி உயர் அந்தஸ்து உடைய வகுப்பினரின் சொத்தாகவே காணப்பட்டது.

எமது நாட்டில் ஆங்கிலமொழி தொடர்பு மொழியாக விளங்குவதுடன், தொழில் வாய்ப்பு, மற்றும் உயர்கல்வி பெறுதல், பல்வேறு காரணங்களுக்காக வெளிநாடு செல்லவும், வாழவும் வேண்டியிருப்பதால் ஆங்கில மொழியின் தேர்ச்சி இன்றியமையாததாக உள்ளமையுடன் தற்போது கிராமங்களிலும் ஆங்கில மொழிப் போதனை ஆரம்பிக்கப்பட்டிருப்பது கண்கூடு. இன்று ஆங்கிலமொழி பல அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் புலமைசார் கருவியாக உபயோகத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்வியில் அபிவிருத் தியடைந்து வரும் இந்நாட்டிலும் ஆங்கிலக் கல்வியினை புகட்டுவதிலும், கற்பதிலும் உசித்த முறைகள் பின்பற்றப்படின், ஏனைய மனித திறமைகள் போன்று ஆங்கிலமொழித் திறனையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

அறிவு என்ற சக்தி கல்வியின் ஊடாகவே பெறப்படுகின்றது. கல்வி ஒருவருடைய பல்வேறு ஆளுமைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றது. இலங்கையில் பெற்றோர் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதனை தமது முக்கிய பணியாகக் கருதுகின்றனர். அதன் பயனாக கல்வி மிகவும் போட்டித்தன்மையுடையதாகமரியுள்ளதுடன் புரிந்துகொள்ளக் கூடிய காரணங்களையிட்டு ஆங்கிலக் கல்வி மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

1815ம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கையில் ஆட்சி அமைத்ததுடன் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவும் பிரகடணப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் பாடசாலைகளும் நிறுவப்பட்டன. இலங்கை 1948ல் சுதந்திரம் அடைந்த பின்னர் 1950ன் நடுப்பகுதிகள் வரையில் ஆங்கிலமொழியின் தனித்துவம் இழக்கப்படவில்லை. பின்பு பொது நிர்வாகம், மற்றும் போதனா மொழிகளாக தாய்மொழிகள் அமுல்படுத்தப்பட்டதனால் ஆங்கிலமொழி புகட்டலிலும், கற்றலிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால் தற்போது வளர்ந்துவரும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப காரணிகள் மற்றும் எமது சமூகத்தினர் பெருமளவு புலம்பெயர்ந்து வாழ்வதனாலும் ஆங்கிலமொழியின் முக்கியத்துவம் உணரப்படுகின்றமை யதார்த்தமே. கடந்த சில வருடங்களாக நாட்டின் பல பாகங்களிலும் சர்வதேச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது.



விடயங்களை சரியாகக் கணித்து நாட்டில் சமூக, சமய மற்றும் தொடர்பாடல் விடயங்களில் முன்னேற்றம் காணலும் நாட்டில் ஒற்றுமையினை ஏற்படுத்தவும், வெளிநாடுகளுடனான தொடர்புகளைப் பேணவும் கல்வித் துறையில் முன்னேற்றம் அடையவும் ஆங்கிலக்கல்வி அவசியமானது. எனவே இளஞ் சந்ததியினரை ஆர்வமான முறையில் ஆங்கிலக் கல்வியினை பயனுறுதியுடனும், வினைத்திறனுடனும் கற்குமாறு ஊக்குவிப்பது எமது கடமை.

ஒரு மொழியினைப் பொறுத்த வரையில் உன்னிப்பாக செவிமடுத்தல்;, பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய திறன்கள் சம்பந்தப்பட்டுள்ளன, பிள்ளைகள் முதலில் உன்னிப்பாக செவிமடுத்தல்; மூலமே மொழியினை அறிந்து பின்னரே பேசவும், வாசிக்கவும், எழுதவும் பயில்கின்றனர். ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்ற குடும்பங்களில் பேசுவதற்கு ஆங்கிலம் பயன்படுத்தப்படுவ்தால் பிள்ளைகளும் இலகுவாக ஏனையவர்களிலும் பார்க்க கற்றுக்கொள்ள ஏதுவாகின்றது. எனவே மொழி ஆர்வலர் என்ற வகையில் குறிப்பாக அக்கறையுடன் பயில விரும்பும் இளஞ் சந்ததியினருடன் இக் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஐ ஆம் மோமோ"

# பலி கேட்கும் மோமோ சலஞ்



இலங்கையிலும்சிலஇளைஞர்களின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருந்ததுதான் ப்ளூ வேல் கேம். இந்த கேமால் இலங்கையை சேர்ந்த இளைஞர்கள் மட்டும் உயிரிழக்கவில்லை, உலகம் முழுவதுமே இந்த விளையாட்டை விளையாடிய பலர் உயிரிழந்துள்ளனர். ஒவ்வொருநாள் கொடுக்கப்படும் சவால்களை முடித்துக்க வேண்டும். பின்னர் விளையாட்டினால் தாக்கம் ஏற்பட்டு, இறுதியில் வெற்றி என்பது மரணம் என்று தெரிந்தும் இதை விளையாடினார்கள். இந்த விளையாட்டைப்பற்றின விழிப் புணர்வுகளை மக்களிடத்தில் கொண்டுவந்து, இந்த விளையாட்டி னால் போக இருந்த உயிர்களை காப்பாற்றினார்கள். தற்போது இதை உருவெடுத்தது போலவே, ஸ்மார்ட் போன்களில் மோமோ சலஞ் என்னும் விளையாட்டு உலாவருகிறது.

மோமோ சலஞ்சா! ஆம், ப்ளூ வேல் சலஞ் போன்று இந்த விளையாடுபவர்களை தற்கொலைக்கு தூண்டும் விளையாட்டு. மோமோ என்னும் கேம் ப்ளூ வேல் போன்று ஒன்லைன் வலைதளத்தில் விளையாடுவது அல்ல, நாம் மெசேஜ் அனுப்பி தொடர்புகொண்டுவரும் வட்ஸப்பில் விளையாடுவது. வட்ஸப்பில், அடையாளம் தெரியாத எண்ணிலிருந்து "நான் தான் மோமோ, என்னை உங்கள் மொபைலில் சேவ் செய்துக்கொள்ளுங்கள், நான் உன்னுடைய நண்பனாக இருக்க ஆசைப்படுகிறேன்" என்று அடை யாளம் தெரியாத மொபைல் எண்ணி லிருந்து மெசேஜ் வரும், பிறகு படிப்படியாக பேசி நம்முடைய அந்தரங்களை தெரிந்துகொள்கின்ற னர்.

நம்மை அவர்கள் வசமாக்க, குறிப்பிட்ட மனநிலையில் நம்மை மாற்றும் அளவுக்கான புகைப்படங் களை நமக்கு மெசேஜ் செய்கின்றனர். இதனால் அந்த சவாலை ஏற்றுக் கொண்டு விளையாடுபவர்கள் அவர் களின் கட்டுப்பாட்டிற்குள் செல்கி றார்கள். பிறகு விளையாடுபவர்களை பிளாக்மெயில் செய்வதற்காக அவர் களின் அந்தரங்க புகைப்படங்களையும் எப்படியோ மனதை மாற்றி பெற்று விடுகின்றனர். இறுதியில், நீ தற்கொலை செய்துகொள்ள வேண்டும் என்று கட்டளை விடுகிறார்கள். மேலும், அதை நான் பார்க்க வேண்டும் ஆகையால் அதை வீடியோ எடுத்துக்கொண்டே தற்கொலை செய்துகொள் என்று விளையாடுபவர்களை கொலை செய் கின்றனர். மேலும் மோமோ அனுப் பும் புகைப்படங்களில் மால்வேர் வைரஸ்களை அனுப்பிமொபைலையும் ஹக் செய்கிறார்கள். இந்த மிருகத்தனாமன வேலையை உலகில் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் ஹக்கர்தான் செய்கிறார் என்கிறார்கள்.

இந்த விளையாட்டால் அர்ஜென்டி னாவைச்சேர்ந்த 12 வயது குழந்தை உயிரிழந்துள்ளது. 12 வயது குழந்தை என்பதால் அந்த குழந்தையின் வயதிற்கு ஏற்றவாறு,' நான் இரவில் வந்து உன்னை பயம் செய்வேன் அல்லது உன்னுடைய அப்பா அம்மாவை மிரட்டுவேன்' என்று பிளாக்மெயில் செய்து அச்சிறுமியை தற்கொலை செய்ய தூண்டியுள்ளனர்.

அந்த மெசேஜில் நீ தற்கொலை செய்யும்போதே அதை வீடியோவும் எடுக்கவேண்டும் என்று கட்டளையிட அந்த 12 வயது சிறுமியும் அந்த மோமோ என்னும் கதாபாத்திரத்திற்கு அடிமையாகி தற்கொலை செய்துள் ளார். இந்த சிறுமி தன்னுடைய வீட்டின் பின்புறத்திலுள்ள ஒருமரத்தில் தூக்கிலிடுவதை சிறுமியின் அண்ணன் வீட்டிலிருந்தபடி பார்த்து, தன் பெற்றோர்களை அழைத்துக்கொண்டு தடுக்க வந்துள்ளான்.

ஆனால், அதற்குள் அந்த 12வயது சிறுமி உயிரிழந்தாள். பின்னர் அச்சிறுமியின் பெற்றோர் இதுகுறித்து காவலர்களிடம் புகாரளிக்க, மோமோ என்று பேசியது ஜப்பான் எண் மூலமாக பேசியிருக்கிறார் என்று கண்டுபிடித்தனர்.

பின்னர் இதுபோன்று கொலம்பியா, மெக்சிகோ ஆகிய எண்களிலும் பிற நாடுகளில் மோமோ சலஞ் நடைபெறுகிறது. மோமோ சலஞ் வட்ஸப் எண்ணை சேவ் செய்தால், ஜப்பானைச் சேர்ந்த பயமூட்டும் சிற்பமான மோமோவை ப்ரொபைல் படமாக வைத்திருக்கிறது. இந்த







மோமோ சிற்பத்திற்கும், சிற்பத்தை செதுக்கியவற்கும் இந்த சலஞ்சில் சம்மந்தம் இல்லை என்கிறார்கள்.


இதுவரை இலங்கையில் இந்த விளையாட்டால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. என்றாலும், பெற் றோர்கள் குழந்தைகளிடம் ஸ்மார்ட் போன்களை பயன்படுத்த கொடுக்கை யில் என்ன செய்கிறார்கள் என்பதை பாருங்கள்... விழிப்புணர்வுடன் இருங்கள்.

---

தொடர்ச்சி 10-ம் பக்கம்...

கட்டடங்களின் கூரைகளின் மீது பட்டு ஆரஞ்சு நிறமாகத் தெறித்து அந்த நகருக்கே அந்த நிறத்தைப் பூசியிருக்கிறது. சுமார் 30 மீற்றர் உயரத்து மதில்களின் மீது நின்று கீழ் நோக்கி அந்த நகரைப் பார்ப்பது ஒரு வலிமைமிக்க உணர்வை உண்டாக்கியது. இந்த நகரையும் குறிவைத்து 1990 இல் யூகோஸ்லாவியப் போரில் செர்பர்கள் தாக்கினார்கள். பெரும் சேதங்கள் விளைந்து, போர் முடிந்தபின் இக்கட்டடங்கள் பல திருத்தப்பட்டன என்பதை நினைவு கூராமல் இருக்க முடியவில்லை.

டுப்ரோவ்னிக் நகரம், அதன் குறுகலான வீதிகள், துறைமுகம் ஆகியவையைக் கோட்டை மதில்களில் நிற்கும்போது காண முடிகிறது. இன்னொருபக்கம்அதிரியாட்டிக்கடல் தனது அலையாடலில் விதம் விதமான நீல நிறங்களை திரைகளாக உண்டாக்கி விளையாடிக்கொண்டிருந்தது.



எங்கள் படகு துறைமுகத்தில் எங்களுக்காக எதிர்பார்த்துக்கொண்டி ருந்தது. நேரம் நடுப்பகலை நெருங்கியிருந்தது. இன்னும் அதிகமான படகுகள் உல்லாசப் பயணிகளுடன் துறைமுகத்தில் நங்கூரம் போடக் காத்துக்கொண்டிருந்தன.

அந்த நெரு[illegible] விலகிக்கொண்டு பாரிய கடலுக்குள் நுழைந்த எங்கள் சுற்றுலாப்படகின் அடுத்த நிறுத்துமிடம் லொக்ரும் என்ற தீவு. அதை அடைய சுமார் 20 நிமிடங்கள் போதுமாக இருந்தது.

அத்தீவுக்குள் நுழைவதற்கென்று தனியான கட்டணம் இருக்கிறது. [illegible] போன்று சுற்றுலாப் படகுகளில் வருபவர்களுக்கான கட்டணத்தில் தீவுக்கான கட்டணமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

லொக்ரும் தீவு டுப்ரோவ்னிக் நகரையும் அதன் முக்கிய துறைமுகத் தையும் கடலின் ஆக்ரோஷத்திலி ருந்தும், எதிரிகளின் தாக்குதல்களிலி ருந்தும் பாதுகாப்பது போன்ற இயற்கை அமைப்பில் உருவாகியிருக்கிறது. அதனால் டுப்ரோவ்னிக் நகர மேற்றி ராணியார் அங்கே பெனடிக்ட் மதத் துறவிகள் ஒரு மடாலயம் கட்டிக்கொள்ள 1023ம் ஆண்டில் உத்தரவு கொடுத்தார். அந்த மடா லயத்துடன் கட்டப்பட்டிருக்கும் பாதுகாப்புக் கோபுரத்திலிருந்து காலநிலையையும், கடற்போக்கு வரத்தையும் கவனித்துத் தேவையான எச்சரிக்கையை டுப்ரோவ்னிக் நகருக்குக் கொடுக்கவேண்டியது மடா லயத்தினரின் பொறுப்பாக்கப்பட்டது. அத்தீவு மடாலயத்தினரின் உடமை யாகக் கொடுக்கப்பட்டது. தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28 நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்



# ஏற்றுமதிக்குத் தேவையான ஆவணங்கள்!

ஒரு பொருளுக்கான விலையை நிர்ணயம் செய்து இறக்குமதியாளரிடம் தெரிவித்து ஓர்டரைப் பெற்றபின், நீங்கள் செய்ய வேண்டிய முக்கியமான வேலை அதற்கான ஆவணங்களைத் தயார் செய்வதே.

ஏற்றுமதிக்குத் தேவையான ஆவணங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று, ஷிப்மென்டுக்கு முன் தேவையான ஆவணங்கள், ஷிப்மென்டுக்குப் பின் தேவையான ஆவணங்கள். இந்த இதழில் ஷிப்மென்டுக்கு முன் தேவையான ஆவணங்களைப் பற்றி மட்டும் பார்க்கலாம்.

ஷிப்மென்டுக்குமுன் தேவையான ஆவணங்கள் (Pre-Shipment Documents)

ஷிப்மென்டுக்கு முன் எட்டு ஆவணங்களை நாம் தயார் செய்ய வேண்டும். அந்த ஆவணங்களை இரண்டு பேர் தயார் செய்ய வேண்டும். ஒருவர், ஏற்றுமதியாளர்; மற்றொருவர், சி.எச்.ஏ (Customs House Agent). தேவையான அந்த எட்டு ஆவணங்கள் இனி...

1. **பெர்ஃபார்மா** (Proforma) **இன்வொய்ஸ்:** இறக்குமதியாளர் உங்களிடம் பொருளை வாங்க விரும்புகிறார். அவருக்கு நீங்கள் உங்கள் பொருளின் விலையைத் தெரிவிக்க வேண்டும். அதற்காகத் தயார் செய்வதுதான் பெர்ஃபார்மா (Proforma). அதில் உங்கள் பொருள் பற்றிய விவரங்களும், உங்கள் முகவரி, தொடர்பு எண், இமெயில் போன்ற விவரங்களும் இருக்க வேண்டும்.
2. **கொன்ஃபர்மேஷன் லெட்டர்** (Conformation letter): இறக்குமதியாளரிடமிருந்து ஓர்டர் குறித்து உறுதி பெறுவதுதான் கொன்ஃபர்மேஷன் ஆவணம்.
3. **சேல்ஸ் அக்ரிமென்ட்** (Sales Agreement): இறக்குமதியாளரிடமிருந்து உங்கள் பொருளுக் கான ஓர்டருக்கு கொன்ஃபர்மேஷன் கிடைத்தபிறகு இருவரும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொள்வதுதான் இந்த சேல்ஸ் அக்ரிமென்ட். ஏற்றுமதிக்கு இது மிகவும் முக்கியமான ஆவணம். இதில் ஏற்றுமதி ஓர்டர் குறித்த முழுமையான விவரங்கள் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இதில்தான் உங்கள் வங்கிக்கணக்குவிவரங்களும் இருக்க வேண்டும். இந்த ஒப்பந்த ஆவணத்தில் இரண்டு பேரின் கையெழுத்தும் இருக்க வேண்டும்.
4. **கொமர்ஷியல் இன்வொய்ஸ்:** அடுத்ததாக, உங்களுடைய ஓர்டருக்கான இன்வொய்ஸைத் தயார் செய்ய வேண்டும். அதில் இன்வொய்ஸ் எண், உங்கள் ஜி.எஸ்.டி எண், பொருளின் விலை, இறக்குமதியாளர் குறித்த விவரங்கள், ஷிப்மென்ட் செய்யப்படும் துறைமுகம், பேமென்ட் முறைகள் ம்ற்றும் இன்கோடேர்ம்ஸ் (கடந்த இதழில் விரிவாகப் பார்த்தோம்) போன்ற விவரங்கள் எல்லாம் இருக்க வேண்டும். இது, ஏற்றுமதி பிஸ்னஸின் 'மதர் டொக்குமென்ட்' ஆகும்.
5. **பேக்கிங் லிஸ்ட்:** பின்னர் ஏற்றுமதி செய்யப் போகிற பொருள்களின் பேக்கிங் லிஸ்ட்டைத் தயார் செய்ய வேண்டும்.
6. **சேர்ட்டிஃபிகேட் ஒஃப் ஒரிஜின்:** உங்கள் பொருளுக்கான பிறப்புச் சான்றிதழ். ஏற்றுமதி செய்ய இந்தச் சான்றிதழ் அவசியம். இதனை சேம்பர் ஒஃப் கொமர்ஸ் தரப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
7. **ஜி.எஸ்.பி** (Generalized System of Preferences): ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், நாடுகளுக் கிடையிலான வர்த்தகத்தை மேம்படுத்தவும் சில திட்டங்கள் உள்ளன. அவற்றில் ஒன்றுதான், இந்த ஜி.எஸ்.பி. ஏற்றுமதி செய்யும்முன் இந்த ஆவணத்தையும் பெற்றிருப்பது அவசியம். இதை 'எக்ஸ்போர்ட் இன்ஸ்பெக்ஷன் ஏஜென்சி'யிடமிருந்து பெறலாம்.
8. **எஸ்.டி.எஃப்** (Statuatory Declaration Form): இந்த எஸ்.டி.எஃப் ஆவணமானது வங்கியிடம் சமர்ப்பிக்கப் பட வேண்டும். இதில் உங்களுடைய ஷிப்பிங் பில் நம்பரைக் குறிப்பிட்டு, இந்தப் பொருளை, நான் இந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறேன்; இதற்கான பணம் இவ்வளவு நாளில் வந்துவிடும் என்று தெரிவிக்க வேண்டும்.

பிறகு ஷிப்பிங் பில் மற்றும் தேவையான பிற ஆவணங்களைத் தயார் செய்ய வேண்டும். அதற்கு உங்களுடைய இன்வொய்ஸ் ஆவணங்கள், பேக்கிங் லிஸ்ட் உள்ளிட்ட ஆவணங்களை [illegible] கொடுத்தால், [illegible] உள்படத் தேவையான பிற ஆவணங்களையும் தயார் செய்வார். இந்தச் சமயத்தில், இன்வொய்ஸ்களின் வகைகள் பற்றியும் சொல்லிவிடுகிறோம்.

ஏற்றுமதி பிஸ்னஸில் நான்கு இன்வொய்ஸ் வகைகள் உள்ளன. 1. பெர்ஃபார்மா இன்வொய்ஸ், 2. கொமர்ஷியல் இன்வொய்ஸ், 3. கன்சுலர் இன்வொய்ஸ், 4. டாக்ஸ் இன்வொய்ஸ்.

பெர்ஃபார்மா இன்வொய்ஸ் தயார் செய்யும் போது உங்கள் ஸ்ரொக்கில் எந்த மாற்றமும் இருக்காது. ஆனால், கொமர்ஷியல் இன்வொய்ஸ் தயார் செய்யும்போது உங்களுடைய ஸ்ரொக்கில் மாற்றம் இருக்கும். சில நாடுகளில் கொமர்ஷியல் இன்வொய்ஸ் வேண்டும் என்பார்கள். சில நாடுகளில் ஒரிஜினல் இன்வொய்ஸ் வேண்டும் என்பார்கள். அனைத்துமே ஒரிஜினல் இன்வொய்ஸ் தான். ஆனால், இங்கு குறிப்பிடப்படுவது, இன்வொய்ஸ் ஆவணத்தில் ஒரிஜினல் என்ற சீல் வைத்துத் தயார் செய்வதுதான் ஒரிஜினல் இன்வொய்ஸ் ஆகும்.

இந்த இன்வொய்ஸ்கள் அனைத்துமே டொலர் மதிப்பில்தான் குறிப்பிடப்பட வேண்டும்.

ஜி.எஸ்.டி வரி நடைமுறையில், நீங்கள் அனுப்பும் பொருளுக்கு வரி இன்வொய்ஸ் தயார் செய்ய வேண்டும். நீங்கள் அனுப்பும் பொருள்களுக்கு ஜி.எஸ்.டி வரி இல்லையெனில், வரி இன்வொய்ஸில் குறிப்பிடத் தேவையில்லை. ஆனால், நீங்கள் அனுப்பும் பத்து பொருள்களில் ஒரு பொருளுக்கு வரி இருந்தாலும், அதற்கு 'வரி இன்வொய்ஸ்' தயார் செய்ய வேண்டும். வரி இன்வொய்ஸில், இன்வொய்ஸ் நம்பர், போர்ட் டூ போர்ட், எ.எஸ் கோட், வரி பர்சென்டேஜ், ஐ.ஜி.எஸ்.டி (விரிவாகப் பிறகு பார்ப்போம்), வங்கி விவரங்கள் ஆகியவை இடம்பெற வேண்டும்.

கன்சுலர் இன்வொய்ஸ் . என்பது நீங்கள் அனுப்பும் பொருளுக்கு அந்த நாட்டு அனுமதி பெறும் இன்வொய்ஸ் ஆகும். ஒரு பொருளை ஒரு நாட்டுக்கு அனுப்பப் போகிறோம் எனில், அந்தப் பொருளை அந்த நாட்டில் இறக்குமதி செய்ய அனுமதி உண்டா என்பதை உறுதி செய்வதற்கு, அந்த நாட்டின் கன்சுலேட் அலுவலகத்தில் அந்த நாட்டுப் பிரதிநிதியிடமிருந்து அட்டெஸ்டெட் வாங்கி அனுப்ப வேண்டும். இந்த கன்சுலர் இன்வொய்ஸ் தேவையா என்று இறக்குமதியாளரிடம் கேட்டுத் தயார் செய்யவும்.

ஏற்றுமதி பிஸ்னஸில் தேவையான ஆவணங்களைக் கொடுக்கத் தவறினால், உங்கள் எல்.சி (LC-Ltter of Credit) பாஸ் ஆகாது. எனவே, ஆவணங்களைத் தயார் செய்து, சமர்ப்பிப்பது அவசியம்.

(ஜெயிப்போம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகவலயக் கல்வி அலுவலகத்தில் பாடசாலைகளும் மாணவர்களும்

காவலூரான்

இன்றைய அதிநவீனதொழில்நுட்பம் சார் உலகில் கல்விமுறைமை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பெரும் சவால்கள் நிறைந்ததாகவுள்ளது. மாறிவரும் உலகில் மாற்றமுறும் மாணவர் சமூகத்தை வழிநடத்துவதற்குஅர்ப்பணிப்புமிக்க கல்விச் சமூகம் அவசியம் என்பதற்கு இரு வேறு கருத்துக்கள் இருக்காது. இலவசக்கல்வி தொடங்கி ஸ்மாட் வகுப்பறை வரையான காலமாற்றங்களிற்கு அமைவான கல்விச் செயற்பாடுகள் பெருமெடுப்பில் முன்னெடுக்கப்படுகின்றன. இவை காலத்தின் தேவைமட்டுமன்றி கல்வி உலகிற்கு மிக அவசியமான ஒன்றும் கூட.

கல்வி அமைச்சு, பிராந்திய கல்வித் திணைக்களம், கல்வி வட்டாரம், பாடசாலைகள் என இருந்த இலங்கையின் கல்விமுறைமையானது மாகாணசபைகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து பிராந்திய கல்வித் திணைக்களங்களிற்குப் பதிலாக பரவலாக்கப்பட்ட அதிகாரங்களுடன் மாகாண கல்வி அமைச்சு தோற்றம் பெற்றது. தனக்கு அதிகாரமளிக்கப்பட்ட விடயங்களில் கொள்கை வழிகாட்டல்களை வழங்கி நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு மாகாண கல்வி அமைச்சுக்கு ஏற்பட்டது. மாகாணத்தின் சகல கல்வி, நிகழ்ச்சித் திட்டங்களையும் திட்டமிட்டு அமுல்படுத்தி முகாமை செய்ய வேண்டிய கடப்பாடு மாகாணகல்விப் பணிப்பாளருக்கு ஏற்பட்டது.

மாகாண கல்வி அமைச்சின் கீழ் மாகாணகல்விப் பணிப்பாளரது செயற்பாடுகள் முன்னெடுப்பதற்கு பிரதேசசபைகளின் எல்லைகளுடன் இணைந்ததாக கல்விக்கோட்டங்கள் அமைக்கப்பட்டன. 1992 இல் இவற்றின் எண்ணிக்கை 268 ஆக இருந்தது. நிர்வாகரீதியாக நெருக்கீடுகளைச் சந்தித்து திருப்தியான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 1995 இல் வலயக்கல்வி அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. கல்வியின் தர மேம்பாட்டில் கவனம் செலுத்தத்தக்க வகையில் 5 தொடக்கம் 8 வரையான கோட்டங்களைக் கொண்டதாக வலயக் கல்வி அலுவலகங்கள் செயற்படத் தொடங்கின.

மாகாணத் கல்வித் திணைக்களத்தின் கீழ் வலயக்கல்வி அலுவலகங்களும் அவற்றின் கீழ் கோட்டக்கல்வி அலுவலகங்களும் சுமார் 23 வருடங்களாக இயங்கி வருகின்ற போதிலும்இவற்றால்தமது ஆளுகைக்கு உட்பட்ட பாடசாலைகளின் தர மேம்பாட்டை உறுதிப்படுத்த முடிகின்றதா? என்றால் இல்லை, முயல்கிறது என்றே கூற வேண்டும். ஆக பாடசாலைகளின் தர மேம்பாடு ஆசிரிய் வள சமச்சீரான பரவலாக்கல் மாணவர்களின் பரம்பல் இவை கொண்டுள்ள வினைதிறன் மற்றும் வினைதிறன் பற்றிய நோக்கு மிக அவசியமாகின்றது.

இலங்கையில் 9 மாகாண கல்வித் திணைக்களங்கள், 93 வலயக் கல்வி அலுவலகங்கள், 324 கோட்டக் கல்வி அலுவலகங்கள் உள்ளன. 354 தேசிய பாடசாலைகளையும், 9765 மாகாணப் பாடசாலைகளையும் கொண்டு தமது கல்விச் சார் சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றன. இங்கு வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திலுள்ள தீவக வலயக் கல்விஅலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்ட சில பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக சில அவதானங்களை செலுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகவுள்ளது.

### வடக்குமாகாணமும் தீவக வலயமும்

வடக்கு மாகாணத்தில் 1010 பாடசாலைகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 120 பாடசாலைகளில் 20இற்கு குறைவான மாணவர்களும் 250 பாடசாலைகளில் 50இற்கு குறைவான மாணவர்களும் உள்ளனர். இதற்கு பிறப்பு வீதம் குறைவு என்ற வாதம் சிலரால் முன்னெடுக்கப்படலாம். ஆனால் போதிய திட்டமிடல், ஒழுங்கமைப்பு, செயற்படுத்தல் இல்லை என்ற காரணமும் பரவலாகவுள்ளது. கிராமங்களிலுள்ள வர்க்க முரண்பாடு, கிராமங்களில் இருந்து நகரங்களிற்கு மாணவர்கள் செல்லுதல், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வெளியேற்றம், நல்ல அல்லது பெரிய பாடசாலைகளில் மாணவர்களை சேர்க்கும் பெற்றோரின் மனோநிலை என காரணங்கள் நீண்டு செல்லும்.

தீவக வலயக்கல்வி அலுவலகத்தில் நான்கு கோட்டக் கல்வி அலுவலகங்களும், 64 பாடசாலைகளும் இயங்கி வருகின்றன. சுமார் 8500 வரையான மாணவர்களையும், 600 வரையான ஆசிரியர்களையும் கொண்டமைந்த தீவக வலயக்கல்வி அலுவலகம் இலங்கையில் 93 வலயமாக அதாவது கடைசி வலயமாக தனது பெறுபேறுகளைக் கொண்டுள்ளது. மாற்றமுறும் கல்வி உலகில் தன்னை மாற்றியமைக்காத வலயக்கல்வி அலுவலகமாதீவகம்என்றவினாபலரது மனங்களில் பல காலமாகவுள்ளது.

### அதிகாரிகளின் நியமனம்

சுமார் ஒரு வருடமாக வேலணை கோட்டத்திற்கு கோட்டக்கல்வி அதிகாரி நியமிக்கப்படவில்லை. நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரியே கடமை நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றி வருகின்றார். குறைந்தது ஐந்து வருடங்கள் பணியாற்றக் கூடியவர்கள் அல்லது பணியாற்ற வேண்டும் என்ற நிலையில் வலயக்கல்வி[illegible] நியமிக்கப்ப[illegible] வருடங்களிற்கு உட்பட்ட நிலையில் பணியாற்றும் அல்லது பணியாற்றிய பணிப்பாளர்கள் அண்மைய ஆண்டுகளில் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் நியமனம் பெற்றனர்.

தொடர்ச்சியான கால நீட்சியில் தலைமைப் பொறுப்புக்கள் நியமனம் பெறும் போது மேம்பாடு மற்றும் அபிவிருத்தி நோக்கில் கல்விசார் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். தீவகத்தில் மட்டுமன்றி வடமாகாணத்திலுள்ள அநேக வலயங்களில் பணிப்பாளர்களின் நிலை இவ்வாறே உள்ளது. யாழ்ப்பாணத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு நீதிமன்றம் வரைச் சென்று சட்ட நியதிகளுக்கு அமைவாகவே வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்கும் கீழ் நிலையான நிர்வாகத்தை வடக்கு மாகாண கல்வி அமைச்சு கொண்டுள்ளமை கல்விப் புலத்தார் வெட்கப்படவேண்டிய நிலையையே வெளிப்படுத்துகிறது.

### தீவக பாடசாலைகள்

தீவக வலயக்கல்வி அலுவலகத்தின் நிர்வாகஎல்லைக்குள் 64 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 10 பாடசாலைகளில் க.பொ.த உயர்தரப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. க.பொ.த உயர்தரப் பிரிவுகளைக் கொண்டிருந்த சில பாடசாலைகள் 1990ம் ஆண்டு இடப்பெயர்வுடன் உயர்தரக் கல்வியை நிறுத்திவிட்டன. ஆசிரியர், மாணவர்களின் வளப் பற்றாக்குறை பிரதான காரணமாக அமைந்தன. இந்தவருட ஆரம்பத்தில் யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கான அனுமதிகள் கிடைத்தபோதும் அதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

### ஆயுள் முடிவடையும் பாடசாலைகள்

யா/நாரந்தனை கணேசா வித்தியாலயம் நீண்ட வரலாற்றைக் கொண்ட பாடசாலை. இப் பாடசாலையின் [illegible] மாணவர்களில் வடக்கு [illegible] கல்விஅமைச்சின் செயலாளரும் ஒருவர். இப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 11 வரை 16 மாணவர்கள் மட்டுமே கல்வி கற்று வருகின்றனர். இப் பாடசாலையின் ஆசிரியர்களின் எண்ணிக்கை மாணவர் தொகையை விட அதிகமாகவுள்ளது. அதேநேரம் . யா/நாரந்தனை றோ.க.வித்தியாலயத்தில் தரம் 1 தொடக்கம் 11 வரை 55 மாணவர்களே உள்ளனர்.

இவ் இரு பாடசாலைகளிலும் கணேசா வித்தியாலயத்தை தரம் 1 தொடக்கம் 5 வரையான பாடசாலையாகவும், நாரந்தனை றோ.க பாடசாலையை தரம் 6 தொடக்கம் 11 வரையான பாடசாலையாகவும் வகுப்புக்களை மாற்றியமைத்து மாணவர்களை இரண்டுபாடசாலைகளிற்கும் அனுப்பி வைத்தால் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதுடன் கல்வித்தர மேம்பாட்டையும் எதிர்பார்க்க முடியும். இதற்கு சமூகநிலையில் மாற்றம் ஏற்பட்டால் மட்டுமே நிர்வாக ரீதியான செயற்பாடுகள் சாத்தியமாகும்.

யா/மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் (1990 இற்கு முன் உயர்தர வகுப்புக்கள் நடைபெற்றன.) தரம் 1 தொடக்கம் 11 வரை 96 மாணவர்களே உள்ளனர். ஆசிரியர் வளம் போதுமானதாகவுள்ளது. இதேநிலையில் யா/மண்டைதீவு றோ.க.பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 7,வரை (2017 ம் ஆண்டில் தரம் 6 ஆரம்பிக்கப்பட்டது.) 130 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர். ஆக இப்பிரதேசத்தில் இருந்து 60 வரையான மாணவர்கள் யாழ்ப்பாண பாடசாலைகளில் தமது கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க சென்று வருகின்றனர்.

பௌதீக வளங்களை கொண்டுள்ள மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் தரம் 06 தொடக்கம் 11 வரையும், மண்டைதீவு றோ.க பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 5 வரையும் வகுப்புக்கள் இடம்பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டால் யாழ்ப்பாணம் சென்றுவரும் மாண

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் கேர்ள்ஸ் கலக்கும் மியூசிக்கலி ஆப் பிறந்த கதை இதுதான்!

ஒவ்வொரு காலகட்ட இளைஞர்களுக்கும் ஏற்றாற்போல நாம் பயன்படுத்தும் சமூகவலைதளங்கள் மேம்பட்டுக்கொண்டே செல்கின்றன. இமெயில் (e-mail), பிளாக் (blog), ஃபேஸ்புக் (facebook), வட்ஸ்அப் (whatsapp), இன்ஸ்ட்டா (instagram) என்று அந்ததந்த சமயத்தில் பிரபலமான சமூக வலைதளங்கள் மாறிக்கொண்டே வந்து தற்போது மியூசிக்கலியில் வந்து நிற்கிறது.

கொஞ்சம் ரெக்னோலஜியிலும், வாழ்க்கையிலும் அப்டேற் ஆனவர்கள் பலர் காலையில் விழித்தவுடன் பயன்படுத்தும் ஒரு செயலியாக மாறியிருக்கிறது மியூசிக்கலி. அதிகமான நமது பெண்களிற்கு இந்த செயலி என்றால் அப்படியொரு பந்தம்.

அந்த செயலியை பயன்படுத்தாதவர்கள்கூட, வேறொரு சமூக தளத்தில் உலா வந்துகொண்டிருக்கும்போது நிச்சயம் இதை கவனித்திருப்பார்கள். விதவிதமான பாடல்கள் அல்லது வசனம் பின்னே ஓட, அதற்கு ஏற்றாற்போல் முகபாவனை கொடுப்பது, அல்லது நடனமாடி அதை வீடியோவாக எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிடுவது... இதுதான் அந்த செயலியின் செயல்பாடு.

musical.ly

தற்போது வாட்ஸ்அப்பிற்கு அடுத்தபடியாக அதிகமாக டவுன்லோட் செய்யப்பட்ட செயலி என்ற நிலையில் இருக்கிறது மியூசிக்கலி. இந்த செயலி முழுக்க முழுக்க பொழுதுபோக்கிற்காகவே உருவாக்கப்பட்டது. நம்முடைய முகபாவனை பார்ப்பவர்களை கவரும்படி இருந்தால் அந்த வீடியோ நாம் எதிர்பார்க்காத அளவிற்கு வைரலாகிறது.

'இந்த உலகில் பலரால் பயன்படுத்தப்படும் எந்த ஒரு பொருள், செயலி, சமூகவலைதளம் என்று எதுவாக இருந்தாலும் பெரும்பாலும் அது அமெரிக்காவைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. ஏன் நம் நாட்டை சேர்ந்த ஒன்றாக இல்லை?' என்று சீனாவைச் சேர்ந்த அலெக்ஸ் ஜூ தனக்குள் கேள்வி எழுப்பியிருக்கிறார். முதலில் இவர் பொழுதுபோக்குக்காக செயலியை உருவாக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. உலகில் இருக்கும் பல மாணவர்களுக்குக் கல்வி அறிவை வளர்க்கும் வகையில் ஒரு செயலியை உருவாக்க வேண்டும் என்றே நினைத்துள்ளார். அலெக்ஸ் ஜூவும் அவருடைய நண்பரான லுயூ யாங்ஆகிய இருவரும் சேர்ந்து நண்பர்களிடம் பணம்பெற்று இந்த வேலையைத் தொடங்கி ஒரு கல்வி தொடர்பான செயலியை உருவாக்கினார்கள். முதலில் ஐஓஎஸ்ஸில் வெளியிடப்பட்ட இந்த செயலி உப்புமா படமாக தோல்வியை சந்தித்தது.


ஒன்றும் புரியாமல் அமெரிக்காவில் லோக்கல் ட்ரெயினில் சென்றுகொண்டிருக்கும்போது மீண்டும் ஒரு ஐடியா அலெக்சிற்கு பிறக்கிறது. இக்கால இளைஞர்கள்தான் நம்முடைய பயன்பாட்டாளர்கள், குறிப்பாக அமெரிக்க இளைஞர்கள்தான் என்ற தீர்மானத்திற்கு வந்தார். அமெரிக்காவில் ஒன்று பிரபலமாகிறது என்றால் அது உலகம் முழுவதும் பிரபலம்தான். அதனால், தன்னிடம் இருக்கும் குறைவான பணத்தைக்கொண்டு மீண்டும் அவருடைய நண்பருடன் சேர்ந்து ஒரு செயலியை உருவாக்கினார். இளைஞர்களுக்கு வீடியோ வெளியிடுவதும், இசை கேட்பதும்தான் முக்கிய தேவையாக இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டவர், அதே ஐடியாவில் உருவாக்கி 2014ஆம் ஆண்டு வெளியிட்டதுதான் இந்த மியூசிக்கலி செயலி.


இளைஞர்களுக்கு நல்ல கல்வி அறிவை வளர்க்க வேண்டும் என்று வெளியிடப்பட்ட முந்தைய செயலியைப்போல் அல்லாமல் தடாலடியாக இளைஞர்கள் மத்தியில் பிரபலம் ஆனது. அதிக டவுன்லோட் செய்ததில் வாட்ஸ்அப்பிற்கு அடுத்த இடத்தில் இருக்கும் இது 2017 ஆம் ஆண்டில் சுமார் 200 மில்லியன் பயன்பாட்டாளர்களை வைத்திருக்கிறது. இந்த ஆண்டு பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரித்திருக்கும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.

உலகிலேயே அதிகமாக பயன்படுத்தப்படும் செயலிகள் வரிசையில் தன் நாட்டைச் சேர்ந்த செயலிதான் முதலிடத்தில் இருக்கவேண்டும் என்று நினைத்த அலெக்ஸ், "நான் நினைத்ததுபோன்று உலகை ஆள வேண்டும் என்றால் அதற்கு என்னுடைய பயன்பாட்டாளர்கள் 2010ஆம் ஆண்டிற்குப் பிறகு பிறந்த ஸ்மார்ட் குழந்தைகளாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர்கள்தான் பிறந்ததில் இருந்து ஸ்மார்ட் போனுடனே பழகிவருகிறார்கள். அதனால்தான் மியூசிக்கலியை அப்படி வடிவமைத்தேன். என்னுடைய ஆடியன்ஸூம் அவர்கள்தான்" என்று கூறியுள்ளார். ●

---

வர்களையும் உள்வாங்கி ஆரோக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்து தீவக கல்வித் தர மேம்பாட்டை மாற்றமடையச் செய்யலாம். இதற்கு சமூகத்தவர்கள் மத்தியில் விழிப்புணர்வு தேவை. சுய கௌரவங்களை விடுத்து பிரதேச அபிவிருத்தி தொடர்பாக சிந்திக்கக் கூடியவர்கள் ஒன்றிணைவதால் மட்டுமே சாத்தியமாகும்.





யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் (உயர்தர வகுப்புக்கு அனுமதி கிடைத்துள்ளது.) தரம் 1 தொடக்கம் 11 வரை 197 மாணவர்கள் உள்ளனர். இரண்டு விஞ்ஞான ஆசிரியர்களுடன் போதுமான ஆசிரியர் வளமும் இரண்டு அதிபர்களும் உள்ளனர். யா/அல்லைப்பிட்டி றோ.க. பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 5 வரை 102 மாணவர்கள் உள்ளனர். பராசக்தி வித்தியாலயத்திலுள்ள 30 வரையான ஆரம்பப் பிரிவு மாணவர்களையும் மூன்று ஆசிரியர்களையும் (ஆரம்பப் பிரிவு நியமனம்) அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் உயர் தரத்தையும் ஆரம்பித்தால் சமூகரீதியாக பல்வேறு அனுகூலங்களை அடையலாம்.

அல்லைப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணம், வேலணை ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 40 வரையான மாணவர்களை உள்வாங்கலாம். மண்டதீவு (புதிய பாலத்தின் மூலமாக மூன்று கிலோமீற்றர் தூரம்) மண்கும்பான் போன்ற அயல் கிராம பாடசாலை மாணவர்களையும் உள்ளீர்க்க முடியும். இவற்றுடன் இரண்டு ஆங்கில ஆசிரியர்களுடன் யா/சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம் இயங்கி வருகின்றது. இங்கு 67 மாணவர்கள் போதுமான ஆசிரியர் வளம் இரண்டு அதிபர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஆக தீவக வலயத்தில் அனேக பாடசாலைகளில் இவ்வாறான நிலைகளே உள்ளன. இதனால் ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களின் அடைவு மட்டம் குறைவு, தேசியரீதியில் பெறுபேறுகளை சிறப்பாக அடைய முடியாமை என பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. வளங்களை முழுமையாகவும் சிறப்பாகவும் தரப்பங்கீட்டுடன் பயன்படுத்தும் போது உச்சபயனைப் பெற முடியும். என்ற நிலையில் அதிகாரிகள் செயற்பட வேண்டும். பாடசாலைகளை மூடுவதை விடுத்து தரம் பிரித்து தேவையான வகையில் ஆசிரியர்களைப் பங்கீடு செய்யும் போது தீவக வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படாது.

புகழ்பெற்ற பேராசிரியர்கள், வைத்தியர்கள், நிர்வாக அதிகாரிகள், கல்வியியலாளர்கள், அரசியற் தலைவர்கள் மற்றும் தனவந்தர்கள் பல பெருமைகளுக்குச் சொந்தமானவர்களை சொந்தமாகக் கொண்ட தீவகம் இன்று தீண்டத்தகாதவர்கள் பு+மியாக மாறி வருகின்றது. தீவகத்திற்கான கல்விச் செயற்பாடுகள் முனைப்புடன் நடைபெற சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றிணைந்து தீவகத்திற்கான கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதே காலத்தின் தேவையாகவுள்ளது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தை ஊடறுத்து நுழைந்த சாள்ஸ் அன்ரனி!

## திரும்பி வந்தது ஏன் தெரியுமா?

பீஷ்மர்

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகள் நடத்தியது நான்கு வலிந்த தாக்குதல்களை மட்டுமே. அம்பகாமம், கேப்பாப்பிலவு போன்ற இடங்களில் நடந்த முதலிரண்டு வலிந்த தாக்குதல்களிற்கும் என்ன நடந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். கடந்த பாகத்தில், புலிகளின் மூன்றாவது வலிந்த தாக்குதலான தேவிபுரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை பற்றிய எழுத ஆரம்பித்திருந்தோம்.

தேவிபுரம் தாக்குதல் திட்டம் உண்மையில் பக்காவானது. மூன்றாம் ஈழப்போர் காலத்தில் இப்படியொரு ஒப்ரேஷனை புலிகள் செய்திருந்தால், உண்மையில் பிரமாண்டமான இராணுவ வெற்றியை பெற்றிருப்பார்கள். ஆனால் நான்காம் ஈழப்போரில் அப்படியான இராணுவ வெற்றியாக அந்த இராணுவ நடவடிக்கை மாறவில்லை. திட்டம் பக்காவாக இருந்தது.

மாத்தளன் தொடக்கம் வெள்ளா முள்ளிவாய்க்கால் வரையான சிறிய நிலப்பரப்பில் புலிகள் முடக்கப்பட்டுவிட்டார்கள். மாத்தளனில் இருந்து இரணைப்பாலை செல்லும் வீதி, நந்திக்கடல் நீரேரியை ஊடறுத்து செல்கிறது. அந்த வீதியை புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். அந்த வீதியில், இரணைப்பாலை பக்கமாக நீரேரிக்கு சமாந்தரமாக சிறிய இடத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

தேவிபுரம் தாக்குதலிற்காகவே அந்த இடத்தை புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். நீரேரிக்கு அப்பால் புலிகள் நிலைகொண்டிருந்த சமயத்தில், நீரேரிக்கு இந்த பக்கம், சிறிய நிலப்பரப்பை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மிகமிக ஆபத்தானது. எந்த சமயத்திலும் இராணுவத்திடம் அவர்கள் சிக்குப்படவும் வாய்ப்புண்டு. அதனால் கரும்புலி அணிகளையே



### இறுதி யுத்தத்தில் நடந்தது என்ன 84

புலிகள் அந்த இடத்தில் நிலைகொள்ள வைத்திருந்தனர்.

இந்த ஒப்ரேஷனிற்கு தலைமை தாங்கியவர்கள் இருவர். ஒருவர் மூத்த தளபதி சொர்ணம். அடுத்தவர் பிரபாகரனின் மூத்த புதல்வர் சாள்ஸ் அன்ரனி.

சாள்ஸ் அன்ரனி கணினி பிரிவிற்கு பொறுப்பாக இருந்தவர். தேவிபுரம் தாக்குதலிற்கு கணினி பிரிவினரே பெரும்பாலும் களமிறக்கப்பட்டனர். தாக்குதல் சறுக்கியதற்கான முதலாவது புள்ளி இது.

கணினி பிரிவில் இருந்தவர்கள் பெரும்பாலும் கட்டாயமாக இணைக்கப்பட்டவர்களும், கட்டாயமாக இணைக்கப்படுவதில் இருந்து தப்பிப்பதற்காக பெற்றோரால் கொண்டு வந்து இணைக்கப்பட்ட வசதியான, கல்வி கற்ற குடும்பத்தை சேர்ந்தவர்களுமே. அவர்கள் போரிடும் ஆற்றல்மிக்கவர்கள் அல்ல. அந்த ஆர்வமுடையவர்களும் அல்ல.

நான்காம் ஈழப்போரில் புலிகளின் தாக்குதல்கள் சறுக்கியதற்கு பிரதான



காரணமும் இதுதான். புலிகளை போரில் வெல்வதென்றால் இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரித்து, ஓய்வொழிச்சல் இல்லாமல், எல்லா முனையிலும் தாக்குதல் நடத்துவதுதான் வழியென்பதை இராணுவம் நன்றாக புரிந்து வைத்திருந்தது. முன்னைய காலங்களில் இராணுவத்தின் பிரதான

நகர்வு ஒரு முனையில்தான் இருக்கும்.

தமிழர்களின் எண்ணிக்கை மிக குறைவானது. அதிலும் புலிகளின் கட்டுப்பாட்டுப்பாட்டு பகுதியில் இருந்தவர்களின் எண்ணிக்கை இன்னும் குறைவானது. அதிலும் புலிகளில் இணைந்திருந்தவர்களின் குடும்பம் இன்னும் குறைவானது.



மூன்றாம் ஈழப்போர் காலத்தில் புலிகளின் ஆளணி எண்ணிக்கை அண்ணளவாக எட்டாயிரம் தொடக்கம் பத்தாயிரம் வரையானது தான்.

நான்காம் கட்ட ஈழப்போரில் கட்டாய ஆட்சேர்ப்பால் இந்த எண்ணிக்கையில் ஒரு சில ஆயிரங்கள் அதிகரித்திருந்தன. அதுவும் நிலையான படையணிகள் அல்ல. கட்டாயமாக ஆட்சேர்க்கப்பட்டவர்கள் கிரமமாக படையணிகளை விட்டு ஓடிக் கொண்டிருப்பார்கள்.

இந்த குறைந்த ஆளணி எண்ணிக்கையை வைத்துக் கொண்டு எல்லா முனையிலும் புலிகளால் போரிட முடியாது. எல்லா முனையிலும் இராணுவத்தால் வீச்சாக படைநட்வடிக்கை செய்ய முடியாது. மூன்றாம் ஈழப்போர் காலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட முனைகளில் இராணுவம் படைநடவடிக்கை செய்ததுதான். ஆனால் அது நான்காம் ஈழப்போரில் நடந்ததை போல அல்ல. மூன்றாம் ஈழப்போரில் ஒரு முனையில் மட்டுமே வீச்சான நகர்வு நடக்கும். மற்றைய முனையில் திசைதிருப்பல் நடவடிக்கையாக தாக்குதல் முயற்சியொன்றை செய்வார்களே தவிர, அது திட்டமிட்ட வீச்சான நடவடிக்கையாக இருக்காது.

ஒரு முனை நகர்வை எதிர்கொள்ளும் அளவிலேயே புலிகளின் ஆளணி இருந்தது. நான்காம் ஈழப்போரில் சம வீச்சில் எல்லா முனைகளிலும் இராணுவம் நகர்வை செய்தது. அதற்கு தகுந்தாற்போல தனது ஆளணியை பெருக்கியிருந்தது. ஆனால் புலிகளால் ஆளணியை பெருக்க முடியவில்லை. ஏனெனில் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்த மக்களின் எண்ணிக்கை மிக குறைவானது.

அதையும் மீறி எல்லா முனைகளிலும் போரிட முயல ஆளணி இழப்பை சந்திக்க வேண்டியதாகியது. இதன் பின், கட்டாயமாக பிடிக்கப்பட்டவர்களையே நம்பி புலிகள் யுத்தம் செய்ய வேண்டியதாகியது.

தேவிபுர தாக்குதல் திட்டத்தின்படி, நீரேரியை இரகசியமாக கடந்து செல்லும் புலிகளின் அணிகள் தேவிபுரத்தின் பின்பகுதியில் பரவலாக தாக்குதல் நடத்தி, பரந்தன் முல்லைத்தீவு ஏ 35 வீதியை கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். புலிகளின் அணிகள் சென்று சேர்ந்த தேவிபுர பகுதி இராணுவத்தின் முன்னரணிற்கு பின்னாலுள்ள பகுதி. பலமான இராணுவ அரண்கள் இல்லை. இராணுவத்திற்கு பின்பக்கமாக தாக்குதல் நடத்தினால் இராணுவம் நிலைகுலைந்து விடும். அங்கிருந்து புதுக்குடியிருப்பு சந்தியை நோக்கி ஒரு அணி சென்று, அந்த பகுதியையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தால், இராணுவத்தின் முன்னணி தாக்குதல் டிவிசன்களான 58வது டிவிசன் முழுமையாகவும், 53வது டிவிசனின் ஒரு பகுதியும் புலிகளின் பொறியில் சிக்கி பேரழிவை சந்திக்க வேண்டியிருந்திருக்கும்.

ஆனால் அப்படி நடக்கவில்லை.

அதற்கு இரண்டு காரணங்கள்.

முதலாவது, இராணுவத்தின் பட்டறிவு.

அதென்ன பட்டறிவு?

1997 மே மாதம் ஜெயசிக்குறு என்ற படை நடவடிக்கைளை இராணுவம் வன்னியில் ஆரம்பித்தது. மிகப்பிரமாண்டமாக நடந்த இந்த நடவடிக்கையில் பெருமளவு இராணுவத்தின் உயிரை விலையாக கொடுத்து, மெதுமெதுவாக முன்னேறி வந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம். 1999 இல் ஓயாத அலைகள் 3 என்ற படைநடவடிக்கையை புலிகள் செய்தனர். ஜெயசிக்குறுவில் இராணுவம்கைப்பற்றிய பகுதிகளையும் கடந்து, பல காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளையும் புலிகள் கைப்பற்றினார்கள்.

ஜெயசிக்குறு படையினர் பலமான முன்னரண் அமைத்திருந்தார்கள். முன்னரணிற்கு நெருக்கமாக ஆயுதக் களஞ்சியங்களையும் அமைத் திருந்தார்கள். கனகராயன்குளத்திற்கு அண்மையில் இராணுவ முன்னரண் இருந்தபோது, தாண்டிக்குளத்தில் ஆயுதக்களஞ்சியசாலையை வைத் திருந்தார்கள். அதன்மீது புலிகள் தாக்குதலும் நடத்தியிருந்தார்கள்.

இராணுவம் முன்னகர்ந்து கொண் டிருந்த போது, கைப்பற்றிய இடங்களை பலப்படுத்தும் உத்தியை இராணுவம் பாவிக்கவில்லை.. அதற்கான ஆள ணியும் பற்றாக்குறையாக இருந்தது.

நான்காம் ஈழப்போரில் இதற்கு மாறான உத்தியை இராணுவம் கடைப்பிடித்தது. பலமான முன்னரண் எதையும் அமைக்கவில்லை. நிலையற்ற, நீரோட்ட பாணியிலான முன்னணி அமைப்பொன்றையே பேணினார்கள். புலிகளை போன்ற கெரில்லா பாணியில் இராணுவத்தின் சிறிய அணிகள் முன்னணியில் மோதிக் கொண்டிருந்தார்கள். தேவையான போது, பெரிய அணிகளும் களமிறங்கின. சிறிய சிறிய அணிகளாக நிலையற்ற முன்னரணை பேணிய இராணுவத்தின் உத்தி நன்றாக கைகொடுத்தது. இதற்கு பின்னாலேயே பலமான முன்னரண் இருந்தது. புலிகள் ஒரு வலிந்த தாக்குதலை செய்வதெனில், நிலையற்ற முன்னணி இராணுவத்தினருடன்தான் மோத வேண்டும். அவர்களை சமாளித்தால், அடுத்தது பலமான முன்னரண். நிலையற்ற முன்னரணில் மோதல் ஆரம்பித்த போதே, பலமான முன்னரணில் தயாராகி விடுவார்கள்.

முன்னரை போலல்லாமல் இராணு வத்தின் டிவிசன்கள் அதிகரிக்கப் பட்டால், இராணுவத்தின் முன்னரன் பலமானதாக இருந்தது. இதைவிட இன்னொரு ஏற்படாக, முன்னரண் டிவிசனிற்கு மேலதிகமாக, இன்னொரு வட்ட பாதுகாப்பு டிவிசன்களையும் நிறுத்தினார்கள். குறிப்பாக 2009 மார்ச்சின் பின் யுத்தம் புதுக்குடியிருப்பிற்குள் மட்டுப் படுத்தப்பட்ட பின்னர், இராணுவத்தின் டிவிசன்களை நெருக்கமாக்கி, புலிகளை சுற்றிவளைக்க முடிந்தது.

புதுக்குடியிருப்பை இராணுவத்தின் 53, 58, 68 வது டிவிசன்கள் முதல் வட்டத்தில் முற்றுகையிட்டன. அதன் பின்னால் 57, அதிரடிப்படை 1,2,3 என்பன முற்றுகையிட்டன. அதாவது நந்திக்கடல் பக்கமாக ஒதுங்கியிருந்த புலிகளை வடமேற்கு, மேற்கு, தென்மேற்கு திசைகளில் ஆறு டிவிசன் படையினர் சூழ்ந்திருந்தனர். வடக்கில் சாலை முகத்துவாரம் புலிகளின் எல்லையை பிரித்தது. முகத்துவாரத்திற்கு அப்பால் 55வது டிவிசன் படையினர். தெற்கில் வட்டு வாகல் பாலம் பிரித்தது. முகத்து வாரத்திற்கு அப்பால் 59வது டிவிசன் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

ஜெயசிக்குறு அனுபவத்தினடிப் படையில் இப்படியொரு பாதுகாப்பு அமைப்பை இராணுவம் செய்திருந்தது.

தேவிபுரத்தில்ஒருபக்கா பிளானுடன் புலிகள் களமிறங்கியும் வெற்றிபெற முடியாமல் போனதற்கு முக்கிய காரணம் இது. இன்னொரு காரணமும் இருப்பதாக சொல்லியிருக்கிறோம். அதை சற்று பின்னால் குறிப்பிடுவோம்.

தேவிபுரத்தின் பின்பகுதிக்குள்ளால் புலிகளின் அணிகள் களமிறங்கி, தாக்குதலை ஆரம்பித்ததும், இராணுவம் இன்னொரு உத்தியை கையாண்டது. புலிகள் கெரில்லா அணிகளாக மாறியே தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் களமிறங்கியிருந்தார்கள். பரந்த நிலப்பரப்பில் அணிகள் ஆங்காங்கே பல இடங்களில் நிலை கொண்டிருப்பார்கள். அவர்களை அடையாளம் காண, ஆளில்லாத உளவு விமானங்களை களமிறக்கினார்கள்.

இராணுவ நடவடிக்கை ஒன்றிற் கான களமிறங்கிய புலிகளின் அணிகள் நகராமல் ஓரிடத்தில் நிலைகொண்டி

**எப்படியோ, அருமையான திட்டமாக இருந்தாலும், புலிகளால் வெற்றிகரமான தாக்குதலாக மாற்ற முடியாத ஒன்றாக தேவிபுரம் தாக்குதல் அமைந்தது. இதன்மூலம், இராணுவத்தின் மீது புலிகள் மூன்றாவதாக செய்த வலிந்த தாக்குதலும் தோல்வியடைந்த ஒன்றாக மாறியது.**






ருக்க முடியாது. நகர்ந்துதான் தீர வேண்டும். தரையிலுள்ள இலக்குகள் நகர்ந்தால், ஆளில்லாத வேவு விமானங்கள் கண்டறிந்து விடும்.

புலிகளின் அணிகளை ஆளில்லாத வேவு விமானங்கள் கண்டறிந்தால், அந்த இடத்திற்கு ஆட்லறி செல் தாக்குதலை நடத்தினார்கள்.

இராணுவம் தரை வழி தாக்குதல் நடத்தினாலும், இன்னும் ஆழமாக முன்னகர்ந்த அணிகளின் மீது எறிகணை தாக்குதலை நடத்தினார்கள்.

இதேசமயம், இந்த தாக்குதலிற்கு நகர்த்தப்பட்ட புலிகளின் அணிகள் பெரும்பாலும் போரனுபவம் இல்லாதவை. திட்டம் பக்காவாக இருந்தும், புலிகள் தோற்றதற்கான இரண்டாவது காரணத்தை பின்னர் குறிப்பிடுவதாக சொல்லியிருந்தோம் அல்லவா, அனுபவம் இல்லாத போரணிகள்தான் அந்த இரண்டாவது காரணம்.

குறிப்பாக, கட்டாயமாக இணைக் கப்பட்டு ஒரு வாரம் துப்பாக்கி சுடும் பயிற்சியளிக்கப்பட்ட பெண் போராளிகளும் இந்த களத்தில் இறக்கப்பட்டிருந்தனர். அவர்களால் என்ன செய்ய முடியும்?.

ஆழமாக ஊடுருவிய அணிகளின் மீது ஆளில்லாத வேவு விமானங்களின் உதவியுடன் செல் தாக்குதல் நடத்தப்பட்டதாக குறிப்பிட்டிருந்தேன் அல்லவா, இதுவும் புலிகளிற்கு பின்னடைவை கொடுத்தது. இராணுவத்தின் செல் தாக்குதலில் இந்த தாக்குதலிற்கு தலைமை தாங்கிய இரண்டு பேருமே காயமடைந்தனர். இதில் சொர்ணத்திற்குதான் ஆபத்தான காயம். அவரது கால்தொடை எலும்பை எறிகணை சிதறலொன்று உடைத்தது. நடக்க முடியாத நிலைமைக்கு சென்றார். அவரை தோளில் காவிக் கொண்டுதான் அணிகள் திரும்பி வந்தன.

சாள்ஸ் அன்ரனிக்கு கையில் காயம். அவ்வளவு பாரதூரமான காயமல்ல அது. சாதாரண காயம்தான்.

ஏற்கனவே சில அணிகள் இராணுவத்திடம் சிக்கியிருந்தன. பல முனைகளில் எதிர்பார்த்த வெற்றியை பெற முடியவில்லை. ஏ 35 வீதியை கைப்பற்ற அனுப்பப்பட்ட அணியால், வீதியை நெருங்கக் கூட முடியவில்லை. மொத்தத்தில் திட்டத்தின்படி எதுவுமே நடக்கவில்லை.

ஒரு இராணுவ நடவடிக்கை திட்டத்தில் ஏதாவதொரு பகுதி திட்டம் பிழைத்தால் பரவாயில்லை. ஏதாவதொரு மாற்று ஏற்பாட்டை செய்து கொள்ளலாம். எந்த முனை யிலும் திட்டம் சரியாக நடக்காமல், எல்லா பகுதியிலும் திட்டத்தை சரியாக செயற்படுத்த முடியாவிட்டால் அந்த தாக்குதலை எப்படி வெற்றிபெற வைப்பது? உலகத்தின் எந்த தலைசிறந்த போர்த்தளபதியாலும் முடியாத விசயமிது.

இதனால்தானோ என்னவோ, தேவிபுரத்திற்குள் ஊடுருவிய அணிகள் திருப்பியழைக்கப்பட்டன. இதில் துயரம் என்னவென்றால், உள்ளே நுழைந்த எல்லா அணிகளும் திரும்பி வரவில்லை. இதற்கு பின்னாலும் இன்னும் நிறைய விசயங்கள் உள்ளன. ஆனால் எல்லாவற்றையும் எல்லா காலத்திலும் சொல்ல முடியாதல்லவா. அதனால் இந்த விசயத்தை மேற்கொண்டு நீட்டிக்காமல் விட்டுவிடுகிறோம்.

சொர்ணம் நடக்க முடியாதளவிற்கு காயமடைந்த பின்னர், சாள்சும் சிறிய காயமடைகிறார். இதையடுத்து மொத்த அணியும் பின்வாங்கியது. அணிகளை பின்வாங்கும் முடிவை சாள்ஸ் அன்ரனி எடுத்தாரா, அல்லது பிரதான நிலப்பரப்பில் இருந்த பிரபாகரன் அல்லது பொட்டம்மான் எடுத்தார்களா என்பது தெரியவில்லை. ஆனால், சாள்ஸ் அன்ரனி காயமடைந்ததும் அணிகள் பின்னகர்த்தப்பட்டன என்ற அபிப்பிராயமும் உள்ளது.

எப்படியோ, அருமையான திட்டமாக இருந்தாலும், புலிகளால் வெற்றிகரமான தாக்குதலாக மாற்ற முடியாத ஒன்றாக தேவிபுரம் தாக்குதல் அமைந்தது. இதன்மூலம், இராணுவத்தின் மீது புலிகள் மூன்றாவதாக செய்த வலிந்த தாக்குதலும் தோல்வியடைந்த ஒன்றாக மாறியது.

இதன் பின்னர், புலிகளின் எந்த வலிந்த தாக்குதலையும் தம்மால் முறியடிக்கமுடியுமென்றநம்பிக்கையை இராணுவத்திற்கு மேலும் அதிகரிக்க செய்திருக்கும்.

சொர்ணம் காயமடைந்ததும், சாள்ஸ் அன்ரனியின் போர் அனுபவ மின்மை காரணமாக அவரால் அணியை சரியாக வழிநடத்த முடியா தென கருதியும் அணிகள் பின்ன கர்த்தப்பட்டிருக்கலாம். உள்ளே நிலரவம் சிக்கலாகிக் கொண்டிருப்ப தையடுத்து, அணிகளை பின்னகர்த்தும் முடிவை சாள்ஸ் அன்ரனியே கூட எடுத்திருக்கலாம்.

இந்த தாக்குதலில் சொர்ணத்தின் கால் எலும்பு உடைந்ததாக குறிப் பிட்டிருந்தோம் அல்லவா. அதன் பின்னர் சொர்ணம் எழுந்தே நடக்க வில்லை. காயமடைந்த நிலையில் படுக்கையிலேயே சிகிச்சை பெற்று வந்தார். 2009 மே மாதம் எறிகணை வீச்சில் மீண்டும் காயமடைந்த தையடுத்து, தனது குப்பியை அருந்தி மரணமானார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியில் இரண்டாம் உலகப் போர்க் குண்டுகள்



ஆவணி மாத ஆரம்பத்தில் மீண்டும் இன்னொரு குண்டு ஜேர்மனியின் பொட்ஸ்டாம் நகரில் கண்டெடுக்கப்பட்டது. அது பிரிட்டனால் இரண்டாம் உலகப் போரின் சமயத்தில் போடப்பட்டு இதுவரை வெடிக்காமல் இருந்த 250 கிலோ வெடிகுண்டாகும்.


போட்ஸ்டாம் நகரின் [தற்போது பாவிப் பிலில்லாத] டிராம் வண்டிகள் போகும் வழியில் கட்டடத்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களினால் அந்தக் குண்டு வெறும், சுமார் 60 செ.மீற்றர்கள் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. மிக வேகமாகத் திட்டமிடப்பட்டு அப்பிராந்தியத்தி லிருப்பவர்களை வெளியேற்றிவிட்டு இரண்டாம் நாளே அக்குண்டு செயலில்லாமல் ஆக்கப் பட்டது. சகல விடயங்களும் திட்டமிடப்பட்டு சுமார் 2,000 பேர் சேர்ந்து எவ்வித சேதங்களுமின்றி சகலத்தையும் செய்து முடித்தார்கள்.

போட்ஸ்டாம் மக்களுக்கு இது முதல் தடவையல்ல. ஒரு மாதத்துக்கு முன்டும் இரண்டாம் உலகப் போரில் போடப்பட்ட வெடிக்காத ஒரு குண்டு கண்டுபிடிக்கப்பட்டு செயலின்மைப் படுத்தப்பட்டது. இரண்டாம் உலகப் போர் முடிந்து சுமார் 75 வருடங்களான பின்பும் இதேபோன்று வருடாவருடம் வெடிக்காத சுமார் [சுமார் 2,000 தொன்] 5,000 வெடிக்காத குண்டுகள் ஜேர்மனியில் கண்டெடுக்கப்படுகின்றன. அவைகள் பெரும்பாலும் நகரங்களில் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிராந்தி யங்களிலேயே கண்டெடுக்கப்படுகின்றன என்பதை முக்கியமாகச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த வருடத்திலிருந்தே அப்போரில் போடப்பட்டு, வெடிக்காத குண்டுகள் அப்பாவி மக்களின் உயிர்களைக் குடிக்கத் தொடங்கிவிட்டன. 1945 ஆனி மாதத்தில் வெடித்த ஒரு குண்டு சுமார் 35 பேர்களின் உயிரைப் பறித்து 50 பேர்களைக் காயப்படுத்தியது. அதையடுத்து மூன்றே மாதங்களில் கண்டெடுக்கப்பட்ட குண்டொன்றை செயலிழக்கச் செய்வதில் ஈடுபட்டிருந்த நான்கு பேர் இறந்தார்கள்.

தொடர்ந்து வருடாவருடம் இதுவரை நூற்றுக்கணக்கானவர்கள் உயிர்களைக் குடித்து, ஆயிரக்கணக்கானவர்களைக் காயப்படுத்தி வருகிறது இரண்டாம் உலகப் போரில் போடப்பட்டு, வெடிக்காமல் கிடக்கும் குண்டுகள். அக்குண்டுகளில் ஜேர்மனியின் குண்டுகள் உட்பட, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் நேச நாடுகளால் போடப்பட்ட குண்டுகளும் அடங்கும்.

சில வருடங்களுக்கு முன்னர் இதனால் ஜேர்மனி இரண்டாம் உலகப் போரில் பங்கு பற்றிய நாடுகளின் போர்க்கால ஆவணங்களைப் பார்க்க உதவும் ஒரு திட்டத்தைஅந்த நாடு களுடன் சேர்ந்து ஆரம்பித்திருக்கிறது. அத்திட்டத்தின்படி இரகசியமானவை என்று கருதப்படாத போர்க்கால ஆவணப் படங்களையும், விபரங்களையும் பெற்று அவைகளிலிருக்கும் புவியியல் படங்களைக் கவனித்து எந்தெந்த இடத்தில் எத்தனை குண்டுகள் வீசப்பட்டன போன்ற விபரங்களை ஜேர்மனி பெற்று வருகின்றது. அதன் பின்பு புவியியலாளர்களுடன் இணைந்து குறிப்பிட்ட பிராந்தியங் களில் குண்டுகளைத் தேடியெடுத்துச் செயலிழக்கவைப்பதில் ஜேர்மனி ஈடுபட்டு வருகிறது.




தொலைத்தொடர்புத் தொழில் நுட்பத்தின் பல பலங்களையும் அறிந்திருக்கும் எங்களுக்கு 1G, 2G, 3G என்றழைக்கப்படும் ஒவ்வொரு தலைமுறைத் தொலைத்தொடர்புவலைகளின் பெயர்களைப் பற்றித் தெரியும். இவைகளில் 1G என்றழைக்கப்படுபவை அனலொக் முறைச் சைகைகள் பாவிக்கப்பட்டவை. அவை முதலில் 1979 இல் ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டு 1981 இல் ஸ்கண்டினேவிய நாடுகளில் பரவ ஆரம்பித்தன. அதைத் தொடர்ந்து அமெரிக்காவும் மற்றைய நாடுகளும் அதே வழியில் தொடர்ந்தன.

2G தொலைத்தொடர்பு வலைத்தொழில் நுட்பம் டிஜிடல் முறையால் ஆனது. அதைப் பின்லாந்து உலகுக்கு அறிமுகம் செய்தது. அதையடுத்து மேலும் வேகமான தொலைத்தொடர்பும், அதிக விபரங்களைக் கொண்ட தொழில் நுட்பமும் கொண்ட 3நி, சுமார் 2000 ம் ஆண்டளவில் பரவியது. இதையும் பொதுப் பாவிப்புக்கு முதலில் ஜப்பானியர்கள்தான் அறிமுகப்படுத்தினார்கள்.

அதனையடுத்து 2009 இல் ஸ்கண்டினேவிய நாடுகளில் 4G தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டு உலகின் பெரும்பாலான நாடுகளில் பரவியிருக்கிறது. ஆனால், வேகமான இந்த தொலைத்தொழில்நுட்பம் முழுவதுமாக அறிமுகப்படுத்தப்படாத நாடுகள் பல. வளரும் நாடுகளின் பெரும்பாகங்களில் இன்னும் 3நி தொலைத்தொடர்புவலைதான் பெரும்பகுதியில் இருக்கிறது.

அடுத்த தலைமுறையான 5G தொலைத்தொடர்புவலைத் தொழில்நுட்பம் 4G ஐ விடவும் வேகமானதும், அதிக உள்ளடக்கத்தைப் பரப்பக்கூடியதாகவும் இருக்கிறது. அது இப்போது பொதுமக்கள் பாவிப்புக்கு அறிமுகப்படுத்தக்கூடியவகையில் தயாராக இருக்கின்றன. தென் கொரியா, சுவீடன், ஜப்பான், சீனா, துருக்கி ஆகிய நாடுகள் இத்தொழில்நுட்பத்தைத் தம் நாடுகளில் பயன்படுத்தத் தயாராகி வருகின்றன.

முதலாவது தலைமுறைத் தொலைத் தொடர்புகள் அறிமுகப்படுத்தலுடன் ஒப்பிடும் போது இத்தொழில்நுட்பம் அறிமுகப்படுத்து வற்கான தற்போது சர்வதேசச் சந்தை நிலைமை மிகவும் மாறிவிட்டது. காரணம் கொள்வனவாளர்களின் தேவைகளில் இருக்கும் மாற்றமாகும்.

2012 முதல் வருடாவருடம் சர்வதேச கைத்தொலைபேசித் தொடர்புகளுக்கான புதிய சந்தாதாரர்கள் தொகை வருடாவருடம் 9 விகிதத்தால் அதிகரித்தது. சுறுசுறுப்பான [smart] தொலைபேசிகளின் விற்பனை வருடாவருடம் 40 விகிதத்தால் அதிகரித்து வந்தது. ஆனால், 2017 முதல் தடவையாக சுறுசுறுப்பான தொலைபேசிகளின் விற்பனை கொஞ்சமும் அதிகரிக்காத வருடம் ஆகியிருக்கிறது. சர்வதேசக் கைத்தொலைபேசிகளின் சந்தாதாரர்களின் தொகை வெறும் 3 விகிதத்தால் மட்டுமே அதிகரித்திருக்கிறது.

இன்னொரு பக்கம் பார்க்கப்போனால் சுறுசுறுப்புத் தொலைபேசிகளில் படத்துணுக் குகள் போன்றவைகளைப் பாவிப்பவர்கள் 30 விகிதத்தால் அதிகரித்திருப்பினும், தொலைபேசி இணைப்பு நிறுவனங்களின் இலாபம் 1 விகிதத்துக்குக் குறைவாகவே அதிகரித்திருக்கிறது.

அதாவது தொலைத்தொடர்புவலைத் தொழில்நுட்பம் ஆராய்ச்சிக் கூடத்தில் வேகமாக் முன்னேறிக்கொண்டு இருக்கும் இதே சமயத்தில் அவைகளைப் பாவனைக்குக் கொண்டுவரும் தொலைத்தொடர்பு நிறுவனங்களின் வருமானம் தேக்கமடைந்திருக்கிறது.

கொள்வனவாளர்களின் தேவையும் அவற்றைப் பூர்த்தி செய்யும் தயாரிப்பாளர்களின் இலாபமும் சந்திக்கும் இடத்தில்தான் புதிய பொருட்களுக்கான தொழில்நுட்பத் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பது வர்த்தக இயல்பல்லவா!

நடந்து முடிந்த குளிர்கால ஒலிம்பிக்ஸ் பந்தயங்கள் தென் கொரியாவில் நடந்தபோது 5G தொழில்நுட்பவலையைக் குறிப்பிட்ட பிராந்தியங்களில் அறிமுகப்படுத்தியது. அதற்காக தனது 4G தொலைத்தொடர்பு வலையை தென்கொரியா 5G க்கு மேம்படுத்தியது. அச்செலவுகளை நாட்டின் நான்கு தொலைத்தொடர்பு நிறுவனங்களையும் பிரித்துக்கொள்ளுமாறு அவ்வரசு உத்தரவிட்டது.

உலகின் பெரும்பாலான நாடுகளில் அதே போன்ற நிலைமை இல்லை. தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமக்கு இலாபம் அதிகரிக்கும் என்று தோன்றும்போது, அது இலாபம் தரும் பகுதிகளில் மட்டுமே தமது தொழில்நுட்பத்தை மேம்படுத்தும். தவிர ஒவ்வொரு நாடுகளிலும் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடையே இருக்கும் போட்டியும் கூட அவர்கள் இணைந்து செயற்படுவதைத் தடுக்கிறது.

உலகின் பெரும்பாலான நாடுகளில் அதே போன்ற நிலைமை இல்லை. தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமக்கு இலாபம் அதிகரிக்கும் என்று தோன்றும்போது, அது இலாபம் தரும் பகுதிகளில் மட்டுமே தமது தொழில்நுட்பத்தை மேம்படுத்தும். தவிர ஒவ்வொரு நாடுகளிலும் தொலைத்தொடர்பு நிறுவனங்களிடையே இருக்கும் போட்டியும் கூட அவர்கள் இணைந்து செயற்படுவதைத் தடுக்கிறது.

தென்கொரியாவில் அரசு குறுக்கிட்டு செலவை நான்கு நிறுவனங்கள் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டதன் மூலம் சுமார் 1 பில்லியன் டொலர்களுக்கு மேல் செலவுகள் குறைக்கப்பட்டன.

பல நாடுகளிலும் ஒவ்வொரு நிறுவனமும் தனது தொலைபேசி வலைகளைத் தனக்காக நிறுவிக்கொள்வதை விட எல்லோருக்கும் பாவிக்கக்கூடியதான பலமான, சக்திமிக்க தொலைத்தொடர்பு வலைகளை ஸ்தாபித்துக் கொள்வதில்லை. பலமான அரசியலமைப்பு இருக்கும் நாடுகளில் அரசாங்கம் தானே தொலைத்தொடர்பு வலைகளை உருவாக்கி நிறுவனங்களுக்கு வாடகைக்கு உபயோக்கிக்கக் கொடுப்பதோ, அல்லது நிறுவனங்களைச் செலவைப் பிரித்துக்கொள்ள உத்தரவிடுவதோ முடியும். அதன் மொத்தச் செலவும் குறையும், புதிய தொழில்நுட்பங்களைத் தம் மக்களுக்கு விரைவில் விநியோகிப்பதும் இலகுவாகும்.

## உலக யன்னல்

தேசமித்ரன்

தொலைத்தொடர்பு வலை 5G பாவனைக்குத் தயாராக இருந்தும் பெரும்பாலான உலக நாடுகள் அதை அறிமுகப்படுத்தும் நிலையில் இல்லாமைக்குக் காரணம் போட்டியில் ஈடுபட்டிருக்கும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமது இலாபத் தேக்கத்தாலும், போட்டிகளாலும் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாமையே என்று சர்வதேச தொலைத்தொடர்பு ஒன்றியம் சுட்டிக் காட்டுகிறது. படுவேகமான தொலைத்தொர்புகள் சர்வதேச ரீதியில் பெரிய நன்மைகளை ஈட்டிக்கொடுக்கும் என்ற இந்த யுகத்தில், நிலவும் இன்றைய நிலைமையால் பொதுவாகக் குறிப்பிட்ட வளரும் நாடுகள் மட்டுமே வேகமான 5நி பாவனைக்குக் கொண்டுவந்து நன்மைகள் பெறப் போகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி பதில்



**ஏலியன்ஸ் வாழ்வது உண்மைதானா? ஏலியன்ஸ் தற்போது இருக்கின்றனவா?**

*எம்.ஹம்சாயினி, முள்ளியவளை*

வேற்றுக்கிரகங்கள் உள்ளன என்பது அறிவியல்பூர்வமான உண்மை. அதில், கிரகவாசிகள் இருக்கிறார்களா என இதுவரை யாரும் பார்க்கவில்லை. எப்படி பேய் பற்றிய நம்பிக்கைகள் இருக்கின்றனவோ, அதைப் போலவே வேற்றுக்கிரகவாசிகள் நம்பிக்கையும் மக்களிடம் இருக்கிறது. குறிப்பாக, ரொக்கெட்டுகள், செயற்கைக்கோள்கள் போன்றவற்றை மனிதன் கண்டுபிடிக்க ஆரம்பித்ததும் இந்த நம்பிக்கைகள் அதிகமாகின. இதுவரை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்படவில்லையே தவிர, எங்கோ ஒரு நட்சத்திர மண்டலத்தில், ஒரு வகை ஜீவராசிகள் இருக்கலாம் என்ற தேடல் அறிவியல் உலகில் இருக்கிறது. அதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ஒவ்வொரு நட்சத்திரமும் பல ஒளி ஆண்டு தூரத்தில் இருக்கின்றன. விநாடிக்கு சுமார் மூன்று இலட்சம் கிலோமீட்டர் வேகத்தில் ஓர் ஆண்டு முழுதும் பயணம் செய்தால், எவ்வளவு தூரம் கடந்திருப்போமோ, அதுதான் ஓர் ஒளி ஆண்டு தூரம். நமக்கு அருகில் இருப்பதாகச் சொல்லப்படும் 'ப்ராக்ஸிமா சென்டாரி' என்ற நட்சத்திரம், 4.22 ஒளி ஆண்டு தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரம் பயணம்செய்து, அங்கே இருக்கும் ஒரு கிரகவாசியைக் கண்டுபிடிக்கும் வரை இது சுவாரஸ்யமான கற்பனையாகவே இருக்கும்.



**ராஜ நாகம் தன் விஷத்தை ஒரு சொட்டுக்கூட கக்காமல் வைத்திருந்தால், அது முத்தாக மாறும் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?**

*கு.பரந்தாமன், புதூர்*



பலகட்டுக்கதைகளில் இதுவும் ஒன்று. பாம்பு, மாணிக்கத்தைக் கக்கும் எனச் சொல்வார்கள். ஆனால், உன்னிடம் 'முத்து' என்று சொல்லி இருக்கிறார்கள். முத்து, கடலில் கிடைப்பது என்று அறிந்திருப்பீர்கள். பாம்பின் நஞ்சுப் பையில் திரவ நிலையில் இருப்பதுதான் விஷம். துளையுள்ள பல்லுடன் இந்த நச்சுப்பை இணைந்திருக்கும். பாம்பு ஒருவரை கடிக்கும்போது பல் வழியே விஷம், கடிபட்டவரின் உடலுக்குள் செல்கிறது. பாம்பு, விஷத்தைப் பயன்படுத்தும் விதம் இதுதான். பாம்பால் விஷத்தைக் கக்க முடியாது. பாம்பு இறக்கை முளைத்துப் பறக்கும், பாம்பு மனித உருவில் வந்து நடனம் ஆடும் என்பது எல்லாமே இதுபோன்ற கற்பனைக் கதைகள்தான்!

**நாம் ஏதாவது சொக்லேட், இனிப்புக்கள் வாங்கினால், அதன் கவரில் Best before 3 months from mfg., என்று இருக்கிறதே. அது எதற்காக?**

*கே.அருந்துஷா, நெல்லியடி*



இரவில் சமைக்கும் உணவு, மறுநாள் காலையில் வீணாகிவிடும் அல்லவா? அதுபோலத்தான் எந்த ஒரு உணவுப் பொருளும், குறிப்பிட்ட நாட்கள் வரைதான் சாப்பிட ஏற்றதாக இருக்கும். அதைக் குறிப்பதே அந்த திகதி. மருந்து, குளிசை, ஷாம்போ, சோப் போன்ற பலவிதப் பொருட்களுக்கும் இந்தக் காலவரையறை உண்டு. பயன்பாட்டுத் திகதி முடிந்த நிலையில் சாப்பிட்டால், பல்வேறு உடல்கோளாறை உண்டாக்கிவிடும். மருந்து, குளிசை போன்ற விஷயத்தில் எதற்காக அதைச் சாப்பிடுகிறோமோ, அந்தப் பலனைத் தராது. மேலும், வேறுவிதமான பக்க விளைவுகளை ஏற்படுத்திவிடும். அதனால், நாம் எந்தப் பொருளை வாங்கினாலும்,அது பயன்படுத்தும் காலத்துக்குள் இருக்கிறதா என்பதைத் தெரிந்த பின்னரே வாங்க வேண்டும்.

**நாம் அழும்போது வரும் கண்ணீருக்கும், அதிகமாகச் சிரிக்கும்போது வரும் கண்ணீருக்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா?**

*பி.துர்க்கசியா, இணுவில்*

நமது கண்களைப் பாதுகாக்கும் கவசங்களில் கண்ணீரும் ஒன்று. நீர், உப்பு, நொதிகள் சேர்ந்த கண்ணீர், நமது கண்களை எப்போதும் ஈரப்பதத்துடன் வைத்திருப்பதால்தான், நம்மால் கண்களை மூடித்திறக்க முடிகிறது. புகை, தூசு போன்ற எதிரிகள் கண்களைத் தாக்கும்போது, அவை மூளைக்கு உணர்த்தப்பட்டு, கண்ணீர் அதிகம் வெளியாகி, அவற்றை வெளியேற்றும் கிருமிநாசினியாகச் செயல்படுகிறது. சிரிப்பது, அழுவது போன்ற உணர்ச்சி வெளிப்பாட்டின்போதும் இதேபோல தூண்டப்பட்டு, கண்ணீர் வெளிப்படுகிறது. இதில், வித்தியாசம் எதுவும் கிடையாது.

**கடையில் வாங்கும் பல பொருட்களில் கறுப்பு நிறத்தில் வரிவரியாகக் கோடுகள் உள்ளதே, அவை எதற்காக அச்சிடப்படுகின்றன?**

*தா.பிரணவன், புன்னாலைக்கட்டுவன்*

அந்த வரிக்கோடுகளின் பெயர், பார்கோட் (Barcode). பேர்னார்ட் சில்வர் மற்றும் ஜோசப் உட்லாண்ட் என்கிற இரண்டு அமெரிக்கர்கள்தான் இன்றைய பார்கோட்களுக்கு முன்மாதிரியை உருவாக்கியவர்கள். கடையிலிருந்து வாடிக்கையாளர்கள் எடுத்துச் செல்லும் ஒரு பொருள் பற்றிய விவரங்களைத் தானாகக் குறித்துக்கொள்ளும் கருவியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கினார்கள். புற ஊதாக் கதிர்கள், தந்திகளில் பயன்படுத்தும் மோர்ஸ் கோடுகள், திரைப்படச்சுருளில் இருந்து ஒலியைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் எனப் பல வகைகளில் முயற்சிசெய்து, 1949ம் ஆண்டு ஒரு மாதிரியை உருவாக்கினார்கள். அது, ஒரே மையத்தைக்கொண்ட பல வட்டங்களாக இருந்தன. பின்னர் 196ம் ஆண்டில், என்பவர் கடந்து செல்லும் ரயில்கள் பற்றிய விவரங்களை தானாகப் பதிவு செய்யும் ஒரு தொழில்நுட்பத்தை டேவிட் காலின்ஸ் கண்டுபிடித்தார்.

12345 67890

இந்த இரண்டின் மேம்படுத்திய வடிவம்தான் இன்றைய பார்கோட்கள். நீங்கள் வாங்கிய ஒரு பொருளின் விலை, நிறை, பிராண்ட் பெயர், அது எப்போது தயாரிக்கப்பட்டது போன்ற விவரங்களை எளிதாகவும் விரைவாகவும் கண்டுபிடிக்க இந்த பார்கோட்கள் உதவுகின்றன. சில மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குத் தரும் நோட்டுகளிலும் இந்த பார்கோட் அச்சிடப்படுகிறது. அதன் மூலம், நோயாளி இதற்கு முன் சிகிச்சைக்கு வந்த திகதி உள்ளிட்ட விவரங்களை அறிந்துகொள்ளமுடியும். டேட்டா மட்ரிக்ஸ், 12 எண்களைக்கொண்ட ஹிறிசிகி, புகைப்படங்களோடு செய்திகளைக் காண உதவும் ஸிஸி கோட், ஸிஜீ கோட், புத்தகங்களின் தரத்தை உணர்த்தும் வகையான ISBN (International Standard Book Number) எனப் பல வகைகளில் இப்போது பார்கோட்கள் மேம்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்டாலின் VS அழகிரி

## 18 ஆண்டுகளுக்கு முன் மோதல் தொடங்கிய கதை!



18 ஆண்டுகளுக்கு முன் துவங்கி... நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவுக்கு வந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருந்த ஸ்டாலின் அழகிரி யுத்தம், தற்போது மீண்டும் துவங்கி யிருக்கிறது. தி.மு.க.வின் தலைவராக இருந்த கருணாநிதி மறைந்து ஒரு வாரம் கூட நிறைவு பெறாத நிலையில், மீண்டும் ஸ்டாலினுக்கு எதிரான தனது மோதலைத் துவங்கியிருக்கிறார் மு.க.அழகிரி.

கருணாநிதி நினைவிடத்தில் அஞ் சலி செலுத்த வந்த மு.க. அழகிரி, “தற்போதைய அரசியல் சூழல் குறித்த என் ஆதங்கம் முழுவதையும் அப்பாவிடம் கொட்டிவிட்டேன். கலைஞரின் உண்மையான, விசுவாச மிக்க தொண்டர்கள் என் பக்கம் இருக்கிறார்கள். என் ஆதங்கத்தை அவர்கள் உணர்வார்கள். இப்போது உங்களுக்குப் புரியாது. காலம் பதில் சொல்லும்“ எனப்பேசி பரபரப்பை உருவாக்கியிருக்கிறார். ஸ்டாலின் செயல்படாத தலைவ ராக இருப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டியிருக்கிறார். கட்சியில் உறுப்பின ராக இல்லாத அழகிரி, “கலைஞரின் விசுவாசமிக்க தொண்டர்கள் என் பக்கம் இருக்கிறார்கள்“ எனச் சொல்லியிருப்பதும், அது பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதும் ஆச்சரியம் தான்.

### அழகிரி நீக்கப்பட்டதற்கு காரணம் இதுதான்!

அழகிரி கட்சியிலிருந்து நீக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. “கலைஞரைத் தவிர வேறு யாரையும் நான் தலைவராக ஏற்க





மாட்டேன். கலைஞரே சொன்னாலும் ஏற்கமாட்டேன்“ என 2014 ஜனவரி மாதத்தில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி கொடுத்த மு.க.அழகிரி, “தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்தை அரசியல் தலைவராகவே நான் கருதவில்லை. அவருடன் சேராமல் தற்போது இருக்கும் கட்சிகளுடன் தி.மு.க. இணைந்து போட்டியிட வேண்டும்“ என்றார்.

தே.மு.தி.க.வுடன் கூட்டணிப் பேச்சை தி.மு.க. நடத்திக்கொண்டிருந்த நேரத்தில் அழகிரியின் இந்தப் பேட்டி பெரும் சிக்கலை ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டது. ஆனாலும் அழகிரியின் மீது உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலில் மதுரை மாநகர மாவட்ட தி.மு.க. முழுமையாகக் கலைக்கப்பட்டது. அதன்பின்னர் அழகிரியின் தீவிர ஆதரவாளர்கள் சிலர் அடுத்தடுத்து கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையையடுத்து, இருமுறை கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்றார் அழகிரி. ஒருமுறை கருணாநிதியைச் சந்திக்காமல் தயாளு அம்மாளை மட்டும் சந்தித்து விட்டு கோபமாகத் திரும்பினார். இரண்டாம் முறை கருணாநிதியைச் சந்தித்துப் பேசிவிட்டு திரும்பினார். ஆனால், அன்றைய தினமே கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டார் அழகிரி. தே.மு.தி.க. குறித்து அவர் வெளியிட்ட கருத்துகளே தற்காலிக நீக்கத்துக்குக் காரணம் என முதலில் சொல்லப்பட்டது.

### நீக்கத்துக்குக் கருணாநிதி சொன்ன காரணம்!

ஆனால் சில நாள்களுக்குப் பிறகு அழகிரி நீக்கப்பட்டதற்கு வேறு காரணம் ஒன்றைச் சொன்னார் கருணாநிதி. “அன்றைய தினம் அதிகாலை ஸ்டாலினைப் பற்றிப் புகார் கூறி, விரும்பத்தகாத, வெறுக்கத்தக்க வார்த்தைகளையெல்லாம் பேசி என்னைக் கொதிப்படைய வைத்தார். நினைத்தாலே என் நெஞ்சு வெடிக்கக்கூடியதும், இதயம் நின்று விடக் கூடியதுமான ஒரு சொல்லையும் அவர் சொன்னார். ஸ்டாலின் இன்னும் மூன்று, நான்கு மாதங்களுக்குள் செத்து விடுவார் என்று உரத்த குரலில் என்னிடம் சொன்னார். எந்தத் தகப்பனாலும் இதுபோன்ற வார்த்தைகளைத் தாங்கிக்கொள்ள முடியுமா. கட்சித் தலைவனாக இருக்கிறவன் என்ற முறையில் அதைத் தாங்கிக் கொண்டேன்“ எனத் தழுதழுத்த குரலில் கருணாநிதி கூறியது அப்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதன் பின்னரும் தி.மு.க.வை விமர்சிக்க அழகிரி தயங்கவில்லை. கட்சிக்கு எதிராக அவர் பேசியதும், நடந்துகொண்டதும் தொடர, 2014 ம் ஆண்டு மார்ச் மாதம் 25ம் திகதி தி.மு.க.விலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டார் அழகிரி. “நன்றி மறந்தவர்கள் யாராக இருந்தாலும்; அவர்கள் என் மகனாக இருந்தாலும், மனைவியாக இருந்தாலும் மன்னிக்க மாட்டேன். தி.மு.க.வின் கொள்கையும், கட்சியின் கோட்பாடுமே எனக்கு முக்கியம்“ என அழகிரி கட்சியிலிருந்து நீக்கப்பட்ட மறுதினம் சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஆவேசமாகப் பேசினார் மு.கருணாநிதி.

### நிரந்தரமாக நீக்கப்பட்டதன் பின்னணி!

கருணாநிதியின் கோபத்துக்கு நியாயமான காரணங்கள் இருக்கவே செய்தது. கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்புகளிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட நிலையில், அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங், பி.ஜே.பி. தலைவர் ராஜ்நாத்சிங் ஆகியோரை அழகிரி நேரில் சென்று சந்தித்தார். தி.மு.க.வுக்கு எதிராக தொடர்ச்சியாகப் பேசியும் வந்தார். நாடாளுமன்ற தேர்தல் நெருங்கி வந்த நிலையில், தி.மு.க.வுக்கு எதிரணியில் இருந்த ம.தி.மு.க., காங்கிரஸ், பி.ஜே.பி., பா.ம.க. நிர்வாகிகளையும், வேட்பாளர்களையும் அழகிரி சந்தித்துப் பேசினார். தி.மு.க.வை கடுமையாக விமர்சித்து வந்த வைகோவை அழகிரி அடுத்தடுத்து சந்தித்துப் பேசியது தி.மு.க.வில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. காங்கிரஸ் வேட்பாளர்கள் ஜே.எம். ஆருண், வசந்தகுமார் பா.ஜ.க. வேட்பாளர் ஹெச்.ராஜா உள்ளிட்ட தி.மு.க.வை எதிர்த்து களம்கண்ட பல வேட்பாளர்கள் அழகிரியைச் சந்தித்து ஆதரவு கோரினர். இவையெல்லாம், தி.மு.க. தலைமையைக் கோபம் கொள்ளச் செய்தன. இதன் காரணமாகவே அவர் கட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டார்.

அதன் பின்னரும் வாய்ப்பு கிடைக் கும் போதெல்லாம் தி.மு.க.வையும், ஸ்டாலினையும் விமர்சிக்க அழகிரி தயங்கவில்லை. 2016 சட்டமன்றத் தேர்தலின் போது, “திமுக காங்கிரஸ் கூட்டணி பொருந்தாத கூட்டணி. தி.மு.க. எந்தக் கட்சியோடு கூட்டணி வைத்தாலும்; பலம்மிக்க அதிமுகவை வீழ்த்த முடியாது“ எனக் கூறினார். ஆறாவது முறை கருணாநிதி முதல்வராவார் என தி.மு.க.வினர் பிரசாரம் செய்து வந்த நிலையில், அதற்கு எதிராக அழகிரி பேசியது கருணாநிதிக்குஎதிராகப் பேசியதாகவே கருதப்பட்டது.

### 18 ஆண்டுக்கு முன் துவங்கிய மோதல்

அழகிரி ஸ்டாலின் மோதல் என்பது தற்போது உருவானதல்ல. அது பல ஆண்டுகளுக்கு முன்னரே உருவானது. மோதலுக்கான விதை எப்போது போடப்பட்டது என்பது தெரியவில்லை. முதல் மோதல் உருவாகி 18 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 1981 ம் ஆண்டு, தனது மூத்த மகனான அழகிரியைக் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான முரசொலியின் மதுரைப் பதிப்பை கவனித்துக்கொள்ள மதுரை அனுப்பினார். ஆனால், சில காரணங்களால் மதுரைப் பதிப்பு நிறுத்தப்பட... மீண்டும் சென்னை திரும்பினார். ஆனால் அடுத்த இரு ஆண்டுகளில் மீண்டும் மதுரைக்கே அனுப்பி வைக்கப்பட்டார் அழகிரி. அதுவரை அரசியலில் முழுமையாகக் கவனம் செலுத்தாத அழகிரி, 1989ம் ஆண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த உடன் அதிகாரம் செலுத்தத் துவங்கினார். தென்மா வட்டங்களில் தனக்கென ஆதரவு வட்டத்தை உருவாக்க முற்பட்டார்.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TILKO

## JAFFNA CITY HOTEL

TILKO hotels










**Mob : 077 780 393, 0777 696 443**

Address: 70/6, K.K.S. Road, Jaffna, Sri Lanka  Tel: 021 222 5969, Fax: 021 222 7291  e-mail: tilko.tilak@gmail.com  Web: www.cityhoteljaffna.com

TOPAZ Mall (Pvt) Ltd.

NO 1 TOPAZ

TOPAZ

No.01 Shop in Jaffna



திருமண பட்டுச்சேலை
காஞ்சி புரம் பட்டுச் சேலை
சுடிதார் மற்றீரியல்கள்
மற்றும் ரெடிமேட்
ஆடைகள்

ஆண்களிற்கான சூட்
மற்றும் ரெடிமேட்
ஆடைகள்

மிஸ் சுட்டி மிஸ்
பியூட்டியாக வலம்
வரும் சுட்டிச்
சிறுமியர்களிற்கான
பஷன் ஆடைகள்

We are Specialist in
Wedding suits, Wedding Sarees , Party Sarees, Wedding Frocks, Party Frocks and all kinds of Items

| TOPAZ | TOPAZ TAILORING | TOPAZ MALL |
| --- | --- | --- |
| No 72, Grand Bazaar<br>Jaffna<br>Tel 021 222 4743<br>Fax 021 222 7645 | No 80/24, Kasthuriyar Road<br>Jaffna<br>Tel 021 222 4643 | No 195, Power House Road<br>Jaffna<br>Tel 021 222 4933<br>021 221 9933 |

Email : topazagn@gmail.com

coustomer is king

இந்தப்பத்திரிகை நோர்தி மீடியா (பிறைவேற்) லிமிற்ற் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 19.08.2018 அன்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org